தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009



# தமிழ்நாடு இபேப்பர்.காம்
www. tamilnaduepaper.com



MLM SOFTWARE Company
- Binary MLM Plan
- Single Leg MLM Plan
- Autopool MLM Plan
- Unilevel MLM Plan
- Matrix MLM Plan
- Stairstep MLM Plan
- Party MLM Plan
- Board MLM Plan
- Generation MLM Plan

PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337



CHENNAI | Volume- 3 | Issue:183 | 18-01-2026 | ஞாயிற்றுக்கிழமை | Free E- Paper | சென்னை | மதுரை | கோவை | திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

18.01.2026 தை 4
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 6.35

திதி:
இன்று அதிகாலை 1.19 வரை சதுர்த்தசி பின்பு அமாவாசை.

நட்சத்திரம்:
இன்று காலை 11.35 வரை பூராடம் பின்பு உத்திராடம்

யோகம் :
இன்று இரவு 10.38 வரை ஹர்ஷனம் பின்பு வஜ்ரம்.

கரணம் :
இன்று அதிகாலை 1.19 வரை சகுனி பின்பு பிற்பகல் 1.55 வரை சதுஷ்பாதம் பின்பு நாகவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 11.35 வரை சித்த யோகம் பின்பு அமிர்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று காலை 11.35 வரை ரோகிணி பின்பு மிருகசீரிடம்.

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 3.30 – 4.30.
இராகு காலம்
மாலை 4.30 – 6.00.
எமகண்டம்
பிற்பகல் 12.00 – 1.30.

குளிகை
பிற்பகல் 3.00 – 4.30.

இன்று தை அமாவாசை நாள்.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# ஜல்லிக்கட்டில் சிறந்த மாடுபிடி வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அரசு வேலை

## முதல்வர் அறிவிப்பு



**மதுரை, ஜன.18:** பாரம்பரியமிக்க ஜல்லிக்கட்டு போட்டிகளில் அதிகக் காளைகளை அடக்கிய சிறந்த வீரர்களுக்கு அரசுப் பணி வழங்கப்படும் என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிகளை இன்று (ஜன.17) காலையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார்.

தொடர்ந்து, சிறந்த மாடுபிடி வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கால்நடை பராமரிப்புத்துறையில் அரசு வேலை வழங்கப்படும். அலங்காநல்லூரில் ரூ.2 கோடியில் ஜல்லிக்கட்டு காளைகளுக்கான பயிற்சி மற்றும் உயர்தர சிகிச்சை மையம் அமைக்கப்படும் என 2 முக்கிய அறிவிப்புகளை அறிவித்தார்.

தொன்மைநகரமான மதுரையில் தை மாதப் பிறப்பு பொங்கல் விழாவை முன்னிட்டு தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிகள் தொடங்கும். தை மாதம் 1-ம் தேதி (ஜன.15) மதுரை அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு தொடங்கும். 2-ம்நாள் மதுரை மாவட்டம் பாலமேடு ஜல்லிக்கட்டு நடைபெறும். 3-ம் நாள் உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூரில் நடைபெறும்.

அதன்படி உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை நடத்த தமிழக அரசு சார்பில் மதுரை மாவட்ட நிர்வாகம் மற்றும் கிராம கமிட்டி சார்பில் விழா ஏற்பாடுகள் நடைபெற்றது.

தொடர்ந்து இன்று காலை 7 மணியளவில் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் தொடங்கியது. அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் ஆட்சியர் பிரவீன்குமார் முன்னிலையில் மாடுபிடி வீரர்கள் உறுதிமொழி எடுத்தனர்.

இதில் வெற்றி பெறும் மாடுபிடி வீரர்கள், சிறந்த காளைகளுக்கும் ரூ. 2 கோடி மதிப்புள்ள பரிசுகள் வழங்கப்படுகின்றன. சிறந்த மாடுபிடி வீரருக்கு தமிழக முதல்வர் சார்பில் கார் பரிசும், சிறந்த காளைகளுக்கு துணை முதல்வர் சார்பில் டிராக்டர் பரிசும் வழங்கப்படுகின்றன.

பாலமேட்டில் நேற்று நடந்த ஜல்லிக்கட்டு போட்டிகளை துணை முதல்வர் உதயநிதி தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து இன்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடிக்கு செல்லும் வழியில் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிகளை பார்வையிட வருகை தந்தார். மதுரையிலிருந்து அலங்காநல்லூர் செல்லும் வழி நெடுகிலும் திமுகவினர் திரண்டு வந்து வரவேற்பு அளித்தனர்.

அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிகளை காண தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காலை 11.05 மணிக்கு வருகை தந்தார். அவருடன் அமைச்சர்கள் பி.மூர்த்தி, கே.என்.நேரு, பழனிவேல் தியாகராஜன், தங்கம் தென்னரசு, சாத்தூர் ராமச்சந்திரன், எம்பிக்கள் சு.வெங்கடேசன், தங்கத்தமிழ்ச்செல்வன் ஆகியோர் பங்கேற்றனர். பின்பு ஜல்லிக்கட்டு போட்டிகளை ஆர்வமுடன் பார்வையிட்டனர்.

களத்தில் நின்று களமாடிய காளையின் உரிமையாளர் திருச்சி முருகானந்தம், புதுக்கோட்டை மாவட்டம் கைக்குறிச்சி தமிழ்ச்செல்வன், வெளிச்சநத்தம் போலீஸ் சத்யா ஆகியோருக்கு தங்க மோதிரம் பரிசு வழங்கினார்.

பின்னர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டு பேசினார். அப்போது அவர் பேசுகையில், "அனைவருக்கும் அன்பான வணக்கம். எல்லோருக்கும் பொங்கல் புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவிக்க விரும்புகின்றேன். மதுரை மண் வீரம் விளைந்த மண். வீர விளையாட்டான உலகப்புகழ் பெற்ற அலங்கநல்லூர் பார்க்கும்போது நமக்கு வீரம் வருகிறது.

இதில் காளைகளை அடக்கும் காளையர்களை பார்க்கும்போது தமிழ் மண்ணுக்கே பெருமையாக இருக்கிறது. திராவிட மாடல் ஆட்சியில் சங்கம் வளர்த்த மதுரையில் அறிவுக்காக கலைஞர் நூற்றாண்டு நூலகம், தமிழர்களின் அடையாளமான வீர விளையாட்டுக்கு கலைஞர் ஏறுதழுவுதல் அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது மிகப்பெரிய சாதனையாகும்.

இப்போது ஜல்லிக்கட்டு போட்டியை ஒட்டி முதல்வராக சிலவற்றை அறிவிக்க வேண்டும். அப்படி அறிவித்தால்தான் எனக்கு திருப்தியாக இருக்கும். அந்த வகையில் முக்கியமான 2 அறிவிப்புகளை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

பாரம்பரிய ஜல்லிக்கட்டு விளையாட்டுப் போட்டிகளில் அதிக காளைகளை அடக்கி சிறந்து விளங்கும் வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில கால்நடை பராமரிப்புத் துறையில் பணி வழங்கப்படும்.

மேலும், உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு காளைகளுக்கான ரூ.2 கோடி மதிப்பில் சிறந்த பயிற்சி மற்றும் உயர்தர சிகிச்சை மையம் அமைக்கப்படும். என்பதை அறிவிக்கிறன். இதில் உங்களுக்கு மகிழ்ச்சிதானே, அந்த மகிழ்ச்சியான அறிவிப்புகளை அறிவித்த மகிழ்ச்சியோடு செல்கிறேன், என்றார். பின்னர், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடிக்கு புறப்பட்டுச் சென்றார்.

# மீண்டும் ரூ.1.06 லட்சத்தை தாண்டியது தங்கம் விலை!

**சென்னை, ஜன.18:** சென்னையில் தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.400 உயர்ந்து, ரூ.1 லட்சத்து 6 ஆயிரத்து 240-க்கு விற்கப்படுகிறது.

சர்வதேச பொருளாதாரச் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

அந்த வகையில், டிச.15-ல் ஒரு பவுன் தங்கம் ரூ.1 லட்சத்து 120-க்கு விற்கப்பட்டது. இதன் பிறகு, தங்கம் விலை படிப்படியாக உயர்ந்து வந்தது. டிச.27-ல் ஒரு பவுன் தங்கம் ரூ.1 லட்சத்து 4 ஆயிரத்து 800 ஆக உயர்ந்து, வரலாறு காணாத உச்சத்தை தொட்டது.

இதன்பிறகு, தங்கம் விலை ஏற்ற இறக்கமாக இருந்து வந்த நிலையில், ஜன.13-ல் ரூ.1 லட்சத்து 5 ஆயிரத்து 360-ஆகவும், ஜன.14-ல் ரூ.1 லட்சத்து 6 ஆயிரத்து 240 ஆகவும் என அடுத்தடுத்து உயர்ந்து, புதிய உச்சத்தை பதிவு செய்தது. ஜன.15-ம் தேதி சற்று விலை உயர்ந்திருந்தது. நேற்று பவுனுக்கு ரூ.480 குறைந் திருந்தது.

இந்நிலையில், சென்னையில் தங்கத்தின் விலை இன்று பவுனுக்கு ரூ.400 உயர்ந்து, ரூ.1 லட்சத்து 6 ஆயிரத்து 240-க்கு விற்கப்பட்டது.

ஒரு கிராம் தங்கம் ரூ.50 குறைந்து ரூ.13,280 ஆக இருந்தது. 24 காரட் தங்கம் ரூ.1 லட்சத்து 15 ஆயிரத்து 896-க்கு விற்கப்பட்டது.

இதுபோல, வெள்ளி விலையும் அதிரடியாக உயர்ந்தது. வெள்ளி கிராமுக்கு ரூ.4 உயர்ந்து, ரூ.310 ஆகவும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.4 ஆயிரம் உயர்ந்து, ரூ.3 லட்சத்து 10 ஆயிரமாக இருந்தது.

# வந்தே பாரத் படுக்கை வசதி ரயில் சேவையை தொடக்கி வைத்தார் பிரதமர் மோடி!




**கொல்கத்தா, ஜன.18:** நாட்டின் முதல், படுக்கை வசதியுடன் கூடிய வந்தே பாரத் ரயிலை மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று கொடியசைத்துத் தொடக்கி வைத்துள்ளார்.

கொல்கத்தாவின் ஹௌரா ரயில் நிலையத்தில் இருந்து குவாஹாட்டிக்கு இயக்கப்படும் இந்த ரயிலை பிரதமர் மோடி கொடியசைத்துத் தொடக்கி வைத்து அதில் பயணம் செய்தார். அப்போது ரயிலில் பயணம் செய்த மாணவர்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார். இந்த ரயிலின் மூலம் பயண நேரம் 2.5 மணி நேரமாகக் குறையும்.

தொடர்ந்து, குவாஹாட்டியிலிருந்து ஹௌராவுக்கு இயக்கப்படும் ரயிலை காணொலி வாயிலாக கொடியசைத்துத் தொடக்கி வைத்தார்.

விமான சேவைக்கு நிகராக, இந்த வந்தேபாரத் படுக்கை வசதி ரயிலில் பயணித்த அனுபவம் இருக்கும் என்றும், நீண்ட தொலைவு பயணத்தை பாதுகாப்பானதாகவும், அதிவேகமாகவும் மாற்றும் என்றும் பிரதமர் அலுவலக அறிக்கை தெரிவிக்கிறது.

மத்திய பாஜக அரசின் முக்கிய சாதனைகளில் ஒன்றாக வந்தே பாரத் ரயில் முன்னிறுத்தப்படுகிறது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இப்போது இருக்கை வசதி கொண்ட வந்தே பாரத் இயக்கப்படுகிறது. பயண நேரத்தை வெகுவாகக் குறைத்துள்ளதால் இந்த ரயிலுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பும் உள்ளது.

இந்த நிலையில், பொங்கல் திருநாளில், முதல் வந்தே பாரத் படுக்கை வசதி ரயில் இயக்கம் தொடக்கி வைக்கப்பட்டுள்ளது.

## பாஜக ஆட்சிக்கு வந்தால்தான் வளர்ச்சி: பிரதமர் மோடி

மேற்கு வங்கத்தின் மிகப்பெரிய சவாலான ஊடுருவலைத் தடுக்க, திரிணமூல் காங்கிரஸ் ஒருபோதும் நடவடிக்கை எடுக்காது.

திரிணமூல் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டு, பாஜக ஆட்சி வரும்போதுதான் மேற்கு வங்கத்தின் வளர்ச்சி சாத்தியமாகும்.

வரவிருக்கும் பேரவைத் தேர்தலில் பாஜகவுக்கு பெரும்பான்மை வழங்கப்படும் என்று உறுதியாக நம்புகிறேன். கேரளத்தின் திருவனந்தபுரத்தில் பாஜக மேயர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒரு காலத்தில் வெற்றிபெற முடியாத பகுதிகளிலும்கூட பாஜக மீதான ஆதரவு அதிகரித்து வருகிறது" என்று தெரிவித்தார்.

கடந்த 1-ஆம் தேதி ரயிலின் சோதனை ஓட்டம் நடைபெற்றது. அப்போது அதிகபட்ச வேகமான 180 கி.மீ. வேகத்தில் ரயில் இயக்கப்பட்டது. கொல்கத்தாவின் ஹௌரா ரயில் நிலையத்தில் இருந்து குவாஹாட்டிக்கு இந்த ரயில் இயக்கப்படுகிறது.

வந்தே பாரத் படுக்கை வசதி ரயிலைத் தொடர்ந்து மால்டா-காமாக்யா இடையிலான அம்ருத் பாரத் ரயில் சேவையையும் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்து பொதுக் கூட்டத்தில் பங்கேற்கிறார். இந்த ரயில் சேவைகள் மூலம் தெற்கு - வடக்கு வங்கப் பகுதிகளுக்கு இடையிலான இணைப்பு மேலும் வலுப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொல்கத்தாவின் ஹௌரா ரயில் நிலையத்தில் இருந்து குவாஹாட்டிக்கு இயக்கப்படும் வந்தே பாரத் படுக்கை வசதி ரயிலின் கட்டணம் இரு நகரங்களுக்கு இடையிலான விமானக் கட்டணத்தைவிடக் குறைவாகவே இருக்கும் என்பதால் இதற்கு அதிக எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

966 கி.மீ. தொலைவுக்கு இயக்கப்படும் இந்த ரயிலில் பயணக் கட்டணம் உணவுடன் சேர்த்து குளிர்சாதன 3-ஆம் வகுப்புக்கு ரூ.2,300 வரையிலும், குளிர்சாதன 2-ஆம் வகுப்புக்கு ரூ.3,000 வரையிலும், குளிர்சாதன முதல் வகுப்புக்கு ரூ.3,600 வரையிலும் இருக்கும். நடுத்தர மக்களைக் கருத்தில்கொண்டு கட்டணம் இறுதி செய்யப்படும். இரு நகரங்கள் இடையே விமானக் கட்டணம் ரூ.6,000 முதல் ரூ.8,000 வரை உள்ளது.

இதில் உள்ள 16 பெட்டிகளில் 823 பயணிகள் செல்ல முடியும். அதிகபட்சமாக 180 கி.மீ. வேகத்தில் செல்லும். எனினும் 120 முதல் 130 கி.மீ. வேகத்தில் இயக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ரயில்வே வரலாற்றில் இது ஒரு முக்கிய சாதனையாகக் கருதப்படுகிறது.நிகழாண்டு இறுதிக்குள் படுக்கைவசதியுடன் கூடிய வந்தே பாரத் ரயில்கள் 12 என்ற எண்ணிக்கையில் தயாராகிவிடும். தொடர்ந்து நாட்டின் பல்வேறு நகரங்களுக்கு இந்த ரயில் அறிமுகப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# "அரசியலில் அழியாத ஓர் ஆளுமை எம்ஜிஆர்!"

## அமித் ஷா

**புதுடில்லி, ஜன.18:** "ஓர் அரசியல்வாதியாகவும், கலாச்சார சின்னமாகவும், திரைப்படத் துறையிலும், அரசியலிலும் அழியாத ஓர் ஆளுமையாக எம்ஜிஆர் திகழ்ந்துள்ளார்" என உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார்.

தமிழகத்தின் முன்னாள் முதல்வரும், அதிமுக நிறுவனருமான எம்ஜிஆரின் 109-வது பிறந்த நாள் விழா இன்று கொண்டாடப்படுகிறது. இதையொட்டி அரசியல் கட்சி தலைவர்கள் அவருக்கு புகழஞ்சலி செலுத்தி வருகின்றனர். எம்ஜிஆர் தமிழ் சினிமா, கலாச்சாரம் மற்றும் பெருமையை புதிய உயரங்களுக்கு அழைத்துச் சென்றுள்ளார். அவர் தொடர்ந்து நம் இதயங்களில் வாழ்வார், மேலும் பல தலைமுறை இந்தியர்கள் இதயத்திலும் வீற்றிருப்பார்' எனத் தெரிவித்துள்ளார்.


ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
- Public Notice
- Loss of Share
- Legal Notice
- Merger
- Tender Notice
- Acquisition
- Society Notice
- AFR, UFR, etc.

for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

SEND AN EMAIL WITH Hi TO tamilnaduepaper@gmail.com
RECEIVE OUR DAILY NEWSPAPERS & MAGAZINES

# திருக்குறள் குறள்-503

**அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு**



அரிய நூல்களைத்
கற்றுத் தேர்ந்து குற்றம்
அற்றவரிடத்திலும்
ஆராய்ந்துப் பார்க்குமிடத்தில்
அறியாமை இல்லாதிருப்பது
அருமையாகும்.

## சிந்திக்க ஒரு நொடி



தேவையற்ற
விஷயங்களை
சிந்தித்துக் கொண்டே
இருந்தால்
தேவை உள்ள
விஷயங்களை சிந்திக்க
நேரம் இருக்காது


**ராஜகோபாலன்.J**
சென்னை 18

## அண்ணாமலையார் மருவூடலுக்குப் பின் கிரிவலம்



திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் மருவூடல் உற்சவம் நடந்த பின்னர் அலங்காரத்துடன் சுவாமி கிரிவலம் 14..கி.மீ சுற்றி வந்தது. கிரிவலம் வரும் வழியெல்லாம் பக்தர்கள் தீபாரதனையுடன் தேங்காய் உடைத்து ஏராளமான பக்தர்கள் கிரிவலத்திலும் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## தை மாதம் முதல் வெள்ளிக்கிழமையை முன்னிட்டு குங்குமம் அர்ச்சனை சிறப்பு வழிபாடு



திருப்பதி ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் தை மாதம் முதல் வெள்ளிக்கிழமையை முன்னிட்டு ஆர்ய வைஸ்ய பெண்கள் அனைவரும் கலந்து கொண்டு குங்குமம் அர்ச்சனை செய்து, பாட்டுக்கள் பாடி, வேத மந்திரங்கள் ஒலிக்க பூஜைகள் வெகு சிறப்பாக நடைபெற்றது. அனைவருக்கும் மஞ்சள், குங்குமம், தாலிக்கயிறு, வளையல், சாமி படம், பிரசாதங்களும் வழங்கப்பட்டது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## எம்.ஜி. இராமச்சந்திரனின் 109 ஆவது பிறந்த தினம்



மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரனின் 109 ஆவது பிறந்த தினம். மதுரை கேகே நகரில் அமைந்துள்ள அவரது திருவுருவ சிலைக்கு மதுரை சமூக ஆர்வலர் ஓகே சிவா மாலை அணிவித்தார்

# ஜல்லிக்கட்டில் காளைகளை அடக்கிய இளைஞர்களை முதல்வர் ஸ்டாலின் வாழ்த்தினார்





மதுரை அலங்காநல்லூரில் நேற்று நடந்த ஜல்லிக்கட்டில் காளைகளை அடக்கிய இளைஞர்களை முதல்வர் ஸ்டாலின் வாழ்த்தினார். அருகில் அமைச்சர்கள் நேரு, மூர்த்தி, கேகேஎஸ்எஸ்ஆர் ராமச்சந்திரன் உள்ளனர்.

# மாற்றுக்கட்சியினர் திமுகவில் இணைந்தனர்




பரமக்குடியில் நேற்று முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் மாற்றுக்கட்சியினர் திமுகவில் இணைந்தனர்.

## சுதந்திர போராட்ட காலத்தில் தியாகி ஜீவாவுக்கு ரூ.3 கோடியில் நினைவரங்கு



திருப்பத்தூர் அருகே சிறாவயலில் சுதந்திர போராட்ட காலத்தில் தியாகி ஜீவாவை காந்தியடிகள் சந்தித்தார். அதன் நினைவாக அங்கு செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் ஜீவாவுக்கு ரூ.3 கோடியில் நினைவரங்கு அமைக்கப்படுகிறது. இந்த மாத இறுதியில் இதை முதல்வர் திறந்துவைக்கிறார். நினைவரங்கை அமைச்சர்கள் பெரியகருப்பன், சாமிநாதன் ஆகியோர் நேற்று ஆய்வு செய்தனர்.

## தை மாதம் முதல் வெள்ளிக்கிழமை சிறப்பு வழிபாடு



**திருவண்ணாமலை, ஜன.18;**
திருவண்ணாமலை ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் தை மாத வெள்ளிக்கிழமையை முன்னிட்டு கணேஷ் ஐயர் அவர்களால் மூலவர்க்கும் உற்சவருக்கும் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியம் இசைக்க உற்சவர் மூன்று முறை ஆலயம் சுற்றி வந்தது. பின்னர் வாசவி அம்மன் உற்சவர் ஊஞ்சல் சேவையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பாட்டுக்கள் பாடி, வேத மந்திரங்கள் ஒலிக்க பிரசாதம் நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. உபயதாரர் :லட்சுமி அம்மாள் குடும்பத்தினர் திருவண்ணாமலை தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# திருவத்தி மலையில் பொங்கல் விழா



**விழுப்புரம், ஜன.18:**
விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்த திருவத்திமலை வெங்கடாஜலபதி திருக்கோவிலில் கானும் பொங்கல் திருநாளை முன்னிட்டு இன்று காலை மூலவருக்கு சந்தனகாப்பு அலங்காரம் அபிஷேகம் நடைபெற்றது மதியம் பொதுமக்கள் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

**அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## பிரதமர் மோடி 23-ம் தேதி தமிழ்நாடு வருகிறார்



பிரதமர் மோடி வருகின்ற 23-ம் தேதி மதுராந்தகம் பகுதியில் பேசும் மாநாட்டு ஏற்பாடுகளை மத்திய இணை மந்திரி முருகன், பாஜக மாநில அமைப்புச் செயலாளர் கேசவ விநாயகம், பொன்ராதாகிருஷ்ணன், மாநிலசெயலாளர் வினோஜ் செல்வம் மற்றும் நிர்வாகிகள் பார்வையிட்டனர்.

## பொங்கல் விழா சிறப்பு பாட்டு மன்றம்



திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற பொங்கல் விழா சிறப்பு பாட்டு மன்றத்தில் பங்கேற்றவர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா பரிசு வழங்கினார்.

## எம்ஜிஆர் சிலைக்கு ஓபிஎஸ் மாலை



சென்னையில் எம்ஜிஆர் சிலைக்கு முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

# மாணவர் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி



திருமயம் தமிழ் மன்றத்தின் சார்பில் திருமயம் அறிவுத் திருக்கோயிலில் நேற்று 17/01/2026 இல் திருவள்ளுவர் தினம் விழா கொண்டாடப்பட்டது. திருமயம் தமிழ் மன்ற நிறுவனர். சுப்பிரமணியன் வரவேற்புரை நிகழ்த்தினார் .அறிவுத் திருக்கோயில் தலைவர் சிவகாமி அவர்கள் தலைமை உரையாற்றினார். இவ்விழாவில் மாணவர் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி நடைபெற்றது.

## நேர்த்திக் கடன்



உடுமலை அருகே சோமவாரபட்டியில் உள்ள ஆல்கொண்டமால் கோயிலில் நேற்று விவசாயிகள் தங்கள் கால்நடைகள் நலம் வேண்டி பசு, ஆடு, மாடு, கோழி, நாய், பூனை உள்ளிட்ட வீட்டு விலங்குகளின் உருவம் கொண்ட மண் உருவார பொம்மைகளை நேர்த்திக் கடனாக செலுத்தினர். இந்த பொம்மைகள், மலைபோல் குவிந்து கிடந்தன.

## நந்திகேச பெருமானுக்கும் சிறப்பு அபிஷேகங்கள்



**திருவண்ணாமலை, ஜன.18:**
திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் மாட்டுப்பொங்கல், தை மாதம் தேய்பிறை பிரதோஷத்தை முன்னிட்டு உற்சவர், மூலவர், வீரட்டேஸ்வரர், நந்திகேச பெருமானுக்கும் சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர்,சந்தனம்,விபூதி, இளநீர்,பன்னீர், வெட்டிவேர் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்காரங்கள், காய் கனிகளுடன், பழங்களுடன் உற்சவருக்கு எலுமிச்சம் பழம் மாலைகளுடன், வண்ண மலர் மாலைகளுடன் அலங்கரித்து வேத மந்திரங்கள் ஒலிக்க, சங்குகள் முழங்க, மேள தாளத்துடன் பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் நந்தி கேச பெருமானையும் வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## வேலூர் சிஎம்சியில் அமலாக்கத் துறை சோதனை

வேலூர், ஜன.18:

வேலூர் சிஎம்சி மருத்துவமனையில் வெள்ளிக்கிழமை அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். துப்பாக்கி ஏந்திய சிஐஎஸ்எஃப் வீரர்கள் துணையுடன் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. தோட்டப் பாளையத்தில் உள்ள மருத்துவர்கள் தங்கும் விடுதியிலும் அமலாக்கத் துறையினர் சோதனை நடத்தினர். பணப் பரிவர்த்தனை, மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங் கள் கொள்முதல் தொடர்பாக அமலாக்கத் துறை விசா ரணை நடத்துவதாக தகவல் வெளியாகி உள்ளது.

## நெல்லை-தாம்பரம் சிறப்பு ரயிலில் கூடுதல் பெட்டிகள் இணைப்பு

சென்னை, ஜன.18:

பொங்கல் பண்டிகை முடிந்து சென்னை திரும்புவோரின் வசதிக்காக நெல்லை-தாம்பரம் இடையே இயக்கப்படும் ஒரு வழி சிறப்பு ரயிலில் கூடுதலாக இரண்டு பெட்டிகள் இணைக்கப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. பொங்கல் விடுமுறைக்குப் பிறகு தென் மாவட்டங்களி லிருந்து சென்னை திரும்பும் பயணிகளின் கூட்டம் அலை மோதி வருவதை கருத்தில் கொண்டு, ஜனவரி 18 ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) திருநெல்வேலியிலிருந்து தாம்பரத் திற்கு ஒரு வழி சிறப்பு ரயில் (வண்டி எண் 06178) இயக்கப் படும் என அறிவிக்கப்பட்டது. இந்த ரயிலுக்கான முன்பதிவு தொடங்கிய நிலையில், அடுத்த சில நிமிடங்களி லேயே அனைத்து டிக்கெட்டுகளும் விற்றுத் தீர்ந்து விட்டன. இதனால் முன்பதிவு செய்ய முடியாத பயணிகள் ஏமாற்றமடைந்தனர். பயணிகளின் அதீத தேவையைக் கருத்தில் கொண்டு, இந்தச் சிறப்பு ரயிலில் கூடுதலாக இரண்டு ஸ்லீப்பர் வகுப்பு பெட்டிகளை இணைக்க தெற்கு ரயில்வே முடிவெடுத்துள்ளது. நெல்லையில் இருந்து ஜன.18 அன்று மதியம் 1 மணிக்கு புறப்பட்டு மதுரை, திண்டுக்கல், திருச்சி வழியாக செல்லும் இந்த சிறப்பு ரயில், மறுநாள் அதிகாலை 3 மணிக்கு தாம்பரம் வந்தடையும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## வடகிழக்குப் பருவமழை முடிவுக்கு வருகிறது

சென்னை, ஜன.18:

கேரள கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் லட்சத்தீவு மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவு வதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித் துள்ளது. இதனால் சனிக்கிழமை மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என வானிலை ஆய்வு மையம் அறி வித்துள்ளது. தமிழகம், புதுச்சேரி, காரைக்காலில் வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

## டிட்வா புயல் பாதிப்புக்கு ரூ.110 கோடி நிவாரணம் ஒதுக்கீடு

சென்னை, ஜன.18:

தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணையில், "டிட்வா புயல் காரணமாக பெய்த கனமழையால் தமிழகத்தின் 30 மாவட்டங்களில் 55,681 ஹெக்டேர் பரப்பளவில் பயிர்கள் 33 சத வீதத்திற்கும் மேல் சேதம் அடைந்த தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சேதத்தால் 83,526 விவசாயிகள் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே நடைமுறையில் உள்ள நிவாரண விதிமுறை களின்படி, 33 சதவீதத்திற்கும் மேல் பயிர்கள் சேதம் அடைந்தால், பருவ மழை சார்ந்த பயிர்களுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.8,500, பாசன பயிர்களுக்கு ஹெக்டேருக்கு ரூ.17,000 வழங்கப்பட்டு வந்தது. ஆனால் முதலமைச்சர் தலை மையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், 33 சதவீதத்திற்கும் மேல் பயிர் சேதம் ஏற்பட்ட அனைத்து பயிர்களுக்கும், பாசன வகையைப் பொருட்படுத்தாமல் ஒரு ஹெக்டேருக்கு ரூ.20,000 மானி யம் வழங்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. குறிப்பாக நெல் பயிருக்கு பாசனம் உள்ளதா, இல்லையா என்பதை கருத்தில் கொள்ளாமல் ஹெக்டேருக்கு ரூ.20,000 வழங்கப் படும். இந்த நிவாரண திட்டத்தின்கீழ், மாநில பேரிடர் நிவாரண நிதி மூலம் ரூ.94 கோடியே 28 லட்சத்து 62 ஆயி ரத்து 889, மாநில நிதியில் இருந்து ரூ.16 கோடியே 57 லட்சத்து 28 ஆயிரத்து 539 ஒதுக்கப்படுகிறது. இந்த நிதி மாவட்ட வாரியாக பயிர் சேதம் ஏற்பட்ட பரப்பளவு மற்றும் பாதிக்கப்பட்ட விவசாயி கள் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் பிரித்து வழங்கப்ப டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2.15 கோடி பேருக்கு அரசின் பொங்கல் பரிசு ரூ.6453.54 கோடி பட்டுவாடா: இந்திய வரலாற்றில் தனிப்பெரும் சாதனை

சென்னை, ஜன.18:

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:



தமிழ்நாடு முழுவதும் 2,22,91,710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு, இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர்களுக்கு கைகளில் பரிசாக ரொக்கமாக ரூ.3,000 வீதம் ரொக்கம் ரூ.6687.51 கோடி, ஒரு கிலோ அரிசியாக ஒரு கிலோ சர்க்கரையாக ஒரு முழு நீளக் கரும்பாக பொங்கல் பரிசுத் தொகுப்பு ரூ.248.66 கோடி மற்றும் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.668.12 கோடி செலவில் வேட்டி சேலை மொத்தம் ரூ.7604.29 கோடி செலவில் பொங்கல் பரிசுத் தொகுப்பு. எண்கள் பெரிது, ஆனால் மக்கள் மகிழ்ச்சி அதைவிட பெரிது!

கரும்பு விவசாயிகளிடமிருந்து தரம் பார்த்து கொள்முதல் செய்வதில் இத்துறை பணியாளர்கள் பொறுப்புணர்வுடன் பணிபுரிந்தார்கள். உழைப்பின் பலன் உழைப்பாளருக்கே! இந்த டிஜிட்டல் மயமான காலகட்டத்தில் அனைவருக்கும் பொங்கல் பரிசு தொகை ரொக்கமாக வழங்கிட கூட்டுறவுத் துறையின் சிறப்பான திட்டமிடல் மற்றும் தொய்வில்லாமலும், விரைவாக குறைந்த காலத்தில் வழங்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை பிற தேசிய வங்கிகள் செய்ய முடியாததை, கூட்டுறவு வங்கி திறம்பட செய்து சாதித்துள்ளது. இந்தியாவில் எந்த வங்கியும் செய்ய முடியாததை தமிழக கூட்டுறவுத் துறை செய்து முடித்தது இதுவரை வரலாற்று சாதனை. சவால்கள் இருந்தன. காலம் குறைந்தது, ஆனால் மக்கள் மகிழ்ச்சியே முதல்வரின் மன மகிழ்ச்சி. இத்துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள், உரிய பணிகளை இரவு பகலாக சிரமேற்கொண்டு, தங்கு தடைகளின்றி, மக்களின் நன்மை கருதியும், அவர்களது மன மகிழ் சார்ந்து, பொங்கல் தொகுப்பு 2026 அறிவிக்கப்பட்ட ஜனவரி 4 அன்று முதல் பொங்கல் தொகுப்பு துவக்கப்பட்ட ஜனவரி 8ம் நாளன்றுக்குள் மிக மிக குறுகிய நாட்களுக்குள் பணிகளை செவ்வனவே முடித்தது, மகிழ்ச்சியும் பாராட்டுதலுக்குரியது என்றார்.

## "மது விற்பதில் மட்டுமே தி.மு.க. அரசு சாதனை": அன்புமணி ராமதாஸ் கண்டனம்

சென்னை, ஜன.18:

"போகிப் பண்டிகை நாளில் ரூ.217 கோடிக்கும், பொங்கல் நாளில் ரூ.301 கோடிக்கும் மது விற்பனையாகியிருப்பது மக்களுக்கு மதுவைப் புகட்டுவதில் மட்டும் தான் தி.மு.க. அரசு சாதனை படைக்கிறது" என்று அன்புமணி ராமதாஸ் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

"தமிழ்நாட்டில் பொங்கல், போகிப்பண்டிகை ஆகிய இரு நாள்களில், டாஸ்மாக் வாயிலாக மட்டும் ரூ.518 கோடிக்கு மது விற்பனையாகியிருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. மக்கள் நலனுக்காக துரும்பைக் கூட அசைக்காத தி.மு.க. அரசு, ஆண்டுக்கு ஆண்டு மக்களை மேலும், மேலும் குடிகாரர்களாக்கி மது வணிகத்தைப் பெருக்குவதில் மட்டும் தான் வெற்றி பெற்றிருக்கிறது. இது சாதனை அல்ல, வேதனை. போகிப் பண்டிகை நாளில் ரூ.217 கோடிக்கும், பொங்கல் நாளில் ரூ.301 கோடிக்கும் மது விற்பனையாகியிருப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த ஆண்டில் ரூ.454 கோடிக்கு மது விற்பனையாகிருந்த நிலையில், நடப்பாண்டில் அதை விட 14.10% அதிகம் ஆகும். தமிழ்நாட்டின் பொருளாதாரம் கடந்த ஆண்டில் 11.19% அளவுக்கு வளர்ச்சியடைந்த நிலையில், அதை விட அதிகமாக மது வணிகம் வளர்ச்சியடைந்திருக்கிறது. மக்களுக்கு மதுவைப் புகட்டுவதில் மட்டும் தான் திமுக அரசு சாதனை படைக்கிறது. கடந்த ஆண்டு பொங்கல் திருநாளின் போது போது 4 நாட்களில் ரூ.725 கோடிக்கு மது விற்பனையான நிலையில், நடப்பாண்டில் நாளை வரையிலான 4 நாட்களில் மது வணிகம் ரூ.900 கோடியைத் தாண்டும் என்று கூறப்படுகிறது. இவற்றையெல்லாம் பார்க்கும் போது பொங்கல் திருநாளையொட்டி பொங்கல் பரிசாக மக்களுக்கு வழங்கப்பட்ட ரூ.6 ஆயிரம் கோடியையும் இந்த மாதத்திலேயே திரும்பவும் வசூலித்து விட இலக்கு நிர்ணயித்து திமுக அரசு செயல்படுகிறதோ என்ற எண்ணம் தான் எழுகிறது. பொங்கல் திருநாள் மது வணிகத்தில் அதிர்ச்சியளிக்கும் உண்மை என்னவென்றால், மனமகிழ் மன்றங்களின் மூலம் ரூ.82.59 கோடிக்கு மது விற்பனையாகியிருக்கிறது என்பது தான். இது மதுக்கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்ட ரூ.435.41 கோடி மதுவுடன் ஒப்பிடும் போது 19% ஆகும். திமுக ஆட்சிக்கு வந்த ஐந்தாண்டுகளில் 500 மதுக்கடைகளை, அதாவது 9% மதுக்கடைகளை மூடிய திமுக அரசு, 19% கூடுதலாக மது வணிகம் செய்யும் அளவுக்கு மனமகிழ் மன்றங்களைத் திறந்து மதுவை விற்பனை செய்திருப்பது உறுதியாகியிருக்கிறது.

மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு எந்த நிலையிலும் மதுவிலக்கை நோக்கி பயணிக்கவில்லை, மதுப் பெருக்கத்தை நோக்கித் தான் பயணிக்கிறது என்பதற்கு இதைத் தவிர வேறு சான்றுகள் தேவையில்லை. இவ்வாறு அன்புமணி கூறியுள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.

## பெண் துப்புரவு பணியாளரின் நேர்மை: லலிதா ஜுவல்லரி அதிபர் பாராட்டு

சென்னை, ஜன.18:

நேர்மையை போற்றிய லலிதா ஜுவல்லரி அதிபர் சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளரான பத்மா, சென்னை தி.நகர் சாலையில் யாரும் கவனிக்காமல் கிடந்த 45 சவரன் தங்க நகைகளை தமிழ்நாடு காவல் துறையிடம் ஒப்படைத்தார். அதற்காக லலிதா ஜுவல்லரியின் உரிமையாளர் டாக்டர் எம். கிரண் குமார், அவரை வீட்டிற்கு அழைத்து கௌரவித்தார்.

"இத்தகைய மனிதர்களே நமது சமுதாயத்தின் முன்மாதிரிகள். அவர்களை கௌரவித்து கொண்டாடுவது நமது கடமை," என்று கூறிய அவர், தனது பாராட்டின் அடையாளமாக ஒரு வெள்ளித் தட்டைப் பரிசாகவும் வழங்கினார்.

"இன்றைய காலகட்டத்தில், குறிப்பாக குறைந்த வருமானப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் இவ்வாறு



நடந்து கொள்வதற்கு மிகுந்த நேர்மையும், உண்மையும் தேவை. இவ்வளவு உயர்ந்த பண்புகள் கொண்ட ஒருவரை வீட்டிற்கு அழைத்து சந்தித்தது, எனக்கு தனிப்பட்ட முறையில் பெருமையாக உள்ளது" என்று கிரண் குமார் கூறினார்.

## சட்டசபை தேர்தல்: த.வெ.க. பிரச்சார பணிக்கு 10 பேர் கொண்ட குழு

சென்னை, ஜன.18:

சட்டசபை தேர்தலை சந்திக்கும் வகையில், த.வெ.க. பிரச்சார பணிக்கு 10 பேர் கொண்ட குழுவை விஜய் உருவாக்கியுள்ளார்.

சட்டசபை தேர்தலை சந்திக்க த.வெ.க. தீவிரமாக இறங்கியுள்ளது. முதல்கட்டமாக தேர்தல் அறிக்கையை தயார் செய்ய 12 பேர் கொண்ட குழுவை விஜய் அமைத்து, உத்தரவிட்டு இருந்தார். இந்த குழு தற்போது தேர்தல் அறிக்கையை தயார் செய்யும் பணியில் இறங்கியுள்ளது. இதற்கிடையே தேர்தல் பிரச்சாரத்தை வேகமாக முன்னெடுக்கும் வகையில் தேர்தல் பிரச்சார குழு ஒன்றையும் விஜய் உருவாக்கியுள்ளார்.




இந்த குழுவில் 10 பேர் இடம் பெற்றுள்ளனர். அவர்கள் மாவட்டம் முழுவதும் பயணம் செய்து, தேர்தல் பிரச்சார திட்ட வியூகங்களை அமைக்கவும், பொதுக்கூட்டம் நடத்துவதற்கான இடத்தையும் தேர்வு செய்ய இருக்கிறார்கள். இதற்கான அறிவிப்பை விஜய் நேற்று வெளியிட்டார்.

இது தொடர்பாக த.வெ.க. தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அந்த அறிவிப்பில் கூறியிருப்பதாவது:- தமிழகத்தில் நடைபெற உள்ள சட்டசபை பொதுத்தேர்தலையொட்டி மாநில, மாவட்ட, தொகுதி அளவிலான தேர்தல் பிரசார பணிகளை மேற்கொள்ள, தேர்தல் பிரச்சார குழு அமைக்கப்படுகிறது. இந்த குழுவில், பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த், தேர்தல் மேலாண்மை பிரிவு பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா, நிர்வாக குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன். நிர்வாகிகள் பார்த்திபன், ராஜ்குமார், விஜய் தாமு, செல்வம், பிச்சை ரத்தினம் கரிகாலன், செரவு மைதீன் என்ற நியாஸ், கேத்ரின் பாண்டியன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்த குழுவினர் 234 தொகுதிகளிலும் ஆலோசனை கூட்டங்கள், பிரசார கூட்டங்கள் நடத்துவது தொடர்பான பணிகளை மேற்கொள்வார்கள். இந்த குழுவிற்கு தொண்டர்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

10 பேர் கொண்ட பிரசார குழு அமைக்கப்பட்ட போதிலும் தனது அடுத்தக்கட்ட பிரசார தேதி அறிவிப்பை விஜய் வெளியிடவில்லை. வரும் பிப்ரவரி 2-ந்தேதி கட்சியின் 3-ம் ஆண்டு தொடக்க நாளாகும். எனவே அந்த விழாவில் புதிய அறிவிப்புகளை வெளியிட விஜய் திட்டமிட்டுள்ளதாகவும், பிரசார வியூகங்கள் அந்த கூட்டத்தில் வகுக்கப்பட இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளது.

கட்சியின் 3-ம் ஆண்டு தொடக்க விழாவை பொது வெளியில் நடத்தலாமா? அல்லது தனியார் கல்லூரி உள் அரங்கத்தில் நடத்தலாமா? என்பது குறித்து விஜய் தீவிரமாக ஆலோசித்து வருகிறார். இதற்கிடையே, கரூர் சி.பி.ஐ. வழக்கு தொடர்பாக இந்த மாதம் இறுதியில் விஜய் மீண்டும் டெல்லிக்கு செல்ல இருக்கிறார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### வெறும் வயிற்றில் பூண்டு சாப்பிடுவதால் என்ன நன்மைகள்?

பூண்டு இந்தியர்களின் உணவில் அத்தியாவசியமாகப் பயன்படுத்தப்படும் ஒன்றாக இருந்தாலும், அதை நாம் தினசரி சாப்பிடுவதால் பல ஆரோக்கிய நன்மைகள் கிடைக்கிறது. பலருக்கு பூண்டின் மருத்துவ குணங்கள் பற்றி தெரிவதில்லை. குழம்பில் இருந்தால் அதை ஒதுக்கி விடுவதைப் பார்க்கிறோம்.

இந்தப் பதிவில் பூண்டு சாப்பிடுவதால் நமக்குக் கிடைக்கும் நன்மைகள் பற்றி தெரிந்துகொண்டு, தினசரி ஒரு பல் பூண்டாவது சாப்பிட்டு அதன் ஆரோக்கிய நன்மைகளை அடைவோம்.

நீங்கள் ஜலதோஷ பிரச்னையால் அவதிப்படும் நபராக இருந்தால், மூன்று நாட்களுக்கு மூன்று பூண்டு பற்களை கடித்து சாப்பிட்டால்போதும், உடனடியாக ஜலதோஷம் சரியாகிவிடும். அதேபோல, தொடர்ச்சியாக பூண்டு சாப்பிடுவதால் அவ்வளவு எளிதில் வயிற்றுப் பிரச்னைகள், தொற்றுக்கிருமியினால் ஏற்படும் பாதிப்புகளும் வராது.

முகத்தில் பருக்கள் ஏற்பட்டால் பூண்டை அரைத்து அதன் மீது தடவினால் பருக்கள் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். கேன்சர் புண்களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள், அதற்கு எடுத்துக்கொள்ளும் மருந்துகளுடன் பூண்டு சாப்பிட்டு வந்தால், புண்கள் விரைவில் ஆற உதவும்.

சிலரின் வயிற்றில் குடல் புழுக்கள் இருக்கும். அவர்கள் பூண்டு சாப்பிட்டுவந்தால் தானாகவே அவை வெளியேறிவிடும். பூண்டுக்கு தேவையற்ற கொழுப்புகளைக் கரைக்கும் பண்பு உள்ளது. இதனால் இரத்தக் குழாய்களில் படிந்துள்ள கொழுப்புகள் கரைந்து சிறுநீர் வழியே வெளியேறுகிறது.

பூண்டு சாப்பிடுவதால் இரத்த ஓட்டம் சீராகி, உடலுக்குத் தேவையான ஆக்சிஜன் சரியாகக் கிடைப்பதால், இரத்த அழுத்தம், இதய பிரச்னை, மூச்சு வாங்குதல் போன்றவை சரியாகும். பூண்டை உணவில் சேர்த்து சாப்பிடுவதை விட, அதை அப்படியே சாப்பிடுவதன் மூலமாகத்தான் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் கிடைக்கின்றன. அவற்றை உணவில் சேர்க்கும்போது அதன் சத்துக்கள் பாதியாகக் குறைந்து விடுகின்றன.

சர்க்கரை நோயாளிகள் தினசரி பூண்டு சாப்பிடுவதால் அவர்களின் இரத்த சர்க்கரை அளவை கட்டுக்குள் கொண்டு வந்து, இன்சுலின் சுரப்பை அதிகரிக்கச் செய்யலாம்.

பூண்டில் அலர்ஜி எதிர்ப்புப் பண்பு அதிகமாக இருப்பதால் மூன்று வாரம் தொடர்ந்து பூண்டு சாப்பிடும்போது அலர்ஜி பிரச்னைகள் முழுமையாக நீங்கிவிடும். பூண்டுக்கு சார்ஸ் முதல் பிளேக் நோய் வரை அனைத்தையும் குணப்படுத்தும் தன்மையுள்ளது. இவை நோய்க் கிருமிகளை முற்றிலுமாக அழித்து விடுவதால், அதில் பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் குணமடைவார்கள். ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தினசரி பூண்டு பால் பருகி வந்தால் மூச்சுத்திணறல் சரியாகும். இப்படி எண்ணிலடங்கா பல மருத்துவ குணங்கள் பூண்டிற்கு உண்டு.

### சுக்குப் பொடியில் சுருண்டு போகும் நோய்கள்!

சுக்கு பல்வேறு உடல் நல பிரச்னைகளை தீர்க்கும் மருத்துவ பொருள். அவற்றினால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி இப்பதிவில் காண்போம். இஞ்சியை சுண்ணாம்பு நீரில் ஊற வைத்து வெயிலில் உலர்த்துகிறார்கள். அப்படி காய்ந்த இஞ்சியே சுக்கு ஆகிறது. வீட்டு வைத்தியத்துக்கு உதவும் மருந்து சரக்குகளில் சுக்கு முதலிடம் பெறுகிறது. இது சுலபமாகக் கடைகளில் கிடைக்கிறது. எப்போதும் வீடுகளில் இருப்பது; எச்சமயத்திலும் முதல் உதவிக்கு உதவும் மருந்து என்று சுக்கைக் கூறலாம்.

பித்தம்: சிலருக்கு பித்தம் அடிக்கடி தலை தூக்கும். தலைவலி, உடம்பில் வலி, தலை சுற்றல், வாந்தி, பேதி முதலியன ஏற்படும். உடம்பில் ஓச்சல் அதிகமாக இருக்கும். சுக்குப் பொடியை தேனில் குழைத்தோ, சர்க்கரையில் கலந்தோ உட்கொண்டால் நோய் தீரும்.

வயிற்று நோய்: சாப்பிடும் பொருட்களில் சிறு சுக்குப் பொடியை கலந்தால் உணவு ஜீரணமாக உதவும். வயிற்று வலி இருந்தால் அடியோடு மறைந்துவிடும்.

அஜீரணம்: சுக்கு உணவில் ஜீரணத்தை தூண்டுவதால் பேதிக்கு மருந்து சாப்பிடும் போது சுக்கு கசாயத்தை அனுபானமாக சாப்பிடுவது உண்டு. மிளகு ரசத்திலும் சிறிது சுக்கை சேர்க்கலாம்.

## ஜனாதிபதி மாளிகையில் 21 முதல் 29-ந்தேதி வரை பார்வையாளர்களுக்கு அனுமதி ரத்து

**புதுடெல்லி, ஜன.18:**

குடியரசு தினத்தை முன்னிட்டு கர்தவ்யா பாதையில் ராணுவ அணிவகுப்பு நடைபெற உள்ளது. தொடர்ந்து 29-ந்தேதி, குடியரசு தின விழா கொண்டாட்டத்தின் நிறைவாக ஜனாதிபதி மாளிகை அருகே உள்ள விஜய் சவுக் பகுதியில் இந்திய ராணுவத்தின் பின்வாங்கு முரசறை நிகழ்ச்சி நடைபெறும்.

இதனையொட்டி, பாதுகாப்பு காரணங்களுக்காக வரும் 21-ந்தேதி முதல் 29-ந்தேதி வரை ஜனாதிபதி மாளிகையில் பார்வையாளர்களுக்கான அனுமதி ரத்து செய்யப்படுவதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

## இந்தூரில் விஷமாக மாறிய குடிநீர்; உயிரிழப்புகளுக்கு அரசாங்கமே பொறுப்பு - ராகுல் காந்தி

இந்தூரில் குடிநீர் விஷமாக மாறியதால் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு அரசாங்கமே பொறுப்பு என காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி விமர்சித்துள்ளார். இன்று பாகீரத்புராவிற்கு நேரில் சென்று உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை சந்தித்து ராகுல் காந்தி ஆறுதல் கூறினார்.

## திமுக அரசு தான் பொறுப்பேற்க வேண்டும் - அன்புமணி

கஞ்சா போதையைத் தடுக்கத் தவறிய திமுக அரசு தான் இரு இளைஞர்களின் படுகொலைக்கு பொறுப்பேற்க வேண்டும்.

## ஊருக்கே ஊற்றிக் கொடுத்துள்ளது திமுக அரசு! - நயினார் நாகேந்திரன்

திமுக ஆட்சிக்கு வந்ததிலிருந்து சாராய வாடை இல்லாத கொண்டாட்டங்களே இல்லை என நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

## தொடர் விடுமுறை: ஏற்காட்டில் குவிந்த சுற்றுலா பயணிகள்



ஏற்காட்டின் பிரதான சுற்றுலாத் தலங்களான ஏரி பூங்கா, அண்ணா பூங்கா, ரோஜா தோட்டம் மற்றும் லேடிஸ் சீட் போன்ற இடங்களில் மக்கள் கூட்டம் அலைமோதியது. குறிப்பாக ஏற்காடு ஏரியில் படகு சவாரி செய்ய சுற்றுலா பயணிகள் நீண்ட வரிசையில் காத்திருந்து மகிழ்ந்தனர். கிளியூர் நீர்வீழ்ச்சியில் தண்ணீர் வரத்து சீராக உள்ளதால் அங்கு சென்ற சுற்றுலா பயணிகள், குளித்து மகிழ்ந்தனர்.

# திருவள்ளுவர் தினத்தையொட்டி அமைச்சர் துரைமுருகன் உள்பட 13 பேருக்கு விருது: முதலமைச்சர் ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை, ஜன.18:**



திருவள்ளுவர் தினத்தையொட்டி அமைச்சர் துரைமுருகன், இறையன்பு உள்பட 13 பேருக்கு விருதுகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

திருவள்ளுவர் திருநாளையொட்டி தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் தமிழ்மொழிக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றி பெருமை சேர்த்த தமிழறிஞர்களுக்கு விருது வழங்கும் விழா, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடந்தது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், விருதுகள் வழங்கி கவுரவித்தார்.

அதன்படி 2026-ம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது மு.பெ.சத்தியவேல் முருகனார், 2025-ம் ஆண்டுக்கான தந்தை பெரியார் விருது வக்கீல் அ.அருள்மொழி, அண்ணல் அம்பேத்கர் விருது சிந்தனைச் செல்வன், பேரறிஞர் அண்ணா விருது அமைச்சர் துரைமுருகன், பெருந்தலைவர் காமராசர் விருது எஸ்.எம்.இதயத்துல்லா, மகாகவி பாரதியார் விருது கவிஞர் நெல்லை ஜெயந்தா, பாவேந்தர் பாரதிதாசன் விருது கவிஞர் யுகபாரதி ஆகியோர் பெற்றனர்.

மேலும் தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது முன்னாள் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது சு.செல்லப்பா, முத்தமிழறிஞர் கலைஞர் விருது விடுதலை விரும்பி என மொத்தம் 10 பேருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இலக்கிய மாமணி விருது

அதன்தொடர்ச்சியாக, இந்த விழாவில் 2025-ம் ஆண்டுக்கான இலக்கிய மாமணி விருதுகள் 3 பேருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். அதன்படி மரபுத் தமிழ் வகைப்பாட்டில் த.ராமலிங்கம், ஆய்வுத்தமிழ் வகைப்பாட்டில் சி.மகேந்திரன், படைப்புத்தமிழ் வகைப்பாட்டில் ரா.நரேந்திர குமார் ஆகியோர் பெற்றனர்.

இந்த விருது பெற்ற 13 பேருக்கும் விருதுத்தொகையாக ரூ.5 லட்சம், ஒரு பவுன் தங்கப்பதக்கம், தகுதியுரை ஆகியவற்றை வழங்கியும் பொன்னாடை அணிவித்தும் சிறப்பு செய்யப்பட்டது.

விழாவில் அமைச்சர்கள் சாமிநாதன், சேகர்பாபு, மெய்யநாதன், மதிவேந்தன், எம்.எல்.ஏ.க்கள் எழிலன், எஸ்.எஸ்.பாலாஜி, பாபு, தலைமைச் செயலாளர் முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அருள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், வள்ளுவர் கோட்டத்தில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# நெல்லை அருகே மூதாட்டியைக் கட்டிப்போட்டு 25 பவுன், ரூ.6 லட்சம் கொள்ளை-2 பேர் கைது!

**திருநெல்வேலி, ஜன.18:**



நெல்லை அருகே மூதாட்டியைத் தாக்கி, கை, கால்களைக் கட்டிப்போட்டு 25 பவுன் நகை மற்றும் 6 லட்சம் ரூபாய் பணத்தைக் கொள்ளையடித்த வழக்கில், நவீன தொழில் நுட்ப உதவியுடன் இரண்டு பேரை போலீசார் கைது செய்துள்ளனர்.

கொள்ளையடித்த நகைகளை போலீசில் சிக்காமல் இருக்க சென்னையில் அடகு வைத்தது விசாரணையில் அம்பலமாகி யுள்ளது.

நெல்லை மாவட்டம் சுத்தமல்லி பொன் விழா நகரைச் சேர்ந்தவர் சன்னியாசி. இவர் குடும்பத்துடன் சென்னையில் தங்கி பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார். சுத்த மல்லியில் உள்ள அவரது வீட்டில் மாமனார் மாரி மற்றும் மாமியார் ஆண்டிச்சி (70) ஆகியோர் வசித்து வருகின்றனர்.

கடந்த 8-ம் தேதி காலை, மாரி வெளியே சென்றிருந்த நேரத்தில் ஆண்டிச்சி மட்டும் வீட்டில் தனியாக இருந்துள்ளார்.

அப்போது வீட்டிற்குள் நுழைந்த நபர்கள் இருவர், குடிப்பதற்குத் தண்ணீர் கேட்பது போல் நடித்து ஆண்டிச்சியின் கவனத்தைத் திசை திருப்பினர். திடீரென அவரைத் தாக்கிய அந்த கும்பல், கயிறுகளால் அவரது கை, கால்களைக் கட்டிப்போட்டு வாயையும் பொத்தினர்.

ஆண்டிச்சி அணிந்திருந்த தங்கச் சங்கிலி, மூக்குத்தி, கம்மல் என 15 சவரன் நகைகளை வலுக்கட்டாயமாகப் பறித்த கொள்ளையர்கள், பின்னர் வீட்டின் பீரோ வைத் திறந்து அதில் இருந்த 10 சவரன் நகை கள் மற்றும் 6 லட்சம் ரூபாய் ரொக்கப் பணத் தையும் கொள்ளை யடித்தனர்.

கொள்ளை போன நகை மற்றும் பணத்தின் மொத்த மதிப்பு சுமார் 26 லட்சம் ரூபாய் என்று கூறப்படுகிறது. இந்த சம்பவம் குறித்து சுத்தமல்லி போலீ சார் வழக்குப் பதிவு செய்தனர்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரசன்னகுமார் உத்தரவின் பேரில், குற்றவாளிகளைப் பிடிக்கத் தனிப்படைகள் அமைக்கப்பட்டன. போலீசார் அப்பகுதியில் இருந்த பல சி.சி.டி.வி. (CCTV) கேமரா காட்சிகளை ஆய்வு செய்தனர். சம்பவத்தன்று அப்பகுதியில் நடமாடிய சந்தேகத்திற்குரிய நபர்களின் அலைபேசி சிக்னல்கள் மற்றும் நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

இதில் கொள்ளையர்களின் இருப்பிடம் உறுதி செய்யப்பட்டது. விசாரணையில், பேட்டை அண்ணாமலை நகரைச் சேர்ந்த மணிகண்டன் மற்றும் அவரது உறவினரான ஜீவா நகரைச் சேர்ந்த சுந்தர் ஆகிய இருவரும் இந்தக் கொள்ளையில் ஈடுபட்டது தெரியவந்தது.

அவர்களை போலீசார் அதிரடியாகக் கைது செய்தனர்.

விசாரணையில் நெல்லை பகுதியில் நகைகளை விற்றாலோ அல்லது அடகு வைத்தாலோ போலீசில் சிக்கிக் கொள்வோம் என்று நினைத்த கொள்ளையர்கள், மிகவும் புத்திசாலித்தனமாகச் செயல்படுவதாகக் கருதி, கொள்ளையடித்த நகைகளுடன் சென்னைக்குத் தப்பிச் சென்றுள்ளனர்.

அங்குள்ள ஒரு தனியார் பைனான்ஸ் நிறு வனத்தில் நகைகளை அடகு வைத்துப் பணமாக மாற்றியது கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது கைது செய்யப்பட்டவர்களிட மிருந்து தகவல்களைப் பெற்றுள்ள தனிப்படை போலீசார் சென்னை விரைந்து ஒள்ளனர்.

அங்கு தனியார் நிறுவனத்தில் அடகு வைக்கப்பட்டுள்ள நகைகளைச் சட்டப்படி மீட்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். குற்றம் நடந்த சில நாட்களி லேயே, எவ்விதத் தடயமும் இன்றித் தப்பிய கொள்ளையர்களைத் தொழில்நுட்ப உதவி யுடன் துல்லியமாகக் கண்டறிந்து கைது செய்த தனிப்படை போலீசாரை எஸ்.பி. பிரசன்னகுமார் நேரில் அழைத்து பாராட்டி னார்.




## குழந்தைகளுடன் மனைவியை வீட்டை விட்டு துரத்திய கணவர் மீது வழக்கு பதிவு

**குழித்துறை, ஜன.18:**

பள்ளியாடியைச் சேர்ந்த அம்புரோஸ் மகள் அனுஷா (44) பள்ளியாடி காட்டு விளையைச் சேர்ந்த மாதவன் மகன் ராஜேஷ் (44) இருவருக்கும் 2012 ஆண்டு ஜூன் மாதம் ஒன்றாம் தேதி திருமணம் நடந்தது. திருமணத்தின் போது ராஜேஷ் கேட்டுக்கொண்டதின் படி 35 பவுன் தங்க நகை, 7 பவுன் செயின், 2 பவுன் பிரேஸ்லெட் ,ராஜேஷ் சகோ தரிக்கு ஒரு பவுனில் காப்பு, இரண்டு லட்சம் மதிப்பிலான வீட்டு உபயோக பொருட்கள் கொடுக்கப்பட்டது. திருமணம் முடிந்த பிறகு ராஜேஷ் வீட்டில் குடும்ப மாக வாழ்ந்து வந்தனர். இரண்டு ஆண் குழந்தைகளும் பிறந்தன. 8 ஆண்டுகள் கழிந்த பிறகு ராஜேஷ் குடிப்பழக்கத் திற்கு அடிமையாகி அனுஷாவை பல ஆண்களுடன் தொடர்பு படுத்தி பேசி பிரச்சனையை உருவாக்கியுள்ளார். பின் வெளிநாட்டுக்கு வேலைக்கு சென்று வந்து கடந்த 29 ஆம் தேதி இரவு 10 மணி அளவில் பள்ளியாடி காட்டு விளையைச் சேர்ந்த ஷாஜி தூண்டுதலின் பேரில் ராஜேஷ் அனுஷாவை தாக்கி இரு குழந்தைகளையும் அனுஷாவை யும் வீட்டை விட்டு விரட்டியுள்ளார். இதுகுறித்து அனுஷா மார்த்தாண்டம் மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் ராஜேஷ் மற்றும் ஷாஜி மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## டிசம்பர் மாதம் ரூ.13,550 கோடிக்கு ஆயத்த ஆடை ஏற்றுமதி- கடந்த ஆண்டை விட 9 சதவீதம் வளர்ச்சி

**திருப்பூர், ஜன.18:**

இந்தியாவின் ஆயத்த ஆடை ஏற்றுமதி வர்த்தகம், உலகளாவிய வர்த்தக பிரச்சனைகளுக்கு இடையிலும் கடந்த டிசம்பர் மாதம் வளர்ச்சியை எட்டியுள்ளது. அதன்படி இந்திய ரூபாய் மதிப்பில் கடந்த டிசம்பர் மாதம் ரூ.13 ஆயிரத்து 550 கோடியே 64 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்துள்ளது. முந்தைய ஆண்டு ரூ.12 ஆயிரத்து 424 கோடியே 17 லட்சத்து நடந்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 9 சதவீதம் வளர்ச்சியாகும்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை ரூ.1 லட்சத்து ஆயிரத்து 87 கோடியே 19 லட்சத்துக்கு ஏற்றுமதி நடந்துள்ளது. முந்தைய ஆண்டு இதே காலகட்டத்தில் ரூ.94 ஆயிரத்து 940 கோடியே 59 லட்சத்துக்கு நடந்துள்ளது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6.5 சதவீதம் வளர்ச்சியை எட்டிப்பிடித்துள்ளது என ஆயத்த ஆடை ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் (ஏ.இ.பி.சி.) தெரிவித்துள்ளது.

அமெரிக்க வரி விதிப்பு தொடர்பான சவால்கள் காரணமாக ஏற்றுமதி சற்று பாதிக்கப்பட்டுள்ளது. அந்த இழப்பை ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் வரியில்லா வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்ட நாடுகளுடன் ஈடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக ஜப்பான் நாட்டுடன் ஏற்றுமதி அதிகரித்துள்ளது.

# உலகையே அதிரவைக்கும் தமிழகம்: ஐஐடி மெட்ராஸ் to அதிநவீன ஸ்டார்ட்-அப்கள்

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் தமிழகத்தின் பங்கு மகத்தானது. உலகமே வியக்கும் வண்ணம் பல கண்டுபிடிப்புகளையும், சாதனைகளையும் தமிழகம் தொடர்ந்து வழங்கி வருகிறது. குறிப்பாக விண்வெளி, பாதுகாப்பு, தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல் மற்றும் பொறியியல் துறைகளில் முக்கிய பங்காற்றுகிறது. மேலும் அறிவியல் பரவல் மற்றும் ஆராய்ச்சியில் கவனம் செலுத்துகிறது. IIT Madras போன்ற நிறுவனங்கள் ஆராய்ச்சிக்கு உதவுகின்றன. மேலும் பல விண்வெளி ஸ்டார்ட் அப்களும் மாநிலத்தில் உருவாகி வருகின்றது. இது தொழில்நுட்ப வளர்ச்சியை துரிதப்படுத்துகிறது.


விண்வெளி மற்றும் பாதுகாப்பில் முக்கிய பங்களிப்புகள்:

திருநெல்வேலியில் உள்ள மகேந்திரகிரியில் ISROவின் உந்துவிசை வளாகம்(IRPC) உள்ளது. இது கிரையோஜெனிக் இன்ஜின்கள் மற்றும் ராக்கெட் நிலைகளை சோதிக்கிறது.

தூத்துக்குடிக்கு அருகில் நாட்டின் இரண்டாவது விண்வெளித் தளம் அமைக்கப்படுகிறது. இது செயற்கைக்கோள் ஏவுதல்களை எளிதாக்கும்.

சென்னை மற்றும் கோயம்புத்தூரில் ஏரோஸ்பேஸ் மற்றும் பாதுகாப்பு நிறுவனங்கள், துல்லியமான பொறியியல், ஏவியோனிக்ஸ் போன்ற துறைகளில் பங்களிக்கின்றன.

மயில்சாமி அண்ணாதுரை- சந்திராயன் 1 திட்ட இயக்குனர், கே.சிவன் - இஸ்ரோவின் முன்னாள் தலைவர் மற்றும் சந்திராயன் 2 திட்டத்தில் முக்கிய பங்காற்றியவர், பி.வீரமுத்துவேல்-சந்திராயன்



3 திட்ட இயக்குனர் என இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான ISROவின் பல முக்கிய சாதனைகளின் பின்னால் தமிழர்கள் உள்ளனர்.

தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் மின்னணுவியலில் முக்கிய பங்களிப்புகள்:

தகவல் தொழில்நுட்பத்தில் முன்னணி மாநிலமாக உள்ளது. பல e-அரசுத் திட்டங்களை செயல்படுத்துகிறது.

சென்னை, கோயம்புத்தூரில் பல மின்னணுவியல் மற்றும் பொறியியல் நிறுவனங்கள் அமைந்துள்ளன.

சென்னை இந்தியாவின் ‘SaaS Capital’ (Software as a Service) என்று அழைக்கப்படுகிறது. ஜோஹோ(Zoho) மற்றும் ஃப்ரெஷ்வொர்க்ஸ்(Freshworks) போன்ற உலகளாவிய நிறுவனங்கள் தமிழகத்திலிருந்து உருவானவை.

கூகுள் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர் பிச்சை அவர்கள் தமிழகத்தின் மதுரையைச் சேர்ந்தவர்.

ஆராய்ச்சி மற்றும் கல்வியில் முக்கிய பங்களிப்புகள்:

IIT Madras, NIT திருச்சி போன்ற நிறுவனங்கள் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சியில் முக்கிய பங்காற்றுகின்றன.

தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் (TNSTC) அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

‘ராமன் விளைவுக்காக’ இயற்பியலில் நோபல் பரிசு பெற்ற சர் சி.வி. ராமன், இந்தியாவின் ‘ஏவுகணை மனிதர்’ என அழைக்கப்படும் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம், விண்மீன்களின் பரிணாம வளர்ச்சி குறித்த ஆய்வுக்காக நோபல் பரிசு பெற்ற எஸ்.சந்திரசேகர், வேதியியலில் நோபல் பரிசு பெற்ற வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் போன்ற உலகத்தரம் வாய்ந்த விஞ்ஞானிகளை தமிழகம் உருவாக்கியுள்ளது.

தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் கொள்கைகள்:

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்பப் பேரவை (TNSCST) அறிவியல் ஆராய்ச்சிகளை ஒருங்கிணைக்கிறது.

விண்வெளித் துறைக்கான புதிய கொள்கையை தமிழ்நாடு அறிமுகப்படுத்தியுள்ளது. இது ஸ்டார்ட் அப்களுக்கு உதவுகிறது.

தமிழ்நாடு ஒரு வலுவான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அடித்தளத்தைக் கொண்டுள்ளது. இது நாட்டின் விண்வெளி, பாதுகாப்பு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் பிற துறைகளின் வளர்ச்சிக்கு தொடர்ந்து பங்களித்துக் கொண்டு வருகிறது.

மருத்துவம் மற்றும் உயிரி தொழில்நுட்பம்:

மருத்துவ சிகிச்சையில் சென்னை இந்தியாவின் ‘மருத்துவத் தலைநகரம்’(Medical Capital) என்று அழைக்கப்படுகிறது. அங்க மாற்று அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் சிகிச்சையில் தமிழகம் முன்னோடியாக உள்ளது.

உற்பத்தி மற்றும் ஆட்டோமொபைல்:

சென்னை ‘ஆசியாவின் டெட்ராய்ட்’ என்று அழைக்கப்படுகிறது. அதிநவீன தானியங்கி வாகன உற்பத்தி மற்றும் தொழில்நுட்பத்தில் தமிழகம் முன்னணியில் உள்ளது. ஃப்ரெஷ்வொர்க்ஸ் (Freshworks) போன்ற உலகளாவிய நிறுவனங்கள் தமிழகத்திலிருந்து உருவானவை.

# "பார்வை"



பேருந்து நிறுத்தத்தில்
கூட்டம். புழுதி,
வெயில், வியர்வை,
ஆரவாரக் குரல்கள்.

வீராயி, தன்
குழந்தையை மார்போடு
அணைத்துக் கொண்டு
பால் கொடுத்துக்
கொண்டிருந்தாள்.

அப்போது ஒரு
இளைஞன்... கண்கள்
நிலைக்காமல்,
அவளைத் தப்பான
இடத்தில், தப்பான
பார்வை பார்த்துக்
கொண்டிருந்தான்.
அவளுக்குப் புரிந்தது.
பால் கொடுப்பதை
நிறுத்தி விட்டு எழுந்து
நடந்தாள்

“என்னடா பாக்குற?”
குரல் கூர்மையாக, முகம்
உறுதியாக.
அந்த இளைஞன் கண்கள்
தாழ்ந்தன.
கூட்டம் அவனைக்
கேவலமாய்ப் பார்த்தது.
அவன் நகர்ந்தான்.

கோவிலில்,
அந்தப் பெரியவர்
குழந்தைக்கு மொட்டை
அடிக்கத் தொடங்கியதும்
அது அழத் தொடங்கியது.
அழுகை
உச்சஸ்தாயிக்குப்
போனது.
வீராயிக்குத்
தயங்கவில்லை.

பெரியவருக்கு
நெருக்கமாய் அமர்ந்து,
குழந்தைக்குப் பால்
கொடுக்க ஆரம்பித்தாள்.

பெரியவர் பார்வையில்
காமமில்லை. பாசம்
மட்டும் இருந்தது ஒரு
தாத்தா பார்ப்பது போல.

மொட்டை முடிந்ததும்
அவள் கணவன் மருது
மெதுவாகக் கேட்டான்,
“பஸ் ஸ்டாண்டுல.. அந்த
இளைஞன்...?”

வீராயி சொன்னாள்:
“பஸ்ஸ்டாண்டுல
பார்த்தவனோட கண்ணுல
ஆசை... காமம் ரெண்டும்
கலந்திருந்தது... இந்தப்
பெரியவரோட கண்ணுல
பாசம் மட்டும்தான்
இருந்தது.”

மருது விழிக்க, அவளே
சொன்னாள்,
“பொம்பளைக்கு இருக்கிற
தனி சக்தி என்னன்னா...
ஆம்பளையோட
பார்வையிலேயே அவன்
மனசுக்குள்ள என்ன
எண்ணங்கள் ஓடுதுன்னு
கண்டுபிடிக்கிற சக்தி.”

பேருந்து வந்தது.
அவர்கள் ஏறினார்கள்.



-முகில் தினகரன்
கோயம்புத்தூர்.

# பொங்கல் விழா....




பள்ளி விளையாட்டு
மைதானத்தைச்
சுற்றி பொங்கல்
விழா ஏற்பாடுகள்
பார்ப்பவர்களுக்கு
மகிழ்ச்சியும்,
சிறுவர்,சிறுமியர்களுக்கு
கொண்டாட்டமாக
இருந்தது
பள்ளி வளாகமெங்கும்
வண்ண வண்ண
தோரணங்கள்
அலங்கரிக்கப்பட்டு
இருந்தது
ரேடியோவில் ஆடல்
பாடல்கள் கொண்ட
பாடல்கள் ஒலித்த
வண்ணம் இருந்தது
ஓட்டப்பந்தயம்,
சிலம்பாட்டம்,
சிறுவர்களுக்கான
சாக்கு போட்டி,
தவளைப்போட்டி
எனப் போட்டிகள்
அறிவிக்கப்பட்டதைக்
கேட்ட வேந்தன் நாமும்
கலந்து கொள்ளலாமா..
என மனதில்
கேள்வியைக் கேட்டவன்
விளையாட்டுப் போட்டி
நடக்கும் இடத்திற்கு
வந்தான் எல்லோரும்
தங்கள் பெயர்களைப்
பதிவு செய்தனர்
வேந்தன் வேடிக்கை
பார்த்தபடி நின்றிருந்தான்
அப்போது அவன் நண்பன்
அருண் வேந்தனை
அழைத்து "நீயும் கலந்துக்க
பெயரைக் கொடு" என்றான்
"எனக்கு எதுவும்
தெரியாதுடா" என்றான்
"டேய் வேந்தா...
நமக்கான விளையாட்டுப்
போட்டி வெற்றி அடைஞ்சா
பரிசுகள் கொடுப்பாங்க"
என்றான் அருண்
"என்னோடு நீயும் கலந்துக்க
வா முயற்சி செய்து
பார்ப்போம் "என அழைத்து
வேந்தன் பெயரைப் பதிவு
செய்தான்
விளையாட்டுப் போட்டிகள்
தொடங்கியது
தொலைக்காட்சி பெட்டியில்
விளையாட்டி போட்டிகள்
நடக்கும் நிகழ்வை
பார்ப்பான் பத்துப் பேர்
முன்னும் பின்னுமாக
ஓடி வருவார்கள் அதில்
கடைசியாக வருபவர்
எல்லைக் கோட்டை
தொடுவதற்கு வேகமாக
வந்து தொடுவார் என்பதைப்
பார்த்தவன்
எப்படி முன்னேறி வந்தார்
என்பதை அப்பா விடம்
கேட்டான்
தொடக்கத்தில்
வேகமாக ஓடினால் கால்
விரைவில் சோர்வடையும்
அதற்கு மெதுவாக
ஓடிக்கொண்டே தூரத்தை
அருகில் நெருங்கும்
போது நம் வேகத்தை
அதிகப்படுத்தினால் வெற்றி
இலக்கை அடையாளம்,
அதோடு நமக்கு பின்னால்
வருபவர்களைத் திரும்பிப்
பார்க்கக் கூடாது நமக்கு
முன்னே செல்பவர்களை
முந்திச் செல்ல அவர்களை
விட விரைவாகச் செல்ல
முயற்சி செய்திட வேண்டும்
என்று அப்பா சொன்னது
நினைவுக்கு வந்தது
முதல் போட்டி நடந்ததில்
அருண் முதலாவதாக வந்து
வெற்றி பெற்றான்
அடுத்து வேந்தனுடன்
நான்கு பேர் சேர்ந்து ஓடத்
தொடங்கினர் மற்றவர்கள்
முன்னேறிச் சென்றனர்
வேந்தன் நான்காவதாக
ஓடியவன் தூரம் நெருங்க
நெருங்க கொஞ்சம்
வேகமெடுத்தான்
இலக்கை அடைந்த போது
இரண்டாவதாக வந்தான்
வேந்தான்
முதல் சுற்று
முடிவடைந்து
இரண்டாவது
சுற்றுக்கு அருணோடு
வேந்தனும் ஓடத்
தொடங்கினான்
அருண் வேந்தனுக்கு
முன்னே ஓடிக்
கொண்டிருந்தான்
இலக்கை அடைய
விரைவாக
வேகமெடுத்து
அருணுக்கு முன்
எல்லைக் கோட்டை
தொட்டு வெற்றி
பெற்றான் வேந்தன்
இதைக்கண்ட அருண்
ஆச்சரியமடைந்தான்
மற்ற போட்டிகளிலும்
விளையாடிய வேந்தன்
சாக்கு போட்டியில்
இடறி விழுந்து பின்
சுதாரித்துக்கொண்டு
இரண்டாம் இடத்தை
அடைந்தான் வேந்தன்
தவளைப் போட்டியில்
முதல் இடத்தை
அடைந்து வெற்றி
பெற்று வந்தான்
இதனைக் கண்ட
அருண்
"டேய் வேந்தா...
துணிந்து நீ? எடுத்த
முயற்சியாலே உனக்கு
வெற்றியைத் தேடித்
தந்தது வாழ்த்துகள்"
என்றான் அருண் முதல்
முதலாய் பொங்கல் விழா
வில் நடந்த போட்டிகளில்
கலந்து கொண்டு வெற்றி
பெற்ற வேந்தனுக்கு
பெருமிதமாய் இருந்தது .



- நல.ஞானபண்டிதன்
திருப்புவனம் புதூர்


# கொத்தமல்லி கார உருண்டை



தேவையான பொருட்கள்:
அரிசி ரவை-2 கப்
கொத்தமல்லித்தழை - சின்ன கட்டு
பச்சை மிளகாய் -3
தேங்காய்த் துருவல் - 4 கப்
நெய் - 2 டீஸ்பூன்
புளி - சிறிதளவு
கடுகு - 1½ டீஸ்பூன்
உளுந்தம்பருப்பு, கடலைப்பருப்பு
தலா - 2 டீஸ்பூன்
பெருங்காயத்தூள் ½ டீஸ்பூன்
எண்ணெய், உப்பு - தேவையான
அளவு

செய்முறை:
வாணலியில் சிறிதளவு எண்ணெய் விட்டு, கொத்தமல்லித்தழை, பச்சை மிளகாய், தேங்காய்த் துருவல், புளி ஆகியவற்றை வதக்கி, பின்னர் மிக்சியில் விழுதாக அரைக்கவும். வாணலியில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் கடுகு, உளுந்தம்பருப்பு, கடலைப்பருப்பு தாளித்து, 5 கப் நீர் ஊற்றவும். அதில் அரைத்த விழுது, பெருங்காயத்தூள், உப்பு, நெய் சேர்த்துக் கொதிக்கவிடவும்.
நன்கு கொதிக்கும்போது, அடுப்பை ‘சிம்’மில் வைத்து, அரிசி ரவையை சேர்த்து கைவிடாமல் கிளறி, மூடிபோட்டு 10 நிமிடம் வேகவிட்டு இறக்கவும். ஆறியதும் சிறு உருண்டைகளாகப் பிடித்து, இட்லித் தட்டில் வைத்து ஆவியில் வேகவிட்டு எடுத்தால் சுவையான கொத்தமல்லி கார உருண்டை தயார்.

# அடுப்பங்கரை டிப்ஸ்: சமையல் வல்லுநர்கள் போல் மிளிரலாம்!



ஊறுகாய் வகைகளை மரக்கரண்டியால் எடுத்து உபயோகிக்க நீண்ட நாள் கெடாமல் இருப்பதுபோல் உப்பிற்கும் மரக்கரண்டி அல்லது பீங்கான் கரண்டி உபயோகிக்க துருப்பிடிக்காமல் நீண்ட நாள் அப்படியே இருக்கும்.

சிகப்பு மிளகாய் தாளிக்க மிளகாயை இரண்டாக வெட்டி டப்பாவில் வைத்துக்கொள்ள தாளிக்கும்போது சுலபமாக இருக்கும்.

வாழைக்காய், வாழைப்பூ நறுக்கும்போது கையிலும், கட்டிங் போர்டிலும் எண்ணெய் தடவிக்கொண்டு பின் நறுக்க கறை ஏற்படாது.

சமையலின்போது பயன்படுத்தும் கரண்டி, ஸ்பூன்களை அப்படியே பரிமாற உபயோகிக்காமல் கழுவிய பின் உபயோகிக்க பார்க்க நீட்டாக இருக்கும்.

கேசரி, அல்வா போன்றவற்றை பரிமாறும்போது குழி கரண்டியில் உள்பக்கம் எண்ணெய் அல்லது நெய் தடவிக்கொண்டு பின் எடுத்து பரிமாற அழகாக குழியாக வரும்.

பாத்திரங்களை சூடாக இருக்கும்போது கழுவாதீர்கள். பாத்திரத்தின் வடிவம் மாறிவிடும். சற்று சூடு ஆறியதும் கழுவ வடிவம், நான்ஸ்டிக் எனில் கோட்டிங் மாறாமல் இருக்கும்.

பாத்திரம் துலக்க தரமான வாசிங்பவுடர், லிக்விடை உபயோகிக்க கை சொரசொரப்பு, கீறல் இல்லாமல் நன்றாக இருக்கும்.

வரும் பண்டிகை சீசனில் இனிப்பு செய்வோம். அதற்கு வெல்லப்பாகு, சர்க்கரை பாகு தேவைப்படும். ஒரு கம்பி பதத்தில் சர்க்கரை, வெல்லப்பாகை செய்து ஃப்ரிட்ஜில் வைத்துகொள்ள சட்டென செய்ய சுலபமாக இருக்கும்.
சர்க்கரை கேரமல் செய்து வைத்துக்கொண்டு பாயஸம், புட்டிங் போன்றவை செய்ய கலரும், சுவையும் நன்றாக இருக்கும்.

நட்ஸ், வறுத்த கடலை, முளைவிட்ட பயறு வகைகளை சமைக்கும் போதே இல்லத்தரசிகள் சாப்பிட்டுக்கொள்ள சத்து சேருவதோடு, அசிடிட்டி பிரச்னைகள் வராது.

சுண்டல் வகைகளை அப்படியே தாளித்து வைக்காமல், முதல் நாள் ஊறி, முளைகட்டிய பயறு வகைகளாக செய்ய சுவையோடு சத்தும் சேரும்.
புட்டும் வழக்கமான அரிசிமாவில் செய்யாமல் பருப்பு வகைகளில் செய்வதோடு சிறுதானிய மாவு, சிறுதானிய வரையில் செய்ய சுவையோடு சத்தும் சேரும்.

பருப்பு பாயசம் வைக்கும்போது பருப்பை வறுத்துவிட்டு ரவையாக்கி இரண்டாம் பாலில் வேகவிட்டு வெந்ததும், மில்க் மெய்ட், வறுத்த நட்ஸ், தேவையெனில் வெல்லம், ஏலத்தூள், நெய்யில் வறுத்த தேங்காய் துண்டுகள் சேர்த்து கலந்து இறக்க ரிச்சான பருப்பு பாயசம் சுவையாக இருக்கும்.

இனிப்பு பலகாரங்கள் செய்யும்போது சுக்கு, ஜாதிக்காய் ஏலக்காய் கிராம்பு சேர்த்து பொடி செய்து சேர்த்துக் கொள்ள சுவை அதிகரிக்கும்.

# சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்ற சத்தான உணவு: மூக்குத்தி அவரை பொரியல்!



காம்பு கத்தரி, மூக்குத்தி அவரை எனப்படும் ஒரு வகை கொடி காய்கறியில், பச்சை மூக்குத்தி, சிவப்பு மூக்குத்தி எனமொத்தம் இரண்டு வகை உள்ளது.
இது கிராமப் புறங்களில் தானாகவே முளைக்கும் காய்கறியாகும். நமது பாரம்பரிய காய்கறிகளில் ஒன்றான இந்த மூக்குத்தி அவரையை காலப்போக்கில் மக்கள் பயன்படுத்துவதை குறைத்துக் கொண்டதால், இதைப்பற்றி பெரும்பாலானோருக்குத் தெரிவதில்லை.
ஆனால், தற்போது அதன் மகத்துவத்தை மீண்டும் உணர்ந்த மக்கள் தங்கள் உணவில் சேர்த்து வருகின்றனர்.
மூக்குத்தி அவரையில் ஏகப்பட்ட மருத்துவகுணங்கள் உள்ளது.
குறிப்பாக நமது ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை கட்டுப்படுத்தும் அற்புத சக்தி இதற்கு உண்டு. இந்த பதிவில் மூக்குத்தி அவரையை பயன்படுத்தி பொரியல் எப்படி செய்வது என்பது பற்றி பார்க்கலாம்.

தேவையான பொருட்கள்
மூக்குத்தி அவரை - 1 கப்.
சின்ன வெங்காயம் - 15.
பச்சை மிளகாய் - 2.
சீரகத்தூள் - ½ டீஸ்பூன்.
தேங்காய் - துருவியது சிறிதளவு.
எண்ணெய் - தேவையான அளவு.
உப்பு - சிறிதளவு.
கடுகு - ½ டீஸ்பூன்.
உளுந்து - ½ டீஸ்பூன்.
மஞ்சள் தூள் - ½ டீஸ்பூன்.
கருவேப்பிலை - சிறிதளவு.

செய்முறை:
முதலில் மூக்குத்தி அவரைக்காயை தண்ணீரில் நன்றாக கழுவிக்கொள்ளவும்.
பின்னர் அதை பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.
அடுப்பில் சிறிய கடாய் வைத்து தேவையான அளவு எண்ணெய் ஊற்றி சூடானதும் உளுந்து, கடுகு, கருவேப்பிலை சேர்த்து வதக்கவும்.
பின்னர் அதில் நறுக்கி வைத்த வெங்காயத்தை சேர்த்து நன்றாக வதங்கியதும், அதில் பொடியாக நறுக்கிய மூக்குத்தி அவரைக்காய் மற்றும் பச்சை மிளகாய் சேர்த்து கிளறவும்.
அதன் பிறகு மஞ்சள் தூள், சீரகத்தூள் மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து நன்றாகக் கிளறவும்.
இறுதியில் மூக்குத்தி அவரை நன்றாக வெந்ததும், அதில் துருவி வைத்துள்ள தேங்காயை தூவி மெதுவாக கிளறி அடுப்பை அணைத்தால் மூக்குத்தி அவரை பொரியல் ரெடி.

# தை அமாவாசை



இந்து சமயத்தவர்களால் பின்பற்றக்கூடியதும், சிறப்பான தினமாகும். தை மாதத்தில் வருகின்ற அமாவாசை தை அமாவாசை விரதம் எனச் சிறப்புப் பெறுகின்றது. அமாவாசை தினத்தில் தங்களின் பெற்றோர் மற்றும் மூதாதையரை கருத்தில் நினைத்து அமாவாசை நாட்களில் விரதம் கடைபிடிப்பர்.

இதை அமாவாசை விரதம் என்பர். அதில் ஆடி அமாவாசை மற்றும் தை அமாவாசை முக்கிய இடம் உண்டு. தை அமாவாசை அன்று ஆண்டின் பிற (மாத) அமாவாசை நாட்களில் கடைபிடிக்க இயலாதவர்கள் ஆறு, கடல் போன்ற புனித நீர்நிலைகளில் நீராடி மூதாதையர்களுக்குப் படையல் செய்து சிறப்பு பூஜை (திதி) செய்வர்.இந்துக்கள் ஒரு வருடத்தை இரண்டு அயனங்களாகப் பிரித்துள்ளனர். தை முதல் ஆனி வரை உள்ள மாதம் உத்தராயண காலம் என்றும், ஆடி முதல் மார்கழி வரை உள்ள காலம் தட்சணாயன காலம் என்றும் அழைப்பர்.

உத்தராயண காலம் ஆரம்ப மாதமாக தை மாதம் வருவதால் தை அமாவாசையும், தட்சணா கால ஆரம்ப மாதமாக ஆடி மாதம் வருவதால் ஆடி மாதத்தில் வரும் அமாவாசை ஆடி அமாவாசை எனவும் அன்றைய தினம் தர்ப்பணம், திதி பிதுர் வழிபாட்டிற்கு புண்ணியமான தினம் என சாஸ்திர நூல்கள் கூறுகின்றனஇறந்த நம் முன்னோர்களுக்குச் சிரத்தையுடன் செய்யும் காரியமே சிராத்தம். சாதத்தைப் பிடித்து ஆறு பிண்டங்கள் வைத்து, எள், ஜலம், தர்ப்பை கொண்டு அவர்களை ஆராதிக்க வேண்டும். தந்தை, தாத்தா, முப்பாட்டன்கள், தாய், பாட்டி, கொள்ளுப் பாட்டி ஆகிய கோத்திர தாயாதிகளுக்கு ஒவ்வொருவரும் செய்யவேண்டிய மிக முக்கிய கடமையாகும் இது. இந்த ஆறு பிண்டங்களையும் ஒன்றாக இணைத்து காகத்துக்கு வைக்கும்போது, அது உண்ணுவதன் மூலம் நம் முன்னோர்களுக்கு அந்த ஆகாரம் செல்வதாக ஐதீகம்!

பூலோகம் வந்த முன்னோர்கள் மீண்டும் பிதுர்லோகம் செல்லும் தை அமாவாசை நாளில் புனித நீராடி, அவர்களுக்கு எள்ளும் நீரும் அளித்தால் எண்ணற்ற பலன்களும், தலைமுறைக்கும் புண்ணியம் சேரும் என்கின்றன புராணங்கள். பூமியில் பிறந்தவர்கள் பாவ புண்ணியத்திலிருந்து தப்பமுடியாது. பாவங்களில் மகா பாவமாக கூறப்படுவது பித்ரு கர்மாவை நிறை வேற்றாமல் இருப்பதுதான். உயிருடன் இருக்கும் ரியவர்களை மதிக்காமல், பலர் உள்ளனர். அந்த உயிர்கள் படும் துன்பம், பாவங்கள் ரூபத்தில் கவனிக்க தவறியவர்களையே வந்து சேரும். நாம் எங்கு சென்றாலும் உடன் வருவது பாவபுண்ணியங்கள் மட்டுமே. பித்ரு பாவங்களுக்கு பிராயச்சித்தம் செய்ய ஏற்படுத்தப்பட்டது நம் முன்னோர்களுக்கு மறக்காமல் காரியம் நிறைவேற்றவேண்டும்.

அமாவாசை நாளில் காகத்திற்கு முக்கியத்துவம் உண்டு. தர்ப்பணம் செய்த பிறகு காகத்திற்கு சாதம் வைத்தால் எமலோகத்தில் வாழும் நம் முன்னோர் அமைதி பெற்று நமக்கு ஆசியளிப்பர் என்பதும் ஐதீகம். கிட்டத்தட்ட, நம் மூன்று தலைமுறையில் உள்ள முன்னோருக்குச் செய்கிற ஆராதனை, நம்மையும் நம் சந்ததியையும் இனிதே வாழ வைக்கும் என்கிறது கருடபுராணம்.

முனைவர் **பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

## தினம் ஒரு தலைவர்கள்

# சாவித்ரி தேவி முகர்ஜி வரலாறு

சாவித்ரி தேவி முகர்ஜி 1905 ஆம் ஆண்டு லியோனில் மாக்சிமியானி ஜூலியா போர்டாஸ் என்ற பெயரில் பிறந்த சாவித்ரி தேவி, கிரேக்க மற்றும் இத்தாலிய வம்சாவளியைச் சேர்ந்த பிரெஞ்சு குடிமகனான மாக்சிம் போர்டாஸ் மற்றும் ஜூலியா போர்டாஸ் (நீ நாஷ்) என்ற ஆங்கிலப் பெண்ணின் மகள் ஆவார் . குழந்தை பருவத்திலிருந்தே மற்றும் அவரது வாழ்நாள் முழுவதும், அவர் விலங்கு உரிமைகளுக்காக தீவிர ஆதரவாளராக இருந்தார் . அவரது ஆரம்பகால அரசியல் தொடர்புகள் கிரேக்க தேசியவாதத்துடன் இருந்தன . தனது இளமை பருவத்தில் அவர் ஜெர்மன் தத்துவம் மற்றும் ஜெர்மனியில் ஆர்வம் கொண்டிருந்தார்; முதலாம் உலகப் போரின் முடிவில் ஜெர்மனியின் சிகிச்சையாலும் , கிரேக்க அகதிகளை ஒரே நேரத்தில் நடத்தியதாலும் அவர் கலக்கமடைந்தார். ஜெர்மனியின் தோல்விக்கு யூதர்களைக் குற்றம் சாட்டினார்.

கிரீஸ் மற்றும் பிரான்சில் கல்வி கற்ற போர்டாஸ், தத்துவம் மற்றும் வேதியியலைப் பயின்றார், லா சிம்ப்ளிசிட் கணிதமேடிக் என்ற தனது ஆய்வறிக்கையின் அடிப்படையில் லியோன் பல்கலைக்கழகத்தில் தத்துவம் மற்றும் அறிவியலில் இரண்டு முதுகலைப் பட்டங்களையும் , வேதியியலில் முனைவர் பட்டத்தையும் பெற்றார் . அடுத்து அவர் கிரேக்கத்திற்குச் சென்று, புகழ்பெற்ற இடிபாடுகளை ஆய்வு செய்தார். இங்கே , ஹென்ரிச் ஷ்லிமேன் அனடோலியாவில் ஸ்வஸ்திகாக்களைக் கண்டுபிடித்ததைப் பற்றி அவர் அறிந்தார் . பண்டைய கிரேக்கர்கள் ஆரிய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் என்பது அவரது முடிவு . அவரது முதல் இரண்டு புத்தகங்கள் அவரது முனைவர் பட்ட ஆய்வுக் கட்டுரைகள் : எஸ்ஸை-கிரிட்டிக் சுர் தியோஃபில் கைரிஸ் மற்றும் லா சிம்ப்ளிசிட் கணிதமேடிக் . பைபிள் மீதான வெறுப்பாலும், பின்னர் பாலஸ்தீனத்தில் சியோனிச நடவடிக்கைகளாலும் செல்வாக்கு பெற்ற அவர், இளம் வயதிலேயே யூத எதிர்ப்பாளராக மாறினார். 1928 ஆம் ஆண்டின் முற்பகுதியில், போர்டாஸ் தனது பிரெஞ்சு குடியுரிமையைத் துறந்து கிரேக்க குடியுரிமையைப் பெற்றார் . 1929 ஆம் ஆண்டில் (அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையிலான மோதல் ஒரு வருடம்) அவர் லென்ட் காலத்தில் பாலஸ்தீனத்தின் பிரிட்டிஷ் ஆணைக்கு ஒரு யாத்திரையில் சேர்ந்தார், இது அவரது நம்பிக்கைகளை வலுப்படுத்தியது. போர்டாஸ் தனது யூத எதிர்ப்பில் பல்வேறு பிரெஞ்சு அறிவுஜீவிகளாலும் செல்வாக்கு பெற்றார், அவர்களுடன் யூத எதிர்ப்பு மிகுதியாக இருந்தது; அவர் குறிப்பாக எர்னஸ்ட் ரெனனால் பாதிக்கப்பட்டார்.




இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு , அவர் 1945 ஆம் ஆண்டு சாவித்ரி தேவி முகர்ஜி என்ற பெயரில் இந்தியாவைச் சேர்ந்த ஒரு பிரிட்டிஷ் குடிமகனின் மனைவியாக, பிரிட்டிஷ் இந்திய பாஸ்போர்ட்டுடன் இங்கிலாந்து சென்றார் . அவர் இங்கிலாந்தில் சிறிது காலம் தங்கினார், பின்னர் பிரான்சில் உள்ள தனது தாயாரைச் சந்தித்தார், அவருடன் பிரெஞ்சு எதிர்ப்புக்கு பிந்தையவரின் ஆதரவு குறித்து அவர் சண்டையிட்டார். பின்னர் அவர் ஐஸ்லாந்துக்குச் சென்றார் , அங்கு 1947 ஏப்ரல் 5-6 தேதிகளில் ஹெக்லா மலை வெடிப்பதைக் கண்டார். ஐஸ்லாந்தில் இருந்தபோது, அவர் நார்ஸ் தேவாலயத்தையும் ஏற்றுக்கொண்டார். அவர் சிறிது காலம் இங்கிலாந்துக்குத் திரும்பினார், பின்னர் அவர் ஸ்வீடனுக்குப் பயணம் செய்தார் , அங்கு அவர் ஸ்வென் ஹெடினைச் சந்தித்தார் .

ஜூன் 15, 1948 அன்று, அவர் நோர்ட்-எக்ஸ்பிரஸில் ஏறி டென்மார்க்கிலிருந்து ஜெர்மனிக்குச் சென்றார், அங்கு அவர் "ஜெர்மனியின் ஆண்களும் பெண்களும்" "நமது புகழ்பெற்ற தேசிய சோசலிச நம்பிக்கையைப் பற்றிப்பிடித்து எதிர்க்க" ஊக்குவித்த கையால் எழுதப்பட்ட துண்டுப்பிரசுரங்களின் ஆயிரக்கணக்கான பிரதிகளை விநியோகித்தார்! அவர் கோல்ட் இன் தி ஃபர்னஸில் தனது அனுபவத்தை விவரித்தார்.

1970களின் பிற்பகுதியில், அவருக்கு கண்புரை நோய் ஏற்பட்டது , இதன் விளைவாக அவரது பார்வை வேகமாக மோசமடைந்தது. இந்தியாவில் உள்ள பிரெஞ்சு தூதரகத்தின் எழுத்தரான மிரியம் ஹிர்ன், அவரை அடிக்கடி வீட்டிற்குச் சென்று கவனித்துக் கொண்டார். அவர் இந்தியாவை விட்டு வெளியேற முடிவு செய்து, 1981 இல் ஜெர்மனிக்குத் திரும்பி பவேரியாவில் வசித்து, 1982 இல் பிரான்சுக்குத் திரும்பினார். சாவித்ரி 1982 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் எசெக்ஸில் உள்ள சிபிள் ஹெடிங்ஹாமில் ஒரு நண்பரின் வீட்டில் இறந்தார். அவரது மரணத்திற்கான காரணம் மாரடைப்பு மற்றும் கரோனரி த்ரோம்போசிஸ் என பதிவு செய்யப்பட்டது . அவர் இறக்கும் போது மாட் கோஹலின் அழைப்பின் பேரில் அமெரிக்காவில் விரிவுரை செய்யச் சென்று கொண்டிருந்தார். அவரது உடல் எசெக்ஸின் கோல்செஸ்டரில் ஒரு எளிய விழாவில் தகனம் செய்யப்பட்டது , இதில் டோனி வில்லியம்ஸ் மற்றும் இரண்டு இளம் பிரிட்டிஷ் நாஜிக்கள் கலந்து கொண்டனர். தேவியின் அஸ்தி ஒரு பொறிக்கப்பட்ட கலசத்தில் வர்ஜீனியாவின் ஆர்லிங்டனில் உள்ள அமெரிக்க நாஜி கட்சியின் தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டது, பின்னர் அவை எடுத்துச் செல்லப்பட்டு விஸ்கான்சினின் மில்வாக்கியில் உள்ள "நாஜி மரியாதை மண்டபத்தில்" ஜார்ஜ் லிங்கன் ராக்வெல்லின் அஸ்திக்கு அடுத்ததாக மாட் கோஹலால் வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது . அவர் இறக்கும் போது அவர் மிகவும் ஏழையாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

வாழ்க்கையில், தேவிக்கு சில சாதனைகள் மட்டுமே இருந்தன (குறைந்தபட்சம் நாசிசத்தை மீண்டும் தொடங்குவதற்கான அவரது இலக்குகளுடன் ஒப்பிடும்போது), ஆனால் அவரது எழுத்து நவ-நாஜி இயக்கத்தை, குறிப்பாக எஸோதெரிக் நவ-நாசிசத்தை பெரிதும் பாதித்து வருகிறது . கல்வியாளர் ஜெஃப்ரி கப்லான், தேவி "போருக்குப் பிந்தைய தேசிய சோசலிசத்தின் இடிபாடுகளில் இருந்து வெளிவந்த மிகவும் கட்டாய நபர்களில் ஒருவர்" என்று விவரித்தார், மேலும் நவ-நாஜி மறைபொருள் மீதான அவரது செல்வாக்கை "எந்தவொரு நபரை விடவும் அதிகமாக" குறிப்பிட்டார். அவரது படைப்புகள் ஆல்ட்-ரைட் , அத்துடன் புதிய யுக மதம் மற்றும் ஆழமான சூழலியல் ஆகியவற்றையும் பாதித்துள்ளன . அவரது எழுத்துக்களுக்கு மேலதிகமாக, பல தீவிர வலதுசாரிகளுடனான அவரது கடிதப் போக்குவரத்து நவ-நாஜி இயக்கத்திற்கு குறிப்பிடத்தக்க செல்வாக்கு செலுத்தியது. அவர் சிலி நாட்டுத் தூதர் மிகுவல் செரானோவையும் பாதித்தார் , மேலும் அவரது ஹோலோகாஸ்ட் மறுப்பு எர்ன்ஸ்ட் ஜூண்டலைப் பாதித்தது . 1982 ஆம் ஆண்டில், பிராங்கோ ஃப்ரெடா தனது படைப்பான கோல்ட் இன் தி ஃபர்னஸின் ஜெர்மன் மொழிபெயர்ப்பை வெளியிட்டார் , மேலும் அவரது வருடாந்திர மதிப்பாய்வின் நான்காவது தொகுதியான ரிஸ்கார்டோ (1980), சாவித்ரி தேவிக்கு "ஆரிய புறமதத்தின் மிஷனரி " என்று அர்ப்பணிக்கப்பட்டது .

# விரைவில் தனுஷ் மிருணாள் தாகூர் திருமணம்?

விரைவில் தனுஷ் மற்றும் மிருணாள் தாகூர் இருவரும் திருமணம் செய்து கொள்ள இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தனுஷ் மிருணாள் தாகூர் இருவரும் காதலித்து வருவதாக சில மாதங்களுக்கு முன்பு தகவல்கள் வெளியாகின. ஆனால், இருவரும் இணைந்து நடித்ததில்லை என்பதால் இது உண்மையாக இருக்காது எனக் கூறப்பட்டது. மும்பையில் மிருணாள் தாகூர் நடித்த 'SON OF SARDAR 2' படத்தின் ப்ரீமியர் காட்சியில் சிறப்பு விருந்தினராக தனுஷ் கலந்து கொண்டார். இதில் இருந்து தான் இந்த வதந்திகள் பரவத் தொடங்கியது.

தற்போது இருவரும் விரைவில் திருமணம் செய்யவிருப்பதாக இந்தி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தனுஷ் மிருணாள் தாகூர் இருவருமே நீண்ட மாதங்களாக காதலித்து வருவதாகவும், பிப்ரவரி மாதத்தில் திருமணம் செய்யவிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த திருமணத்தில் இருவரது குடும்பத்தினர் மற்றும் நெருங்கிய நண்பர்கள் மட்டுமே கலந்து கொள்ள இருப்பதாகவும் கூறப்படுகிறது.

தனுஷ் ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இருவருக்கும் திருமணமாகி இரண்டு மகன்கள் இருக்கிறார்கள். சில வருடங்களுக்கு முன்பு இருவரும் விவாகரத்து பெற்று தனியே வசித்து வருகிறார்கள். தற்போது தனுஷ் மீண்டும் திருமணத்துக்கு தயாராகி இருக்கிறார்.

நடிகை அபர்ணதி தமிழ் சினிமாவில் வேகமாக வளர்ந்து வரும் நடிகைகளில் ஒருவர். அவர் நடிகர் ஆர்யாவுக்கு பெண் தேட நடத்தப்பட்ட எங்க வீட்டு மாப்பிள்ளை நிகழ்ச்சியில் ஒரு போட்டியாளராக கலந்துகொண்டவர்.

அந்த ஷோவில் கலந்துகொண்ட யாரையுமே ஆர்யா திருமணம் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த ஷோ மூலமாக பிரபலம் ஆன அபர்ணதி அதன் பின் படங்களில் நடிக்க தொடங்கி தற்போது பிரபலமான நடிகையாக இருக்கிறார்.

தற்போது அவர் அழகிய உடையில் எடுத்திருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்கள் இதோ.



# சாரா அர்ஜுனின் புதிய பட டிரைலர்!



நடிகைகள் பூமிகா, சாரா அர்ஜுன் நடித்துள்ள யூபோரியா படத்தின் டிரைலர் வெளியாகியுள்ளது.

ருத்ரமாதேவி பட இயக்குநர் குணசேகரன் இயக்கத்தில் உருவாகியுள்ள இந்தப் படம் வரும் பிப்ரவரி 6ஆம் தேதி வெளியாகவிருக்கிறது.

நீலிமா குணா தயாரிப்பில் உருவாகியுள்ள இந்தப் படத்தில் பூமிகா சாவ்லா முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

இயக்குநர் கௌதம் மேனன் வழக்கம்போல இந்தப் படத்தில் காவலதிகாரியாக நடித்துள்ளார்.

போட்டித்தேர்வுக்குப் படித்திருக்கும் ஓர் இளம்பெண் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட உண்மையான சம்பவத்தை மையமாக வைத்து இந்தப் படம் உருவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

சமீபத்தில் துரந்தர் படத்தில் சாரா அர்ஜுன் நடிப்பு கவனம் ஈர்த்தது குறிப்பிடத்தக்கது.

# கவினின் புதிய படத்தில் இணைந்த சாண்டி!

நடிகர் கவின் நாயகனாக நடிக்கும் 9 ஆவது திரைப்படத்தில் நடன இயக்குநர் சாண்டி முக்கிய கதாபாத்திரத்தில் நடிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர் கென் ராய்சன் இயக்கத்தில் நடிகர் கவின் நாயகனாக நடிக்கும் 9 ஆவது திரைப்படம் உருவாகி வருகின்றது. இசையமைப்பாளர் ஆஃப்ரோ இசையில் உருவாகும் இப்படத்தில் நடிகை பிரியங்கா மோகன் நாயகியாக நடிக்கின்றார்.

இந்த நிலையில், இந்தப் புதிய திரைப்படத்தில் நடிகரும் நடன இயக்குநருமான சாண்டி மாஸ்டர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிப்பதாக, படக்குழுவினர் இன்று (ஜன. 17) சிறப்பு விடியோ வெளியிட்டு அறிவித்துள்ளனர்.

ஏற்கெனவே, பிக்பாஸ் 3 ஆவது சீசனில் போட்டியாளர்களாகக் கலந்துகொண்ட நடிகர் கவின் மற்றும் நடன இயக்குநர் சாண்டியின் கூட்டணி பார்வையாளர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

இத்துடன், கடந்த 2025 ஆம் ஆண்டு வெளியாகி மாபெரும் வெற்றி பெற்ற "லோகா" திரைப்படத்தில் வில்லனாக நடித்த சாண்டியின் நடிப்பு ரசிகர்களின் பாராட்டுகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.





நடிகை ரிது வர்மா தெலுங்கில் பிரபலமான நடிகைகளில் ஒருவர். அவர் தமிழிலும் சில படங்களில் நடித்து இருக்கிறார். கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால், மார்க் ஆண்டனி போன்ற படங்களில் அவர் நடித்துள்ளார். ரசிகர்களை ஹோம்லி லுக்கில் தொடர்ந்து கவர்ந்து வரும் அவரது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை பாருங்க. பட்டு சேலையில் அழகிய போஸ் கொடுத்து இருக்கிறார். அந்த போட்டோக்களுக்கு 50 ஆயிரத்திற்கும் மேல் லைக்குகள் குவிந்து இருக்கிறது.

# 'தலைவர் தம்பி தலைமையில்' அதிகரிக்கும் வசூல்: படக்குழுவினர் மகிழ்ச்சி

'தலைவர் தம்பி தலைமையில்' படத்துக்கு காட்சிகளும், வசூலும் அதிகரித்து வருவதால் படக்குழுவினர் பெரும் மகிழ்ச்சியில் இருக்கிறார்கள்.

நிதிஷ் சகாதேவ் இயக்கத்தில் ஜீவா நடிப்பில் வெளியாகியுள்ள படம் 'தலைவர் தம்பி தலைமையில்'. 'ஜனநாயகன்' வெளியாகாத காரணத்தினால் ஜனவரி 15-ம் தேதி வெளியானது. இப்படத்தின் காமெடி காட்சிகள், கதைக்களம் புதிதாக இருந்ததால் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு பெற்றது.

இதனால் முதல் நாளை விட இரண்டு மடங்கு இரண்டாம் நாள் வசூல் கிடைத்திருக்கிறது. மேலும், திரையிடப்படும் திரையரங்குகள் அனைத்துமே ஹவுஸ்ஃபுல்லாகி வருகின்றன. இதனால் 2026-ம் ஆண்டின் முதல் வசூல் ரீதியான வெற்றி படம் என்ற நிலையை 'தலைவர் தம்பி தலைமையில்' படம் அடையும் சூழல் உறுதியாகி இருக்கிறது. இதனால் படக்குழுவினர் பெரும் மகிழ்ச்சியில் இருக்கிறார்கள்.

இந்த வரவேற்பு குறித்து ஜீவா தனது எக்ஸ் தளத்தில், "என் அன்பான மக்கள் அனைவருக்கும், 'தலைவர் தம்பி தலைமையில்' மீது நீங்கள் பொழிந்த அளவற்ற அன்பு மற்றும் பாசத்தால் உண்மையிலேயே நெகிழ்ந்து போய் இருக்கிறேன். ஒவ்வொரு செய்தியும், விமர்சனமும் என்னை உற்சாகமாக்கி உள்ளது. மேலும், என்னைப் பற்றிய மீம்களுக்கும் கூட. அவை அன்புடனும் ஆதரவுடனும் வந்துள்ளன.

மேலும் அவை இந்த பயணத்தை இன்னும் சிறப்பானதாக ஆக்கியுள்ளன. படம் பார்க்கும், பார்க்கப் போகும் அனைத்துக் கண்களுக்கும், என் நன்றிகள். நிபந்தனைகளைப் பின்பற்றி 'தலைவர் தம்பி தலைமையில்' படத்தினை திரையரங்குகளில் மட்டும் கண்டு மகிழுங்கள்" என்று தெரிவித்துள்ளார்.



# மகளுடன் கமல்ஹாசனை சந்தித்த ஊர்வசி



'முந்தானை முடிச்சு' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமாகி தொடர்ந்து பல படங்களில் நடித்து திரையுலகில் தனக்கென தனி இடத்தை பிடித்தவர் ஊர்வசி. கமல்ஹாசனுடன் பல படங்களில் நடித்துள்ளார். தென்னிந்திய திரை உலகில் ஏராளமான படங்களில் கதாநாயகியாக நடித்து தற்போது குணசித்திர கதாபாத்திரங்களில் ஊர்வசி நடித்து வருகிறார்.

இந்த நிலையில் ஊர்வசி மகள் தேஜலட்சுமியும் சினிமாவில் அறிமுகமாகியுள்ளார். மலையாளத்தில் உருவாகும் 'சுந்தரியாயவள் ஸ்டெல்லா' என்ற படத்தில் கதாநாயகியாக நடித்துள்ள தேஜாலட்சுமி 'பாப்லோ பார்ட்டி' என்ற படத்தில் தாய் ஊர்வசியுடன் இணைந்து நடித்துள்ளார்.

இந்த நிலையில் ஊர்வசியும், மகள் தேஜலட்சுமியும் கமல்ஹாசனை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றுள்ளனர். சந்திப்பின் போது எடுத்த புகைப்படங்களை தனது சமூக வலைதளத்தில் தேஜலட்சுமி பகிர்ந்து வெளியிட்டுள்ள பதிவில், 2001-ம் ஆண்டு நான் குழந்தையாக இருக்கும் போது அம்மா நடித்த 'பஞ்சதந்திரம்' படப்பிடிப்பு தளத்தில் நானும் இருந்தேன்.

அங்கு நான் கோபமாக இருக்கும்போது கமல் சார் என்னை தூக்கி சென்று எனக்கு பிடித்த உணவை ஊட்டி விடுவார். அதனால் நான் அழ மாட்டேன். இது என் வாழ்நாளில் மறக்க முடியாத விஷயம்.

கடந்த ஆண்டு சைமா விருது விழாவில் அவர் அருகில் இருந்தும் என்னால் அவருக்கு ஹாய் கூட சொல்ல முடியவில்லை. இதனால் நான் அழுது விட்டேன். இதையடுத்து என் அம்மா பரவாயில்லை 'மோலே' நாம் ஒரு நாள் அவரை அலுவலகத்தில் போய் பார்ப்போம் என்று கூறினார். அந்த ஒருநாள் மிக விரைவில் வர வேண்டும் என பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன். அந்த நாள் வந்தது. அவரை 10 நிமிடங்கள்தான் சந்தித்தேன். ஆனால் 10 வருடங்களை போல் உணர்ந்தேன் என்று பதிவிட்டுள்ளார்.



நடிகை வாணி போஜன் சின்னத்திரையில் இருந்து சினிமாவில் ஹீரோயினாக வந்தவர். அவரது ஹோம்லி லுக் மற்றும் அழகிய நடிப்புக்கு அதிகம் ரசிகர்கள் இருக்கிறார்கள் என சொல்லி தெரியவேண்டியது இல்லை.

தற்போது வாணி போஜன் பொங்கல் ஸ்பெஷலாக சேலையில் கியூட் போஸ் கொடுத்து புகைப்படங்களை வெளியிட்டு இருக்கிறார். பட்டு சேலை, தங்க நகைகள் என அழகாக அவர் அதில் இருக்கிறார்.

# மார்ச் 6-ல் கதிரின் 'ஆசை' வெளியீடு





கதிர் நடித்துள்ள 'ஆசை' திரைப்படம் மார்ச் 6-ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஷிவ் மோஹா இயக்கத்தில் கதிர், திவ்ய பாரதி, பூர்ணா உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகியுள்ள படம் 'ஆசை'. பேஷன் ஸ்டூடியோஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்தின் பணிகள் அனைத்தும் முடிவடைந்து வெளியீட்டுக்கு தயாராக இருந்தது. சரியான வெளியீட்டு தேதிக்காக படக்குழு காத்திருந்தது. தற்போது மார்ச் 6-ம் தேதி இப்படம் வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

2019-ம் ஆண்டு மலையாளத்தில் வெளியான படம் 'இஷ்க்'. அனுராஜ் மனோகர் இயக்கத்தில் ஷான் நிகம், அன் ஷீத்தல் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். இப்படம் விமர்சன ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் பெரும் வரவேற்பைப் பெற்றது. இப்படத்தின் அதிகாரபூர்வ தமிழ் ரீமேக் தான் 'ஆசை' என்பது குறிப்பிடத்தக்கது.

'ஆசை' படத்துக்கு ஒளிப்பதிவாளராக பாபு குமார், இசையமைப்பாளராக ரேவா உள்ளிட்டோர் பணிபுரிந்துள்ளனர். மார்ச் 6-ம் தேதி வெளியீடு என்பதால் விரைவில் விளம்பரப்படுத்தும் பணிகளை தொடங்கவுள்ளது படக்குழு.

# கட்டணமில்லா வேலைவாய்ப்பு சேவை..!-



நடிகர் விஜய் சேதுபதி மற்றும் சமூக ஆர்வலர் வீரராகவன் ஆகியோர் இணைந்து முன்னெடுத்து வரும் "வள்ளலார் வேலை வாய்ப்பு சேவை இயக்கம்" (VVVSI) இளைஞர்களின் வாழ்வில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.


புதுச்சேரியைச் சேர்ந்த வீரராகவன் என்பவர் ஒரு மத்திய அரசுப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். 2016-ஆம் ஆண்டு முதல் பகுதி நேரமாக வாட்ஸ்அப் குழுக்கள் மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் தகவல்களைப் பகிர்ந்து வந்தார்.

விஜய் சேதுபதி தொகுத்து வழங்கிய ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் வீரராகவன் பங்கேற்றபோது, அவரது சேவையைக் கண்டு வியந்த விஜய் சேதுபதி, "நீங்கள் வேலையை விட்டுவிட்டு முழுநேரமாக இதைச் செய்யுங்கள், உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் நான் செய்கிறேன்" என்று வாக்குறுதி அளித்தார்.

வாக்கு கொடுத்தபடியே, இந்த இயக்கம் ஒரு முழுமையான அலுவலகமாகச் செயல்பட விஜய் சேதுபதி பெரும் நிதி உதவி அளித்தார்.

விஜய் சேதுபதி புதுச்சேரியில் இதற்கான பிரத்யேக அலுவலகத்தை அமைத்துக் கொடுத்து தொடங்கி வைத்தார்.

அங்கு பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் வீரராகவன் ஆகியோருக்கான மாதாந்திரச் சம்பளத்தைத் தனது சொந்தப் பணத்திலிருந்து விஜய் சேதுபதியே வழங்கி வருகிறார்.



நிதி அகர்வால் தராள கவர்ச்சி காட்டி தொடர்ந்து ரசிகர்களை கவர்ந்து வருபவர். அவர் சமீபத்தில் தெலுங்கில் ரிலீஸ் ஆகி இருக்கும் ராஜா சாப் படத்தில் நடித்து இருந்தார். அந்த படத்தில் மூன்று ஹீரோயின்கள் நடித்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

அந்த படத்தின் ப்ரோமோஷன் நிகழ்ச்சிகளில் மிக மிக கவர்ச்சியான உடைகளில் தோன்றி ரசிகர்களை ஆச்சர்யப்படுத்தி வந்தார் நிதி அகர்வால்.

தற்போது பொங்கல் ஸ்பெஷலாக சேலையில் கிளாமர் போஸ் கொடுத்து இருக்கிறார் அவர். புகைப்படங்கள் இதோ.

# தாயை காப்பாற்ற துடிக்கும் மகன் கதையில் கிருஷ்ணா...



ஜெய் அமர்சிங் இயக்கத்தில் பி.ஜே.கிஷோர் தயாரிப்பில் காமெடி மற்றும் பொழுதுபோக்கு ஜானரில் உருவாகும் படம் 'தி மம்மி ரிட்டர்ன்ஸ்'. படத்தின் பூஜை சென்னையில் தொடங்கியது. விழாவில் இயக்குனர்கள் விஷ்ணுவர்தன், ஐ.அகமது ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

படத்தில் கிருஷ்ணா, தேவதர்ஷினி, ஸ்வாதி, கிங்ஸ்லி, லொள்ளு சபா மாறன், பியோர்ன், தீபா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கிறார்கள். படத்தின் படப்பிடிப்பை சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் 2 கட்டமாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

படம் குறித்து இயக்குநர் ஜெய் அமர் சிங் கூறியதாவது:- நான் லண்டனில் ஃபிலிம் இண்ட்ஸ்டிடியூட் படித்து விட்டு சென்னையில் இயக்குநர் அகமதிடம் "என்றென்றும் புன்னகை" படத்தில் பணிபுரிந்தேன். ஆக்சன் படங்கள் அதிகமாக வரும் இன்றைய காலகட்டத்தில் ரசிகர்கள் காமெடி படங்களுக்கு ஏங்குகிறார்கள். எனக்கும் காமெடி படங்கள் தான் அதிகம் பிடிக்கும். எனவே தான் இந்தப்படத்தை முழுக்க முழுக்க ரசிகர்கள் சிரித்து மகிழும் படமாக வடிவமைத்துள்ளேன்.

ஒரு தாயை காப்பாற்ற மகன் என்னவெல்லாம் செய்கிறான் என்பது தான் படம், எமோஷனலான கதையை, மக்கள் வயிறு வலிக்க சிரிக்கும்படி சொல்லப்போகிறோம் என்றார்.

இப்படத்திற்கு முன்னணி இசையமைப்பாளர் சாம் சி.எஸ் இசையமைக்கிறார். மணிகண்ட பாலாஜி எடிட்டிங் செய்கிறார். கார்த்திக் சுப்பிரமணியன் ஒளிப்பதிவு செய்கிறார் என்றார்.




1. வெற்றி வந்தால் பணிவு
அவசியம் தோல்வி வந்தால்
பொறுமை அவசியம்
எதிர்ப்பு வந்தால் துணிவு
அவசியம் எது வந்தாலும்
நம்பிக்கை அவசியம்

2. சாம்பலாக இருந்தாலும்
சரியான இடத்தில் இருந்தால்
தான் அதற்கு பெயர் விபூதி

3. இரண்டு விஷயத்தை
நன்றாக புரிந்து
கொள்ளுங்கள் மனநோய்
உடன் போராட வேண்டும்
பயப்படக்கூடாது
மனைவியிடம் பயப்பட
வேண்டும் போராடக்கூடாது
இரண்டுக்கும்
இதுவரை மருந்து
கண்டுபிடிக்கப்படவில்லை

4. ஜனனம் கடவுளின்
படைப்பு மரணம் கடவுளின்
அழைப்பு இடைப்பட்ட
வாழ்க்கை மக்களின் நடிப்பு

5. நல்ல உறவு என்பது
கடிகாரத்தின் முட்கள்
போன்றவை அவை சில
நேரங்களில் மட்டுமே
சந்திக்கும் ஆனால்
எப்போதும் இணைந்தே
இருக்கும்

6.காரணம் சொல்லி மழுப்பும்
இடத்தில் கேள்விகள்
கேட்காமல் இருப்பதே மேல்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

---

எப்படி பார்த்தாலும்
அழகாய் தான் தெரிகிறாய்
ஒருவேளை அந்த காதல்
என்னும் வைரஸ் என்னையும்
பிடித்து விட்டதோ
என்னவோ?!

வா அருகில் வா என்றாய்
வந்த பின் குழந்தை மனசு
இப்போது சிலுவை
சுமக்கிறது!

உன் பார்வையால்
உடையும்
அந்த பாவப்பட்ட
மனசை



எந்த டெம்பர் கிளாஸ் போட்டு
காப்பது?!

கனவில் அழைக்கிறாய்
நிஜத்தில் விரட்டுகிறாய்
இந்த பாழாய் போன கனவு
நிஜமானால் தான் என்ன?!

வெண்பொங்கல் சக்கரைப்
பொங்கலானது–உன்
தேனிதழ் பட்டு!

நீ எச்சம் வைத்த தேநீரில்
இன்னும் மிச்சமிருக்கிறது?
தித்திப்பு!

**லி.நௌஷாத் கான்**

---

## ஒரு கோலத்தின் முதல் புள்ளி

இருவர் மனங்களிலும்
ஆசையோடு பிசைந்த
கனவுகள் ததும்ப
ஆரம்பித்தன!

அவன் சொல்லட்டுமே என
அவளும் அவள் சொல்வதே
பாதுகாப்பானது என அவனும்
மௌனம் காத்தனர்!

காலங்காலமாய்க் கடல
லைகள் மோதக் கற்
கோயில் கூடக் கரையும்
என உணர்ந்து போல் அவள்
தன்பார்வையை அவன்
கண்களில் சுவர் முழுவதையும்
மறைக்கும் சுவரொட்டிபோல்
பதிய வைத்தாள்.

உள்ளிருக்கும் பறவைக்
குஞ்சின் கூரிய அலகு
கீறலில் கணநேரத்தில் ஓடு
உடைவது போல் அவள் மனம்



அவனிடமும் அவன்
மனம் அவளிடமும்
பேதமறக் கலந்தன.

**எஸ் சந்திரசேகரன் அமுதா**
செஞ்சிக்கோட்டை

---



## சித்த மருத்துவம்

(நிலைமண்டில ஆசிரியப்பா)

சித்த மருத்துவம்
சிறந்த மருத்துவம்
வித்தக மானால்
வெற்றி மகத்துவம்!

வாதம் பித்தம் வந்திடும்
கபத்தை ஒதும் சித்தமே
ஒண்மையாய்த் தானே!

காய கல்பம் கனிவாய்
முதியோரை நேய மாகவே
நேர்ந்து காத்திடும்!

இயற்கை முறையில்
இனிதாய்க் கிடைக்கும்
நயன்மைத் தாவரம்
நல்கும் மூலிகை!

உணவே மருந்தாய்
மருந்தே உணவாய்
மணக்கும் வகையில்
மாண்பாய் விளங்கும்!

சித்த மருத்துவத்தின்
சீர்தந்தை அகத்தியர்
முத்திரை பதித்தார்
சித்த மருத்துவத்தில்!

தமிழில் காணும்
தக்க மருத்துவம்
கமழும் சித்தமாய்க்
காணும் சிறப்புடன்!

நோயை நாடி நோய்முதல் நாடி
நோயைப் போக்கும்
நுண்ணிய சித்தாவே!

## எல்லாரும் இன்புற்றிருக்க!

(எண்சீர் மண்டிலம்)

எல்லாரும் மகிழ்வோடு
வாழ வேண்டும்
எல்லாரும் இன்பத்தில்சூழ
வேண்டும்! நல்லோராய்
எல்லாரும் வாழ வேண்டும்
நனிசிறந்த மாந்தராகச்
சூழ வேண்டும்!
பல்லோரும் புகழ்ந்திடவே
வாழ வேண்டும் பாங்கான
வாழ்வுதனில் சூழ வேண்டும்!
நில்லாமல் ஓடியோடி
உழைக்க வேண்டும்
நேர்மைக்கு முதலிடமே
தரவே வேண்டும்!

பிறந்தவர்கள் எல்லாரும்
சிறப்பாய் வாழ்ந்து
பெருமைதனை வாழ்வினிலே
கொள்ள வேண்டும்!
இறக்கும்வரை சிறப்பாக
வாழ்ந்து விட்டால்
ஈடில்லாப் புகழ்நிலைக்கும்
ஈங்கு தானே! பொறுப்பான
செயல்களையே
செய்து வந்தால் பொலிவான
வாழ்வைத்தான்
அடைய லாமே!



அறந்தன்னை
வாழ்வினிலே
கையில் கொண்டால்
அழகான வாழ்வமையும்
கொள்வோம் நாமே!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

---

1. கசப்பு இல்லாவிடில்
இனிப்புக்கு மகிமை இல்லை
துன்பம் வராவிடில்
இன்பத்திற்கு மகத்துவம்
இல்லை தோல்வி இல்லாவிடில்
வெற்றிக்கு வரலாறு இல்லை
இதை புரிந்து கொள்ளா விடில்
வாழ்வதில் அர்த்தம் இலலை

2. ஒரு ஏமாற்றம் தனிமையை
தேட வைக்கும் ஒரு துரோகம்
ஒதுங்கிப் போக வைக்கும்
ஒரு அவமானம் புதுபாதையை
உருவாக்க வைக்கும்

3. எல்லாம்
தெரிந்தாலும்
எதுவும் தெரியாதது
போல் இருந்து விடு
அந்தப் பண்பு மேலும்
பலவற்றை
கற்றுத்தரும்

4.இறைவனுக்கு மனதை
கொடு இருப்பவனுக்கு
அன்பை கொடு
இல்லாதவனுக்கு கை கொடு

5. குறை சொல்பவர்களுக்கு
நன்றி சொல்லுங்கள்
ஏனென்றால் உங்களை
நீங்களே செதுக்கி
கொள்வதற்கு அவர்கள் தான்
உளி கொடுக்கின்றனர்



6. மனதில் இருப்பதை
அப்படியே பேசிப் பார்
உறவு என்று
சொல்லிக்கொள்ள
ஒருவர் கூட இருக்க
மாட்டார்கள்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

---

ஒரு அறுவடைக்கு
முன்னான வயல் வெளியில்
கதிர்களின் நடுவே
நீ முகிழ்த்தாய்..
வரப்பில் உன் கால் தடம்
பார்த்து வந்து போன சேதி
அறிவேன்.. உன் வரவால்
விளைச்சல்
இரட்டிப்பானதாய்ப்
பூரிக்கிற விவசாயி தான்
நானும்.. வைக்கோல் பற்றிக்



கொள்ள இந்த
உரசல்கள்
போதாது..
வானம் கண்
சிமிட்டா
இரவுகளில்
வா !

**ரிஷபன்**

---

## என்ன மாயமோ.?

நிதம் கட்டுத்தறியில்
அதம்பரிக்கும்...
முட்டுச்செவலைக் காளை...
மாட்டுப் பொங்கலன்று...
முரட்டுத்தனம் நீங்கி...
கரும்பச்சை கரும்புச்சோலை
கண்ணெதிரே இருந்தும்...
தலைதூக்கி துழாவாமல்..
கால்மடக்கி பவ்யமாக
படுத்துக்கிடந்தது ... வீட்டு
வாசலில்..மகள் வரைந்த
கோலத்தில்.!

**க.குமாரகுரு,**
மயிலாடுதுறை

---

## அவள்

அழகைப் படைத்தவரும்
உன்னைப் படைத்தவரும்
ஒருவராகத்தான்
இருக்க வேண்டும்.

அணிவகுத்து
பின்னால் நிற்கின்றன
ஐம்பது வார்த்தைகள்,
உன் ஒரு 'உம்'முக்கு
அர்த்தம் சொல்ல.

**கே. பி. ஜனார்த்தனன்**

---

காதலிக்கும்போது நீ
தித்திக்கும் கரும்புக்கட்டு!
கல்யாணத்திற்குப் பிறகோ
உன்னோடு
தினம்தினம் ஜல்லிக்கட்டு!



அடடா!
எத்தனை
அழகு...
காளைக்குத்
திமிலும்
உனக்குத்
திமிரும்!

**சு அருண் பிரகாஷ்**
இராமச்சந்திரபுரம்

---

## "ராணுவ வீரனின் வீர மகள்"

என் வீட்டினுள்
இன்று தந்தை இல்லை...
ஆனால் எல்லை மண்ணில்
அவரின் சுவாசம்
நிறைந்திருக்கின்றது!

அந்நியரின் காலடி
நம் மண்ணைத் தொட்ட
இரவில் அவர் மனதில்
என் நினைவில்லை
தேசத்தின் நினைவை
மட்டுமே
நெஞ்சில் ஏந்திப் புறப்பட்டார்!

திரும்பி வராத பயணமது
என்றறிந்தும் அம்மாவின்
கண்ணீர் கடந்து
என் நெற்றியை
முத்தமிட்டுச் சென்றார்.

இன்று அவரின்
படம் முன் நிற்கிறேன்!

நான் அழவில்லை!
அழவும் மாட்டேன்!
"தந்தையை இழந்தாயே?"
என்பவர்களிடம்
தலையுயர்த்திச் சொல்வேன்
"இல்லை... ஒரு வீரனை
தேசத்துக்கு வழங்கினேன்"
என்று!

என் கண்களில்
கண்ணீர் இல்லை, அவை
பெருமையின் தீபங்கள்.
என் இதயம் உடைந்ததில்லை,
அது தேசத்தின் வரைபடமாக
விரிந்திருக்கிறது.

அவர் தந்தை மட்டும் அல்ல...



இந்த
மண்ணின்
நிமிர்ந்த
கோபுரம்!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

---



## ஆவி சேர்ந்த ஆனந்தம்

முகில் இழைத்த கன்னங்
கரிய குழலோ

அகிற் புகை மணங்கமழ
மெல்ல அசையும்!

மயிற்பீலி சேர்த்ததை முடிந்த
அழகில்
மன மோகித்து மதி மயங்கிக்
கிடக்கும்!

விழி மூடி கண்ணன்
நினைவில் லயித்து
கண்கள் இன்னும் கசிந்து
கிறங்கி மெல்ல சிலிர்க்கும்!

மலர்மாலை தரித்த குளிர்
மேனி,
கோதை சூடிக்கொடுக்க
இன்னும் குளிரும்!

தங்க மகுடம் தாங்கும்
அந்த சிரசில், தங்கம் கர்வம்
கொண்டு கவி பாடும்..!

உந்தன் அங்கம் தழுவும் பட்டு
ஆடை கண்டு ஆயர் பாடி மிக
ஏங்கும்!

கொவ்வைச் சின்ன
செவ்விதழின் நகையில்...
முத்து மின்ன மறந்து மையல்
கொள்ளும்!

விண்ணில் நீந்தும்
வெண்ணிலவும் தயங்கி
உன்னைக் கண்டு குளிர
நிற்கும்..

மின்னும் தாரா கணங்கள்
எல்லாம் குழைந்து உன்னில்
மாலையாக மண்ணில்
இறங்கும்

எண்ணம் ஏதுமறி யாத இந்த
யாவும், உன்னைப் பின்னிப்
பிணைந்து கடைத்தேற....

இன்னும் என்ன நான்
சொல்லவோ வேண்டும்,
ஏழை உள்ளக் கிடக்கை யது
தன்னை...!
.
நீலக் கண்ணன் மலர் பாதந்
தன்னில்
மாயக் கால நேரம் எதையுங்
கருதாது,
பல ஜென்மம் எடுத்த பயனாக
பாவியாவி சேர்த்துக் கொள்ள
வேணும்

**மீனா சேகர்**

---

# நூல் விமர்சனம்

நூல்:மரபின் வேர்கள்
(சொல்லாய்வுக் கவிதைகள்)
நூல் ஆசிரியர் : பாவலர்
கருமலைத் தமிழாழன்
நூல் மதிப்புரை:
கவிஞர் இரா.இரவி
வெளியீடு : வசந்தா பதிப்பகம்,
21/166, ஆர்.கே. இல்லம்,
வசந்த நகர்,
ஓசூர்–635 109. கிருட்டினகிரி
மாவட்டம்,
அலைபேசி : 94434 58550.
பக்கங்கள் 160, விலை ரூ. 200




தமிழகத் தமிழாசிரியர் கழகத் தலைமைப் பெரும்புலவர் ப,அரங்கசாமி அவர்கள் அற்புதமான அணிந்துரை நல்கி உள்ளார். நூலாசிரியர் பாவலர் கருமலைத் தமிழாழன் அவர்கள் என்னுரையும் எழுதி உள்ளார். மரபுக்கவிதை எழுதுவதில் முடிசூடா மன்னராக விளங்குபவர். மரபுக்கவிதை போட்டி எங்கு நடந்தாலும், கடல்கடந்து நடந்தாலும் முதல்பரிசை வெல்பவர். மரபுக்கவிதை வடிப்பதில் நன்கு புலமை பெற்றவர்.

மதுரைக்கு வந்தபோது நூலாசிரியர் அவர்களைச் சந்தித்து வரவேற்று உரையாடினேன். அப்போது அவர் புலனம், முகநூல் இவற்றில் ஈடுபடவில்லை என்றார்கள். அவரிடம் நான் எடுத்து இயம்பினேன், மிகவும் எளிது, கற்றுக்கொள்ளுங்கள், உங்கள் படைப்பு உலகெலாம் பரவும் என்றேன்.இன்று நன்கு கற்று, கவிதைக்காக புலனக்குழு தொடங்கி மரபுக்கவிதையை வளர்த்து வருகிறார். பல்வேறு இதழ்களிலும் குறிப்பாக சிற்றிதழ்களிலும் மரபுக்கவிதை எழுதி வரும் மாண்பாளர்.

சிற்றிதழ்கள் பல கொரோனா காலத்தில் நின்றுவிட்டன. சிலமட்டுமே வந்து கொண்டிருக்கின்றன. அந்த சிலவும் நிற்கும்வண்ணம் அஞ்சல்துறை பல கெடுபிடிகள், அபராதங்கள் விதித்து, சிற்றிதழ்களின் குரல்வளையை நெறித்து வருகிறது. தமிழர்கள் இனி இதற்காகவும் குரல் கொடுக்க வேண்டும், போராட வேண்டும். சிற்றிதழ்கள் தான் தமிழை, இலக்கியத்தை வளர்த்து வருகின்றன.

நூலாசிரியர் 28 ல்கள் எழுதி உள்ளார். அனைத்துமே மரபுக்கவிதை நூல்கள் தான். புதுக்கவிதைக்கு மாறாத மரபு பற்றாளர், கொள்கையாளர். இவரால் தான் தமிழ் வாழ்கிறது, வளர்கிறது. கவிதையின் தலைப்பிலே அவரது தமிழாற்றல் புலப்படுகின்றது. மனதை-மனத்தை, மனமார-மனமாற, மங்கலம்-மங்களம், தன்னலம்-தந்நலம், கைம்மாறு-கைமாறு, நாள்கள்-நாட்கள், ஏழ்மை-ஏழைமை - இப்படி தலைப்பிலேயே சொல் விளையாட்டு போல, கவிதை விளையாட்டு விளையாடி உள்ளார். பதச்சோறு சில மட்டும், உங்கள் பார்வைக்கு.

மரம் - மறம்

இடையினமே நம்மினத்தைக் காக்கும்; வானவில் இருள்நிறத்தில் கூடுகின்ற முகில்கூட்டத்தைத் தடைசெய்து மழையாகப் பொழிய வைத்துத் தன் காலால் மண்ணரிப்பைத் தடுத்து வைக்கும் குடையாக நிலந்தன்னைக் காத்து நின்று, குளிர்வெயிலைச் சமன் செய்து பாதுகாக்கும் படையாகிக் காற்றினிலே கலக்கும் மாசைப் பான்மையுடன் தூயதாக்கும் மரங்கள் தாமே.

மரம் மழைக்குக் காரணமாகின்றது. மரம் வளர்த்தால் மழை பெய்யும், மரம் வெட்டினால் மழை பொய்க்கும் என்று மரத்தின் அறத்தை மரபுக்கவிதையால் வடித்து மரத்திற்கு மகுடம் சூட்டி உள்ளார் நூலாசிரியர். இப்படி பல்வேறு தலைப்புகளில் கவிதை வடித்து மரபின் மீது வாசகர்களுக்கு ஈர்ப்பை வரவழைத்து வெற்றி பெறுகின்றார்.

மரபின் வேர்கள் என்ற நூலின் தலைப்புக்கு ஏற்ப மரபின் வேர்கள் ஆழமானவை, உறுதியானவை. வேர்கள் தான் மரத்திற்கு உறுதி. அதுபோல மரபுக்கவிதையே தமிழ்மரத்தின் வேர்கள் என்பதை மெய்ப்பிக்கும் விதமாக மரபுக்கவிதை விருந்து வைத்துள்ளார்.

நூலின் அட்டைப்பட வடிவமைப்பு நன்று. முகப்பு ஓவியம் மரபை நினைவூட்டுகின்றது, நூபின்அட்டையில் லாசிரியர் கம்போடியா நாட்டின் உயரிய விருதினை அங்கு சென்று பெற்ற புகைப்படம் உள்ளது. பாராட்டுகள், வாழ்த்துகள் ஐயா. ஐவகை நிலங்கள் பற்றியும் பாடி உள்ளார். தனித்தனியே தலைப்பிட்டு எழுதி உள்ளார். தமிழரின் வேர் ஐவகை நிலம் தானே. பதச்சோறாக நெய்தல் திணையிலிருந்து :

நெய்தல் திணை

மீன்கோட் பறையில் ஒலியெழுப்பி விளரி யாழில் இசையெழுப்பி தேன்போல் செவ்வழிப் பண்ணிசைத்து சேர்ந்து பரதவர் ஆடினரே! உப்பு விளைவித்து விற்பதுவும் உறுமீன் பிடித்து விற்பதுவும் உப்பில் மீனை உணக்குவதும் உரிய தொழிலாம் நெய்தவர்க்கே! நெய்தல் நிலத்தை கவிதை வரிகளால் காட்சிப்படுத்தி மீனவரின் வாழ்வை உணர்த்தி உள்ளார்.

மீனவரின் வாழ்வாதாரமான மீன்பிடித்தலை செய்யவிடாமல் துன்புறுத்தி வருகிறான் இலங்கைக்காரன். சுண்டைக்காய் நாட்டுக்காரன் தினமும் கைது செய்கிறான் தமிழக மீனவனை. தட்டிக்கேட்க நாதியில்லை. மீனவரை கைது செய்து சிறையிலடைத்து படகுகளை கைப்பற்றி வரும் ரவுடி இலங்கைக்கு கோடிகளை தாரைவார்த்து பாம்பை வளர்த்து வருகின்றது ஒன்றிய அரசு. கவிதையைப் படித்தவுடன் இவையும் நினைவிற்கு வந்தது.

தலை

தலை சரியாய் இருந்தால்தான் வீடும் நாடும் தள்ளாட்டம் இல்லாமல் நிமிர்ந்து நிற்கும் தலையாட்டம் இன்றி, வால் தான் ஆட்டம் போட்டால் தடுமாற்ற மாகியெல்லாம் தலைகீழ் ஆகும், தலையென்றால் தலைமையாகும் முத்துமாகும் தலைவர்கள் நல்லோராய் இருந்தால் எந்த நிலைவரினும் நம்நாடு தாழ்ந்திடாது நிலையோங்கும் தலைநிமிர்ந்து நிற்கும் பாரில்!


தலை சரியாக இருந்தால்தான் நாடு சரியாக இருக்கும் தலை மக்கள் நலன் பெரிதாகப் பாராமல் தன்நண்பர்கள் நலமே முக்கியம் என்று செயல்பட்டால் நாடுமக்கள் திண்டாட வேண்டியது தான்- பொதுசொத்தை எல்லாம் நண்பனுக்கு தாரைவார்க்கும் அவலம் ஒழிய வேண்டும். இப்படி பல சிந்தனைகளை விதைத்தது கவிதை. இப்படி கருத்துள்ள கவிதைகள் நூல் முழுவதும் நிறைந்துள்ளது. நூலாசிரியர் மரபுச்செம்மல் பாவலர் கருமலைத் தமிழாழன் அவர்களுக்கு பாராட்டுகள்.

---

## திருநள்ளாறு சனி!

என்னை பிடிக்காத ஒருவர்
எரிச்சலுடன் என்னை
திட்டினார் திருநள்ளாறு
சனியேயென்று எனக்கு
கோபமாக வந்தது நான்
அதுவரை பார்த்ததில்லை
திருநள்ளாறு சனியை
அந்த சனி
எப்படியிருக்கும்
பார்க்கவே பயங்கரமாக
இருக்குமோயென்று
மனதில் ஏக குழப்பம்
வருத்தம் பார்த்தே
ஆகவேண்டும்

அந்த பொல்லாத
சனியையென்று புறப்பட்டேன்
காரைக்கால் திருநள்ளாறு
பார்த்தேன் அந்த
திருநள்ளாறு சனியை
சாந்தமுகத்துடன் காக்கை
வாகனனாக காட்சியளித்தார்
அவர் அவரைப்பார்த்த



அடுத்த வினாடியே
என்னை திட்டிய
அந்த எதிரி
எனக்கு நண்பனாக
தெரிந்தார்!

**சின்னஞ்சிறுகோபு,**
சென்னை.

---



## "ஜோதிடக்கிளியின் நக்கல்".

மனிதா...
கூண்டுக்குள்ளே நான்...
வெளியிலே நீ யோசிச்சுப்
பார்த்தா.. சிக்கி இருக்குறவன்
நீதான்!

கண்ணை மூடிச்சீட்டெடுத்து
காரணமின்றிக்"கீச்"சென்பேன்!
அதையும் மொழிபெயர்த்து
உன் வாழ்க்கையை
எழுதுவான் ஜோதிடன்!

நாளை நல்ல நாளாம்,
அப்புறம் கெட்ட நாளாம்
நான் சொன்னது ஒண்ணும்
இல்லை அவன் கற்பனைதான்
எல்லாமே!

ஆறறிவு மனிதன் நீ...
ஐந்தறிவுப் பட்சி நான்...
உன் முடிவெடுக்க
என்னை நம்புற பாரு..
உன் மூளைக்கு
இன்னும் முகவுரையே
எழுதப்படலையோ?

நான் பசியில கத்துறேன்
நீ பயத்துல நம்புறே
இரண்டுக்கும் நடுவில
அவன் காசு எண்ணுறான்!

ஆறறிவு மனிதா,
உன் எதிர்காலத்துக்கு
கிளி தேவையில்லை.
ஒளிதான் தேவை... அதை
ஏற்று அதுவே தரும் ஏற்றம்!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்




## சொத்து !

நீ எழுதி எழுதி என்ன
சாதித்தாய் என்றார்கள் பலர் !

என் உணர்வுகளை
எழுத்துருவில்
வெளிப்படுத்தியதால்
மனதில் நிம்மதி அடைந்தேன்
என்றேன் நான் !

என்ன சம்பாதித்தாய்
என்றார்கள் !

நட்பும், சுற்றமும் என்னை
வாழ்த்துவதே என்
சம்பாத்தியம் என்றேன் !

எத்தனை சொத்து சேர்த்தாய்
என்றார்கள் !

என் குடும்பம் வாழ
உழைக்கின்றேன் அதுவே
போதும் என்றேன் !

இதோ இக்காணும்
அடுக்குமாடி குடியிருப்பும்,
இந் நிலமும், உயர்ரக வாகனம்
அனைத்தும் என் சொந்தம்,
ஏழேழு பரம்பரைக்கும்
எனக்கு சொத்து இருக்கிறது
என்றார்கள் !
நான் சிரித்தேன் !
அது உம் சொத்தல்ல உம்
பரம்பரையால் உமக்கு
வந்த சொத்து ! உமக்காக
சொத்தை ஈட்டியவர்களும்
மண்ணில் மாய்த்து
விட்டார்கள் !
இது என் சொந்தம் என்ற
நீங்களும், நானும் இந்த
சிறு கைப்பிடி அளவு
மண்ணுக்குதானே
சொந்தமாகப் போகிறோம் !
வாழும் சிறு வாழ்க்கையில்
ஏதேனும் படைத்து விட்டுப்
போவதில் நான் நிம்மதி !
காண்கிறேன் எனக்கு அந்த
சொத்தே போதும் என்றேன் !

எம்.பி.தினேஷ்.
கோவை



## தை பிறந்தால்...!

இனி எல்லா வளமும்...
நலமும் கொண்டு
நாளும் தமிழ் தேசம்
தன்னிறைவு காணட்டும்!

என்றும் வந்தாரை...
வாழ வைக்கும்
தமிழர் நெஞ்சமெல்லாம்
வந்து வசந்தம் வீசட்டும்!

புத்துணர்ச்சியுடன்...
புதுப்பொலிவுடன்
முகமலர்ச்சியோடு
உறவுகள் கலக்கட்டும்!

முரட்டுக்காளையுடன்...
மல்லுக்கட்டும்
இளைஞர்களின்
ஜல்லிக்கட்டு வீரம்
இப் புவியை ஆளட்டும்!

புது பானையில்...
மகிழ்வுடன் பொங்கிய
பொங்கலின் வாசம்
காற்றில் மணக்கட்டும்!

நம் கனவுகள் யாவும்...
கதிரவன் ஒளிதனில்
பொன் எழில் கொண்டு
பிரகாசமாய் மலரட்டும்!

உழைத்து உழைத்து...
துரும்பாய் போனவர்
வாழ்வெல்லாம் யின்று முதல்
கரும்பாய் இணைக்கட்டும்!

நெஞ்சகத்தில் தனியே...
உருகும் உயிரெல்லாம்
பால் போல் வழிந்து அன்பாய்
ஒன்று கூடி வாழட்டும்!

தை பிறந்தால் வழி...
பிறக்கும் நன்னாளாம்
பொங்கல் திருநாளில்
புது விடியல்
பிறக்கட்டும்!



கவிஞர்
ஜெ.ம.புதுயுகம்
பண்ணந்தூர்



## ஒரு பால்ய காலப் பயணம்

நாற்பது ஆண்டு
பின்னோக்கி ஓடுகிறது
என் பால்ய காலத்துப்
பெருவழி! இன்று உலகமே
வியந்து பார்க்கும் பாலமேடு
அன்று என் கண்களுக்கு...
வெறும் வரிசை மாட்டு
வண்டிகளின் திருவிழா!
தெரிந்தவர் வண்டிச் சக்கரம்
பிடித்து ஏறி அமர்ந்த அந்தத்
தகப்பு... வாடிவாசலை
நோக்கிய என்
பார்வையில்
அன்று வீரம்
தெரியவில்லை,
என்னவென்றே புரியாத
ஒரு ஆவல் மட்டுமே!
கூட்ட நெரிசலில் காணாமல்
போய்விடாதிருக்க
என் ஆச்சி கைகளில்
தினித்த அந்தத் தித்திக்கும்
கரும்புத் துண்டுகளும்,
மடியில் கொட்டித் தந்த
பொரி மூட்டையும்...பாலமேடு
மஞ்சிவிரட்டை விட – அன்று
அவள் காட்டிய பாசம் தான்
எனக்குப் பெரிது! இன்று...
தொலைக்காட்சிப்
பெட்டிக்குள்
வண்ணத் திரையில்
விவரமாகப் பார்க்கிறேன்;
காளைகளின் திமிலும்,
காளையர்களின் வீரமும்
துல்லியமாகத் தெரிகிறது!
இருந்தாலும் – திரைக்குப்
பின்னால் மெல்ல
நிழலாடுகிறது...
மாட்டு வண்டி மேட்டில்
அமர்ந்து ஆச்சியின்
கரும்பு தின்ற அந்தப்
பழைய பாலமேடு!



ப.நந்தகுமார்
காங்கேயம்



## காளை நமக்குத் தோழன்

காளை நமக்குத் தோழன்!
பசுவும், கன்றும் தெய்வம்!
தைப் பொங்கல் வைத்தோம்!
தாயன்பை உணர்ந்தோம்..
ஆநிரைகள் வடிவினிலே..!

முன்னோர்கள் தானே பிறந்து
வந்தார்..! கண்முன்னே
மாடு யென காட்சித்
தந்தார்!தன்அன்பைப் பாலாய்..
தன் உழைப்பை நமக்காய்..
குன்றாமல் குறையாமல்
அள்ளித் தந்தார்!

உழவர் வயல் ஏர் உழுதே
உனது பாரம் தனைச்
சுமந்தே.. மண்ணுலகில்
மறுபடியும் பிறந்த ஜீவன்..
தாய்தந்த அன்பினையே
தன்னுருவில் வழங்க வந்த..
பண்பின் உருவம்!

பசுமாடு இறையருள் வாழும்
இல்லம்.. காளைகளோ
தியாகத்தின் திறந்த
உள்ளம்.! மண்ணுலகில்
மாந்தர்களின் அன்புக்கு
ஏங்குகிற.. ஜவன்களை
பொங்கல் வைத்து
வணங்கிடுவோம்.!

வே.கல்யாண்குமார்.

## எதிர் நிற்கும் பூதம்

மரம் அளவு உயரமாக
அசிங்கமான தோற்றத்தில்
உடலும் மனமும் இருள்
மண்டிக் கிடக்க நின்று
கொண்டிருக்கிறது ஜாதி
பூதம்!

அதை எதிர்ப்படும் எல்லா
மனிதர்களும் எறும்பு போல்
இருக்கிறார்கள்

மனிதர்களை மட்டுமே
விரும்பி உண்ணும் அந்த
விநோத விலங்கை மோதிப்
பார்த்த பலருக்கு மண்டை
உடைந்ததுதான் மிச்சம்1


எல்லா காதல் ஜோடிகளும்



அதற்கு
அல்வாத்
தூண்டுகள்!
அது
விழுங்காமல்
விட்டதில்லை

அது என்றும்
அறிவாளிகளைக் கூட அ
கொண்டிருக்கிறது!

எஸ். சந்திரசேகரன்
அமுதா
செஞ்சிக்கோட்டை



## தவமும் நீர் பந்தல்

" வெற்றிப் பனி உருகி
துள்ளித் துள்ளி குதித்து
குதித்து அலை அலையாய்..."

நீரின் தவழ்ந்து வரும் அழகும்
நீர்வீழ்ச்சியின்
அதித வேகமும் .... "

மலைப் பாறையில் விழுந்து
எழும்பும் சுறுசுறுப்பும்
தெரிக்கும் நீர் துளிகளும் ...."

நடை போட்டு நடனமாடி
பெண் போல நாணம்
கொண்டு தலைகாட்டும்
நீரோடை ..."

நுரையை பொங்கி நீர்க்குமிழி
வெடித்து பொங்கும்
புது வெள்ள நீர் பாயும்
அழகே தனிதான் ..."

பெண் கூந்தல் வீணைக்
கம்பிபோல நெளிந்து
வளைந்து ஓடி
வரும் நீர் அழகு ......"

பாறையை வருடி
முட்டி மோதி மனலாய்
மாற்றும் நீரின் தனித் திறமை
அபாரமானது ...."

சரிந்து நெடு தூரம் பாய்ந்து
வரும் நீரின் பாய் விரிப்பு
நீர்பாய் ரம்மியம் ..."



இயற்கையின்
படைப்பும்
அழகும்
சொல்லில்
அடங்கா
சொக்க வாசல்
அன்றோ ......"

ஆர். சீதாராமன் , சீர்காழி

## மணியோசையில் ஆனந்தம்...

மணியோசையில் உள்ளம்
மகிழுமே... குறைந்த கீதத்தில்
கரையுமே சோகம்
தென்றலின் குரலை கேட்கும்
போது மனம் மகிழுமே
விடியலின் அன்பான
அழைப்பு கதிரவன்
ஆலயத்தில் ஒலிக்கும்
மணியோசையில் ஆனந்தமே
அதுவே என் இதயத்துடிப்பு
என்பதால் பேரானந்தமே
துயரம் எனக்கு இனி
இல்லை என்று மணியோசை
உணர்த்துகிறதே...
இதுதான்... மகிழ்ச்சியை
மட்டும் அள்ளித் தருமே..
சின்ன மணியோசை பெரிய
நம்பிக்கைக்கு அஸ்திவாரம்



ஓசையை
கேட்பதில்
ஆசைகள்
நிவர்த்தி
யாகிறதே....

உஷா
முத்துராமன்



## டைம்பாஸ் காதல் !

என் ஆசையும் கனவெல்லாம்
நீ என் வாழ்க்கை
துணையானால்...
பாதங்களை தழுவும் அலை
கடல் போல் உன்னைத்
தழுவிக் கொண்டே இருக்க
வேண்டும் என்பதே !

ரயில் பாதையை போல்
இணைபிரியாமல்
உன்னுடன் பயணித்துக்
கொண்டிருப்பேன்....

கவிதை எழுதும்
ஒவ்வொருவருக்கும்
வர்ணிக்க ஏதாவது ஒன்று
தேவைப்படுகிறது... எனக்கு
நீ மட்டும் போதும் !

கைப்பேசியில் நான் உனக்கு
அனுப்பிய கவிதைகளில்
ஒற்றை டிக்கை கண்டு மனம்
வருந்திய எனக்கு...
நீ என் கவிதைகளை
வாசித்துவிட்ட இரண்டு
நீலக்கோடுகளை காணும்
போது . என் கவிதைகளை.
வாசிப்பது நீயானால்
என் ரத்தத்தால் கூட எழுதி
அனுப்ப முடிவு செய்தேன் !

ஆனால்....என் கவிதைகளை
வாசிக்கும் நீ அதை ரசிக்க
மட்டுமே செய்கிறாய்...
என்று அறிந்தபோதுதான்
இது ஒரு " டைம் பாஸ் '
காதல் என்பதை உணர்ந்து
கொண்டேன் !

உனக்கு அனுப்பிய
கவிதைகளை
பத்திரிகைகளில்
அனுப்பியிருந்தால் கூட என்
கவிதை பிரசவித்திருக்கும்....



ஆனால் நீ
என் காதலை
கருவிலேயே
கலைத்து
விட்டாயடி !

எம்.பி.
தினேஷ்.
கோவை



## குருவி கூட்டில் மனிதன் வீடு

தென்றல் தொட்டு ஆடும்
அடர்த்து படர்ந்த மரத்தில்
"கூடு" கட்டி வாழ்ந்து வந்தது
ஒரு குருவி !

அந்த மரத்தை வெட்டி
அவ்விடத்தில்
"வீடு" கட்டினான் ஒரு
மனிதப்பிறவி !

குருவி அந்த வீட்டினுள்ளே
மீண்டும் கூடு கட்டி வாழ்ந்து
வந்தது ! தன் "கூடு" இருந்த
"நினைவிலே "



மனிதன் அந்த
குருவியைப்
பார்த்து என்
"வீட்டில்"
மீண்டும் கூடு
கட்டி விட்டாயா
என்று
நினைக்கிறான் ! "மனதிலே "

G.A.கோவிந்தராஜ்
(எ)சுரேஷ்குமார்
திருப்புவனம் புதூர்

## உழைப்பு

திடமான தேகத்தை
பெற்றிருப்பதே கறுகறுப்பு
நெருப்பில் சோம்பலைச்
சாம்பலாக்கி முன்னேற்றப்
பாதைகளில்
கோலமிடத்தான்!

ஓய்வு என்பது
ரணங்களுக்கான
ஒத்தடமே தவிர
வாழ்க்கையன்று!

உழைப்பென்னும்
அச்சாணியின் உறுதியில்
தான் வாழ்க்கைச்சக்கரம்
சுழல்கிறது!

பிரம்மனின் படைப்பையே
திருத்தி அமைக்கும்
வல்லமை உழைப்பாளிக்கு
உண்டு!

ஊர்ந்து செல்லும்
எறும்புகளையும்
கடும் வெயிலில் உழுதிடும்
காளைகளைப்
பார்த்தாலாவது சும்மா
இருப்பவர்களுக்குச்
சுரணை பிறக்கட்டும்!

மே முதல்நாளை
வசந்தத்தின் திருநாளாய்க்
கொண்டாடுவோம்!
வாழ்க்கையை
அர்த்தமுள்ளதாக
ஆனந்தமுள்ளதாக
அழகானதாக
வடிவமைத்தவர்களின்
வண்ணத்திருநாள்!

முயற்சிகளால் வியர்வையும்
செந்நீரும் சிந்தி



முட்டுக்
கட்டைகளைத்
தகர்த்திட்டால்
முன்னேற்றம்
தொலைவில்
இல்லை!

கவிஞர்
த.அனந்தராமன், துறையூர்



## போதிக்கின்ற போதை நீ

தங்கபோல் சொலிக்கும்
உன் முகத்தை தட்டி
பார்க்கட்டுமா...

கரடு முரடான உன் நெஞ்சில்
பிலிந்து ரசம் குடிக்கட்டுமா...

மெத்தையான உன் வயிற்றில்
தலை சாய்த்து கொஞ்சம்
படுக்கட்டுமா...

இல்லறத்தை இருட்டறையில்
தேடட்டுமா...

எட்டி உதைத்து உதைத்து
கொஞ்சம் நேரம்
விளையாடட்டுமா...

எந்தன் ஆசை முடிந்த
பின்னே கண் அசந்து
தூங்கட்டுமா...



பெண் என்றால்
சொர்க்கம்
தானே... அதில்
காதல் என்றால்
பல கனவுகள்
வரும்தானே...

நீ இல்லாத வாழ்க்கை
ஆண்மகனுக்கு
கல்லறைதானே....!!

பொன்.கருணா
நவி மும்பை

## நல்ல நேரம்

உடல் நலன் மோசமாகும்
என எண்ணுவது அபத்தம்
முயற்சி ஜெயிக்காதென்கிற
தோல்வி பயம் வேண்டாம்
இன்றைய நிலையே
வருமென கருதினால்
மீண்டும் நிகழும்
உன்னதமானவற்றை
வரிசைப் படுத்தி
விவேகமுடன் நடப்பீர்



ராஜபாட்டையைச்
சீரமைப்பீர்
வெற்றிப்
படிக்களை
எட்டுவீர்

பி.பழனி,
சென்னை



## மாமனிதர் எம் .ஜி .ஆர் .!

நூற்றாண்டு கடந்தும் இன்றும் நினைக்கப்படுகிறார்
நாடே கொண்டாடி மகிழ்கின்றது எம் .ஜி .ஆரை !

ஏழ்மையில் பிறந்து வளர்ந்த காரணத்தால்
ஏழ்மை ஒழிக்க முயற்சிகள் செய்தார் !

கொடுத்துக் கொடுத்து சிவந்த கரங்கள்
கண்ணால் கண்ட காட்சிகள் ஆனது !

தோன்றின் புகழோடு தோன்றுக என்று
திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் !

மனிதநேயத்தின் சின்னமாக வாழ்ந்து சிறந்தவர்
மக்கள் மனங்களில் என்றும் வாழ்பவர் !

நல்லவனாகத் திரைப்படத்தில் நடித்தது மட்டுமன்றி
நல்லவனாகவே வாழ்க்கையில் வாழ்ந்து காட்டியவர் !

ஈழத்தமிழரின் விடுதலையை பெரிதும் விரும்பியவர்
ஈழத்தின் விடுதலைக்கு பெரிதும் உதவியவர் !

ஏழைப்பங்காளன் காமராசரின் மத்திய உணவுத்திட்டத்தை
ஏழைமாணவர் அனைவருக்கும் சத்துணவாக விரிவாக்கியவர்!

வெற்றி மாலைகள் பெற்றுக் குவித்தவர்
வேதனைகள் நீக்கி மகிழ்வைத் தந்தவர் !

என்னுடைய முதல்வர் நாற்காலியில் ஒருகால்
என்பது பட்டுக்கோட்டையின் பாடல்கள் என்றவர் !

நன்றி மறக்காத உயர்ந்த உள்ளம் பெற்றவர்
நாடு போற்றும் பொன்மனச் செம்மல் ஆனவர் !

பொற்காலம் படைத்தது தமிழா வரலாற்றின்
பொன் எழுத்துக்களில் இடம் பிடித்தவர் !

விருதுகள் பல பெற்றபோதும் என்றும்
விவேகமாகச் சிந்தித்து எளிமையாய் வாழ்ந்தவர் !

ஏழைகளின் கண்ணீர் துடைக்க முதல்வராகி
எண்ணிலடங்காத திட்டங்களை நிறைவேற்றியவர் !



திரைப்படத்தில் மிகமிக நன்றாக நடித்தவர்
தமிழக மக்களிடம் என்றும் நடிக்காதவர் !

புன்னகை மன்னராக பூவுலகில் வாழ்ந்தவர்
புரட்சித் தலைவர் எனும் பட்டம் பெற்றவர் !

இன்னும் பல நூற்றாண்டுகள் வாழ்வார் எம் .ஜி .ஆர் .
என்றும் அழிவில்லை எம் .ஜி .ஆர் . புகழுக்கு !

கவிஞர் இரா .இரவி !

## என்னைப்போல

என்வீட்டுப் புறக்கடையின் வேலி யோரம்
எச்சமிட்ட காகத்தின் மிச்சமாக
சின்னதொரு முளைகிளம்பி விருட்சமாகிச்
சிலிர்த்துநின்ற பசுமைமரம் மகனின் முத்த
இன்பம்போல் குளிர்ந்தகாற்றால் இன்ப மூட்டி
இனிமையான மழலைமொழி கனிகள் தந்து
புன்னகையைப் பூக்களாகப் பூத்துப் பூத்துப்
புதுவழியில் பொலிந்துநின்ற வீட்டைப்போல !

பிள்ளைகளின் தொட்டிலாக ஊஞ்சலாக
பிடித்துவிளை யாடுகின்ற தோழனாக
கள்ளமின்றித் தன்கிளையின் மடியமர்த்திக்
கதைபேசி சோறூட்டி வளர வைத்தும்
அள்ளியள்ளி மகிழ்ச்சியினைக் குவித்தும் அன்பால்
அரவணைத்தும் வீட்டினொல்லா நிகழ்வு கட்கும்
துள்ளியமாய்ச் சாட்சியாகி இன்பதுன்ப
துடிப்புகளை எதிரொலித்து என்னைப்போல!

தலைநிமிர்ந்து தனியாக நடப்பதற்குத்
தன்காலில் வலிமையினைப் பெற்ற பிள்ளை



நிலைமாறிச் சென்றதனால் முதுமை தன்னில்
நிர்கதியாய் நிற்கின்ற என்னைப்போல
இலையுதிர்ந்து பட்டையுரிந்து கிளைவளைந்து
இருந்தவெழில் பசுமைகாய்ந்து மொட்டையாகி
நிலைகுலைந்து விழுவதற்கு நேரம் பார்த்து
நின்றுளது பராமரிக்க யாருமின்றி !

பாவலர் கருமலைத்தமிழாழன்



## ஏழைகளின் வள்ளலார்

வறுமையிலும் வாடாத
வள்ளலார் எதற்கும்
கலங்காது உழைப்பே
உயர்வானதென
எண்ணி தேடி வந்த
வாய்ப்புகளை ஆதரவு
கரம் நீட்டி எதையும்
சமாளிப்போம் என்ற
புன்னகையோடு
வணங்கி வரவேற்று
தமிழ்நாட்டின் தலைமகனாய்
உலகமெல்லாம் அன்பால்



கட்டுண்டு ஏழைகளின்
இதய தெய்வமாய்
வாகை சூடி குடி
கொண்டு வாழும்
எம் ஜி ஆர் வான்
புகழோடு திகழட்டும்

நல.ஞானபண்டிதன்







உடன்குடியில்
ஸ்ரீவேல்முருகன்
டெக்ஸ்டைல்ஸ்

ஜவுளி, நகைக்கடையில்
வேலைக்கு ஆண்கள்,
பெண்கள் தேவை.
தகுதிக்கேற்ப சம்பளம்.

Ph: 81442 27771







ஆட்கள் தேவை

1.Supervisor
with any post graduate
degree Age 45 above to 55
2.Security 2 Persons
3.Garderner
செடிகளை பராமரிக்க வேண்டும்

தேவதாஸ் மருத்துவமனை வளாகம்
நித்திரவிளை,
கன்னியாகுமரி மாவட்டம்

Cell : 6382807831







தூத்துக்குடி, திருநெல்வேலி சிப்காட் பகுதியில்
உள்ள பிரபல பன்னாட்டு நிறுவனத்தில்
பணிபுரிய ஆட்கள் தேவை. (ஆண்கள் மட்டும்)

ASST. செக்யூரிட்டி ஆபிஸர்
சம்பளம் : 27500 (Ex.Serviceman)
செக்யூரிட்டி சூப்பர் வைசர்
சம்பளம் : 24506 (Ex.Serviceman)
செக்யூரிட்டி கார்டு
சம்பளம் : 20701 (Civil)

8 மணி நேர வேலை
System work தெரிந்தவர்களுக்கும்,
முன் அனுபவம் உள்ளவர்களுக்கும்
முன்னுரிமை அளிக்கப்படும்

படிப்பு : 10th Pass அதற்குமேல்
வார விடுமுறை உண்டு
வருடாந்திர ஊதிய உயர்வு
ESI / PF / போனஸ் உண்டு
வயது : 25 முதல் 50 வயது வரை
தங்கும் வசதி செய்து தரப்படும்
குறைந்த விலையில் உணவு வசதி
செய்து தரப்படும்

98949 99422
99941 34169
81109 77577







just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS



சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
அஜந்தா பாக்குடன் உங்கள் தீபாவளியை கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
ARG
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed
Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


999 SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com


உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த
பாஸ்கர்
www.anandabhaskar.com


தினம் தோறும்
உள்ளூர், உலக செய்திகள் வரை
தரும் தரமான
நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை/
மணப்பெண்ணைப்
பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009



முனீஸ்வர் துணை
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI
ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அனுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005


just499
REAL ESTATE
SOFTWARE
We Provide Complete Real
Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009



WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80% OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500
per day
Work From Home
Jobs
Rs 8000 – Rs 15000
per month
Ananda Bhaskar
9337501889
7789941009



# பல்சுவை களஞ்சியம்




## நல்ல அர்த்தமுள்ள தமிழ் பழமொழிகள் சிந்தித்து ரசிப்பதற்கு...

1. தங்கச் செருப்பானாலும் தலைக்கு ஏறாது.
2. தீயில் இட்ட நெய் திரும்ப வராது.
3. நாடு கடந்தாலும் நாய்க்குணம் போகாது.
4. தேரோடு போச்சுது திருநாள். தாயோடு போச்சுது பிறந்தகம்.
5. தெய்வம் காட்டுமே தவிர ஊட்டாது.
6. செத்த பிணத்திற்கு அருகே இனி சாகும் பிணம் அழுகிறது.
7. கரந்தப் பால் காம்பில் ஏறாது.
8. கடலைத் தாண்ட ஆசையுண்டு, கால்வாயை தாண்ட கால் இல்லை.
9. கரும்பு கசப்பது வாய்க்குற்றம்.
10. கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டான். மரம் ஏறி கை விட்டவனும் கெட்டான்.
11. காட்டிலே செத்தாலும் வீட்டிலே தான் தீட்டு.
12. கூப்பாட்டால் சாப்பாடாகுமா?
13. எரிகிற வீட்டை அவிக்க கிணறு வெட்ட நாள் பார்த்தது போல, கும்பிட்ட கோயில் தலை மேல் இடிந்து விழுந்தது போல, சில்லரைக் கடன் சீரழிக்கும்.
14. சொப்பனங்கண்ட அரிசி சோற்றுக்கு ஆகுமா?
15. உறவு போகாமல் கெட்டது, கடன் கேளாமல் கெட்டது. (எத்தனை பெரிய உண்மை. போய் வந்து கொண்டிருந்தால் தான் உறவு நிலைக்கும். கொடுத்த கடனைக் கேட்டுக் கொண்டே இருந்தால் தான் திரும்பக் கிடைக்கும்).
16. அடி நாக்கில் நஞ்சும், நுனி நாக்கில் அமிர்தமுமா? (இன்று பலரும் இப்படித்தானே இருக்கிறார்கள்?)
17. ஆனை இருந்து அரசாண்ட இடத்தில் பூனை இருந்து புலம்பி அழுகிறது.. (எல்லாம் காலத்தின் கோலம்.)
18. அறப்படித்தவன் அங்காடிக்குப் போனால் விற்கவும் மாட்டான், வாங்கவும் மாட்டான். (அதிகமாய் படித்தவர்கள் பலரும் இப்படித்தான்).
19. உள்ளப் பிள்ளை உரலை நக்கிக் கொண்டிருக்க மற்றொரு பிள்ளைக்கு மனம் ஏங்குதாம்.
20. இறுகினால் களி. இளகினால் கூழ்.
21. ஊன்றக் கொடுத்த தடி மண்டையைப் பிளந்தது. (யாருக்கு உதவுகிறோம் என்று சிந்தித்து உதவா விட்டால் இப்படித்தான்)
22. எடுப்பது பிச்சை. ஏறுவது பல்லாக்கு. (பலருடைய போக்கு இப்படித்தான் இருக்கிறது)
23. எட்டி பழுத்தென்ன? ஈயாதார் வாழ்ந்தென்ன? (எட்டி பழுத்தாலும் அதன் கசப்பால் சாப்பிட உதவாது. கஞ்சனுக்கு எத்தனை செல்வம் வந்தாலும் அதில் யாரும் பலன் அடைய முடியாது).
24. விசாரம் முற்றினால் வியாதி. (கவலை அதிகமானால் வியாதியில் தான் முடியும்).
25. பைய மென்றால் பனையையும் மெல்லலாம். (நிதானமாக சிறிது சிறிதாக மென்றால் பனையைக் கூட மென்று விடலாம். அதாவது நிதானமாக தொடர்ந்து செய்து கொண்டே இருந்தால் எத்தனை பெரிய காரியத்தையும் செய்து முடித்து விடலாம்.)
26. காற்றில்லாமல் தூசி பறக்காது. (நெருப்பில்லாமல் புகையாது என்ற பழமொழிக்கு இணையான இன்னொரு பழமொழி)
27. பண்ணின புண்ணியம் பலனில் தெரியும். (நாம் அனுபவிக்கும் பலன்களைப் பார்த்தாலே சேர்த்திருக்கும் புண்ணியம் எவ்வளவு என்பது தெரிந்து விடும்).
28. பிடித்த கொம்பும் ஒடிந்தது, மிதித்த கொம்பும் முறிந்தது. (துரதிர்ஷ்டம் எப்படி எல்லாம் சோதிக்கிறது என்பதற்கு அழகான பழமொழி. ஒரு மரத்தில் ஏறி ஒரு கொம்பைப் பிடித்துக் கொள்ளும் போது அது ஒடிந்து போக, கீழே விழாமல் இருக்க இன்னொரு கொம்பில் காலை வைத்து ஊன்றினால் அந்தக் கொம்பும் முறிந்தால் எப்படி இருக்கும்?)
29. பாடுபட்டுக் குத்தினாலும் பதரில் அரிசி இருக்காது. (பதர் என்பதே அரிசி இல்லாத நெல் தான். அதனால் என்ன தான் குத்தினாலும் அதில் அரிசி கிடைக்க வாய்ப்பில்லை. மனிதனின் பயனில்லாத முட்டாள்தனமான முயற்சி குறித்துச் சொல்லும் பழமொழி)
30. இட்டதெல்லாம் பயிராகாது. பெற்றதெல்லாம் பிள்ளையாகாது.
31. கடைந்த மோரிலே குடைந்து வெண்ணைய் எடுப்பான். (தயிரில் வெண்ணெய் எடுத்த பிறகு தான் மோராகிறது. அந்த மோரிலேயே மீண்டும் வெண்ணெய் எடுக்கும் அளவு சாமர்த்தியம் வாய்ந்தவர்களைப் பற்றி இந்தப்பழமொழி சொல்கிறது.
32. வாங்குகிற கை அலுக்காது. (வாங்கிக் கொண்டே இருப்பவர்களுக்கு அலுப்பே இருக்காது.)
33. அடுத்த வீட்டுக்காரரே பாம்பைப் பிடியுங்க. அது அல்லித்தண்டு போல ஜில்லென்றிருக்கும். (என்ன சாமர்த்தியம் பாருங்கள்!)
34. உயிரோடு ஒரு முத்தம் தராதவள், செத்தால் உடன்கட்டை ஏறுவாளா?
35. அய்யாசாமிக்குக் கல்யாணம், அவரவர் வீட்டில் சாப்பாடு.
36. அவனே இவனே என்பதை விட சிவனே சிவனே என்பது நல்லது.
37. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறி.
38. ஆகிறவன் அரைக்காசிலும் ஆவான். ஆகாதவனுக்கு ஆயிரம் கொடுத்தாலும் விடியாது.
39. ஆயிரம் உடையான் அமர்ந்திருப்பான், அரைப்பணம் உடையான் ஆடி விழுவான்.
40. ஆனை மேல் போகிறவனை சுண்ணாம்பு கேட்டால் கிடைக்குமா?
41. இந்த எலும்பைக் கடிப்பானேன், சொந்தப்பல்லுப் போவானேன்?
42. இந்தக் கூழுக்கா இத்தனை திருநாமம்?
43. இமைக் குற்றம் கண்ணுக்குத் தெரியாது.
44. இடுகிறவள் தன்னவள் ஆனால் முதல் பந்தியில் உண்டால் என்ன, கடைப் பந்தியில் உண்டால் என்ன?
45. உண்டு கொழுத்த நண்டு வளையில் தங்காது.



# மீம்ஸ்







## நவக் கிரகங்களுக்குப் பிரியமான நீவேதனங்கள்

சூரியன் --கோதுமை ரவை சர்க்கரைப் பொங்கல் ( சூடு ஆறாமல் )
சந்திரன் --பால் பாயசம் (சூடு ஆறியது)
செவ்வாய் --பொங்கல்
புதன் --புளியோதரை
குரு --தயிர் சாதம்
சுக்கிரன் --நெய்ப் பொங்கல்
சனி --எள் சாதம்
ராகு --உளுந்து சாதம்
கேது --சித்ரான்னம்







## விடுகதை

| | |
|---|---|
| வாயில் இருந்து நூல் போடுவான், மந்திரவாதி இல்லை; கிளைக்கு கிளை தாவுவான் ஆனால் குரங்கு இல்லை; வலை விரித்து பதுங்கி இருப்பான் ஆனால் வேடன் இல்லை அவன் யார்? | சிலந்தி |
| நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும் அது என்ன? | தையல் ஊசியும் நூலும் |
| எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்காத கல் அது என்ன? | விக்கல் |
| கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்கமுடியாது அது என்ன? | நிழல் |
| செய்தி வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே அவன் யார்? | தொலைபேசி |
| அள்ள முடியும் ஆனால் கிள்ள முடியாது அது என்ன? | தண்ணீர் |



# ஜோக்ஸ்

ஆசிரியர்: மின்னல் தெரிந்தபிறகு ஏன் இடி இடிக்கிறது .

மாணவன்: கண்களுக்கு பின்னால் தானே சார் காது இருக்கிறது அதனால்தான் சார்.
==========================================

"உங்க வீட்ல சிரிப்பு சத்தமாயிருக்கே, ஏன்?"

"எங்க வீட்டு டிவி ரிப்பேர், அதுதான்!"
==========================================

"அந்தக் கட்சிக் கூட்டத்தில எல்லோரும் சேர்ந்து அழறாங்களே , ஏன்?"

"அங்கே 'துயர் மட்டக் குழு கூட்டம்' நடக்குதாம்"
=========================

==================

"இன்னைக்கு நான் ஆபீஸ்ல பட்டினி கிடந்து வேலை செஞ்சேன்"

"அவ்வளவு பிசி ஒர்க்கா?"


"இல்ல; சாப்பாட்டு நேரத்தில என்னை யாரும் எழுப்பிவிடலை"
==========================================

"தொழில் படுத்திடுச்சின்னீங்களே , என்ன தொழில்?"

"பாய் வியாபாரம்!"
==========================================

டாக்டர்: "நீங்க உடம்பைக் குறைக்கணும்; இனிப்பைக் குறைக்கணும்; காரத்தைக் குறைக்கணும்"

நோயாளி: "டாக்டர், நீங்க ஃபீசை குறைக்கணும்"
============================================



ஒருவர்: "தாமஸ் ஆல்வா எடிசன் பல புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடிக்காமலிருந்தால் என்னவாயிருக்கும்?"

மற்றவர்: "வேற ஒருத்தர் கண்டுபிடிச்சிருப்பார்"
============================================

நீதிபதி : " அந்த வீட்டுப் பூட்டை உடைத்து ஏன் திருடினாய்?"

திருடன்: "என்னோட சாவி எதுவுமே அந்தப் பூட்டைத் திறக்காததால கடைசியா பூட்டை உடைக்க வேண்டியதாப் போச்சிங்க"
============================================

தொண்டர் 1
"தலைவர் ரொம்ப அப்பாவியா இருக்காரா, எப்படி?"

தொண்டர் 2 : "சலூன்ல துண்டைப் போர்த்தினதுமே, 'எந்த வட்டத்தின் சார்பில போடுறே'ன்னு கேட்கிறாரு"
============================================

"வாழைப் பழம் ஒன்னு எத்தனை ரூபாய்ங்க?"

"ஒரு பழம் ரெண்டு ரூபாய்ங்க"
"ஒன்னரை ரூபாய்க்கு கொடுங்களேன்"

"ஒன்னரை ரூபாய்க்கு தோல் மட்டும்தான் கிடைக்கும்"

"அப்படின்னா ஐம்பது பைசாவுக்கு பழம் மட்டும் கொடுங்க"
============================================

"இந்த ஆசிரியர் வித்தியாசமானவரா, எப்படி?"

"பதிலை சொல்லிட்டு, இதனோட கேள்வி என்னனு கேட்பார்"
============================================

"டாக்டர், நான் யார் பேச்சையுமே கேட்குறதில்லை"

"அதை என்னிடம் வந்து ஏன் சொல்றீங்க?"

"காது சரியா கேட்கலை; அதை சரி பண்ணுங்க டாக்டர்!"
==========



# ஜோதிடம் அறிவோம்



## குழந்தைப்பேறு அருளும் அன்ன பிரசாதம்...



பல்லவர்களின் கடைசி மன்னரான அபராஜிதனால் கட்டப்பட்ட கோயில். அவரது மகன் பாம்பு தீண்டி உயிருக்குப் போராடிய நேரத்தில், அவரது கனவில் சிவன் தோன்றி பரிகாரங்களைக் கூறி மறைந்தார். மன்னர் அவற்றை நிறைவேற்றியதால், அவரது மகன் உயிர் பிழைத்தார். இதனால் மன்னர் ராமேசுவரம் சென்று நீராடுவதற்கு மூழ்கியபோது சிவன் லிங்க வடிவில் கடலில் தோன்றியதால், தாடூர் இறைவன் "கடலீஸ்வரர்' என்ற பெயர் பெற்றதாக சுவாமி திருநாமம் குறித்து இன்னொரு காரணமும் கூறப்படுகிறது.

1,500 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கடலீஸ்வரர் கோயில் அந்நியப் படையெடுப்பால் சிதிலமடைந்தது. பிற்காலத்தில் மார்த்தாண்ட மன்னரால் கோயில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இறைவி யோகீஸ்வரி தேவி, நவகிரகங்கள், கணபதி, வள்ளி} தெய்வானை சமேத முருகன், விநாயகர், தட்சிணாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா, துர்கை, சண்டிகேஸ்வரர், நாகதேவதை உள்ளிட்ட சந்நிதிகள் உள்ளன. ஈசான்ய மூலையில் லிங்கேஷ்வரர் பெரிய நீர்த்தொட்டியில் வைக்கப்பட்டுள்ளது சிறப்பு.

மழை பொய்த்த காலங்களில் சிவனுக்கு 101 குடம் அல்லது சங்கினால் அபிஷேகம் செய்த சில நாள்களிலேயே மழை பொழிந்துள்ள அதிசயமும் இத்தலத்தில் நிகழ்ந்துள்ளது.

திருவண்ணாமலை கோயிலை ஒரு முறை சுற்றி வந்தால் கிடைக்கும் பலன் கடலீஸ்வரர் கோயிலை 27 முறை சுற்றிவந்தால் கிடைக்கும் என்பது நம்பிக்கை. கோயிலின் ஈசான்ய மூலையில் தீர்த்தம் உள்ளது. கோயில் மண்டபத்தில் சந்திரன், சூரியன், பாம்பு, பல்லி, தேள் சின்னங்கள் இருப்பதால், விஷ ஜந்துக்களின் கடிகளில் இருந்து விடுபடும் பரிகாரத் தலமிது. இங்கு சூரிய பகவானுக்கு சிறப்பு பூஜைகள் செய்தால், கிரக தோஷங்கள் விலகிவிடுமாம்.

இத்தல வழிபாடு திருமணத் தடை, நோய்களை நீக்குகிறது. ஞாயிறுதோறும் மாலை 4 மணிக்கு நடைபெறும் அன்னாபிஷேகத்தில் பங்கேற்று பிரசாதத்தைச் சாப்பிட , குழந்தைப்பேறு கிடைப்பதாக நம்பிக்கை. இந்தக் கோயிலில் தற்போது திருப்பணிகள் நிறைவு பெற்று, டிசம்பர் 1 (திங்கள்கிழமை) காலை 9 மணிக்கு மேல் 10.30 மணிக்குள்ளாக மகா கும்பாபிஷேகம் நடைபெற இருக்கிறது.

## கிரக அமைப்புகள் செல்வ வளர்ச்சியை எப்படி பாதிக்கின்றன?



சில கிரகங்கள் உங்களைச் சேமிக்க வைக்கின்றன, மற்றவை உங்களைச் செலவிட வைக்கின்றன. இவை ஒரு நபருக்கும் மற்றொரு நபருக்கும் மாறுபடும். அவரவர் பிறந்த நேரத்தில் ஏற்பட்ட கிரக அசைவுகளும், அமர்வுகளும் இதற்குக் காரணம்.

ஒருவரின் வரவுகள் மற்றும் செலவுகள் பழக்கம் அல்ல, அவை கிரக வடிவங்கள் மட்டுமே. ஒவ்வொரு கிரகமும் சொல்லும் அதன் இயல்புகளை, இந்த கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

**சுக்கிரன்**

வாழ்க்கை முறை மற்றும் ஆடம்பரம்.

அழகு, பிராண்டுகள், இரவு உணவுகள், அலங்காரத்திற்காகச் செலவிடுவது.

வசதிக்கான ஆசை தூண்டும்.

உயர்தர தேர்வுகள் மற்றும் ஆடம்பர செலவுகள்.

**செவ்வாய்**

(உந்துவிசை) தூண்டுதல் செலவு

விரைவான முடிவுகள், உடனடி கொள்முதல், "வண்டியில் சேர்" (ADD TO CART)என்ற சிலிர்ப்பு

**ஆக்ரோஷமான மனநிலை :**

ஆக்ரோஷமான செலவு

**குரு**

பெரிய பண நகர்வுகள்

"விரிவாக்கக் கோள்"

முதலீடுகள், ஆபத்து, தொண்டு, பயணம்.

அதிகப்படியான நம்பிக்கையின் மூலம் செல்வத்தை வளர்க்கலாம் அல்லது எரிக்கலாம்.

**புதன்**

புத்திசாலித்தனமான அல்லது தந்திரமான கையாளுதல்

ஒப்பந்தங்கள், வர்த்தகம், கணக்கீடுகள்.

சரியான இடங்களில் புதன் அமர்வு புத்திசாலித்தனமான சேமிப்பு

தவறான இடங்களில் புதன் அமர்வு விரைவான இழப்புகள்.

**சனி**

சேமிப்பாளர் & வரவு செலவுத் திட்ட (BUDGET GURU) குரு.

மெதுவாக, நிலையானதாக, நடைமுறைக்கு ஏற்றதாக நடத்துதல் .

நீண்ட கால பாதுகாப்பு, திட்டமிடல் மற்றும் ஒழுக்கத்தில் கவனம் செலுத்துவது .

பணப்புழக்கத்தைக் கட்டுப்படுத்தும் வீடுகள்

**2வது வீடு:** சேமிப்பு, வங்கி இருப்பு, பணக்கண்ணோட்டம்

**6வது வீடு:** கடன்கள், EMI, கடன்கள், தினசரி ஒழுக்கம்

**11வது வீடு :** ஆதாயங்கள், வருமானம், லாபம், நிறைவேற்றம்

**12வது வீடு:** செலவுகள், இழப்புகள் & வடிகால் வெளியேற்றம் ( எதோ ஒரு சில காரணங்களுக்காக)

**செல்வத்திற்கான சூத்திரம்**

வலுவான 2வது + 11வது வீடு + நிலையான சுக்கிரன் / வியாழன் / சனி = செல்வம் அதிகரிப்பு

12வது + தூண்டுதல் செவ்வாய் = அதிகமாகச் செலவு செய்தல் & கடன்.

சரி இந்த அமைப்புகள் சரியாக இருந்தால் அந்த ஜாதகருக்கு எப்போதும் நல்லதே நடக்குமா என்றால், அது தான் இல்லை. ஜாதகரின் தசா புத்திகள் அந்த நபருக்கு சாதகமாக அமையும் போது மட்டுமே நல்லது நடக்கும். ஏனெனில், தசா புத்திகள் தான் ஒரு சம்பவத்தை நடத்தி வைக்கும். மற்றபடி ஒருவரின் ராசி கட்டத்தில் இருக்கும் அமைப்பு அந்த ஜாதகரின் அமைப்புகள் எவ்வாறு உள்ளது என மட்டுமே உரைத்திடும், தசா புத்திகளில் மட்டுமே சாதகமான அல்லது பாதகமானவைகள் நடந்தேறும்.

## பிரச்னைகளை தீர்க்கும் பெருமாள்



சோழர் கால கோட்டத்தில் ஒன்றான, வெண்குன்றக் கோட்டத்து மருதாடு நாட்டு கொடுங்காலூருக்கு உள்பட்டது கீழ்க்கொடுங்காலூர். கொடுங்காலூருக்குக் கிழக்குத் திசையில் இருப்பதாலும், அடர்ந்த கால்வாய்களை உடைய ஊர் என்பதாலும், இதைக் கீழ்க்கொடுங்காலூர் என்று குறிப்பிடுகிறார்கள். வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த வந்தவாசிக்கு அருகே இந்தக் கிராமம் உள்ளது.

கிராமத்தின் நடுநாயகமாக கரியமாணிக்கப் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. இது 600 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைமை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

விஜயநகர ஆட்சிக் காலத்தில் வைணவர்களுக்கு அதிக செல்வாக்கு இருந்ததாகவும், அவர்கள் அதிக அளவில் வாழ்ந்த பகுதியாக இது இருந்திருக்கலாம் என்றும், இக்கோயில் பாண்டியர்கள் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டு இருக்கலாம் என்றும், பின்னர் பல்லவர்கள், சோழர்கள் ஆட்சியில் கோயில் புனரமைப்பு செய்யப்பட்டிருக்கலாம் என்றும் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

மூலவர் கரியமாணிக்கப் பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி சமேதராகக் காட்சியளிக்கிறார். உற்சவர் வரதராஜ பெருமாள். லட்சுமி ஹயக்ரீவர், கல்யாண சீனிவாசப் பெருமாள், யோக நரசிம்மர், விஷ்வக்சேனர், அனுமன், ராமானுஜருக்கும் சந்நிதிகள் உள்ளன.

சிறந்த பரிகாரத் தலம். இக்கோயில் வழிபாட்டால் திருமணத் தடை அகலும், குழந்தைப் பாக்கியம் கிட்டும், சொத்து } வீடு பிரச்னை முடிவுக்கு வரும், மனக் குழப்பம் நீங்கும். மலைபோன்ற பிரச்னைகளும், சூரியனைக் கண்ட பனிபோல் விலகும் என்கின்றனர். நெய் தீபம் ஏற்றி இத்தலத்தில் பிரார்த்தனை செய்தாலே போதும், உடல் ஆரோக்கியம் மேம்படும்.

பக்தர்கள் நினைத்ததை நினைத்த மாத்திரத்தில் இப்பெருமாள் நிறைவேற்றுகிறார். "கருதியதை முடிப்பார் கரியமாணிக்கப்பெருமாள்' என்பதே பக்தர்களின் நம்பிக்கை. பெருமாளுக்கு இரு தேங்காய்களை உடைப்பதாக பக்தர்கள் வேண்டிக் கொள்வர். வேண்டுதல் நிறைவேறியதும் தேங்காய்களை உடைத்து நன்றியைக் காணிக்கையாகச் செலுத்துகிறார்கள்.

## கல்வி தரும் கும்பேஸ்வரர்

ஊழிக்காலம் எனப்படும் மகாபிரளயத்துக்குப் பிறகு பிரம்மன் தனது படைப்புத் தொழிலைத் தொடங்குவதற்காக தவம் செய்தது, பிரம்மனது வேண்டுதலுக்கிணங்க சிவன் தந்த அமுதக்கலசமானது தங்கியது, பிரளய காலத்து வெள்ளத்தில் மிதந்து வந்த கும்பத்தின் மூக்கின் வழியே அமுதமானது பரவிய காரணத்தினால் "குடமூக்கு' என்று பெயர் பெற்றது எனப் பலவாறாகப் போற்றப்படும் தலம், கும்பகோணம்.

**இறைவனின் சிறப்பு:**

ஆதியும் அந்தமும் இல்லாத அநாதியான இறைவன் சிருஷ்டியின் தொடக்கமாக கும்பத்திலிருந்து தன்னை வெளிப்படுத்திக் கொண்டதால் இத்தல இறைவன் "கும்பேஸ்வரர்', " ஆதிகும்பேஸ்வரர்' என்றும், அமுதத்திலிருந்து உதித்ததால் "அமுதீசர்' என்றும் போற்றப்படுகிறார். இவரது திருமேனி மணலால் ஆனது. இந்த பாணலிங்கத்தின் உச்சி கும்பத்தின் வாய் போன்று அமைந்திருக்கிறது. இந்த பாணத்தைக் கவசமிட்டு மூடியிருப்பர். இதற்கு திருமஞ்சனம் நிகழ்த்தப்படுவது இல்லை. புனுகுச் சட்டம் சாத்தப் பெறுவதே வழமை. இத்தகு லிங்கங்களை வணங்குவதால் அபாரமான ஞானமும் கல்வியும், முடிவில் மோட்சமும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

**இறைவியின் சிறப்பு:**

மங்களேஸ்வரி, மங்கள நாயகி, வளர்மங்கை என்றும், சக்தி பீடங்களில் ஆதிபீடம் என்ற சிறப்புடைய மந்திர பீடத்தில் உறைந்து அருளுவதால் மந்திரபீடேஸ்வரி என்றும் பல்வேறு திருநாமங்களால் இறைவி போற்றப்படுகிறாள். ஆதிசிவன் தம்முடைய சரிபாதி உரிமையுடைய 36,000 கோடி மந்திர சக்திகளையும் இத்தலத்தில் அம்பாளுக்கு அருளியிருக்கிறார். அத்துடன் தமக்கும் உரிய சக்திகளுடன் சேர்த்து மொத்தம் 72,000 மந்திர சக்திகளுக்கும் ஏகாதிபதியாக விளங்குகிறாள் மங்களாம்பிகை.

இத்தலத்து அம்மை கேசாதி பாதம் வரை 51 சக்தி பாகங்களாகக் காட்சியளிப்பது வேறெங்கிலும் காண இயலாத சிறப்பு. இவ்வம்மையை அந்தி நேரத்தில் தரிசனம் செய்வதால் அனைத்து தோஷங்களும் நீங்கி விடும். ஏவல், திருஷ்டி போன்ற எதிர்மறை வினைகள் அழிந்து, சகல நன்மைகளும் உண்டாகும்; இவரை தரிசித்த கணத்திலேயே சகல பாவங்களும், நோய்களும் நீங்கும்.

"வெள்ளிக்கிழமைகளில் இவ்வன்னைக்கு செவ்வரளி மாலை சாத்தி, குங்குமத்தால் அர்ச்சனை செய்து வணங்கினால் நினைத்த காரியம் நிறைவேறிடும்' என்கிறார்கள். கிரக தோஷத்துக்கு ஆட்பட்டவர்கள் இந்த அன்னையை வழிபட்டால், தோஷம் நீங்கப்பெறுவர்.

நவ நதிகளும் நீராடிடும் சிறப்புடைய மாசிமக புனித நீராடலுக்குப் பெயர் பெற்ற தலம். கோயில் நகரமான கும்பகோணத்தின் தலைமை சிவராஜ தானியாக விளங்கிடும் இந்த கும்பேஸ்வரர் கோயிலின் ராஜகோபுரம் 128 அடி உயரமுடையது. இவ்வாலயத்தை மாசி மாதத்தில் வழிபட்டால் அஸ்வமேத யாகம் செய்த புண்ணியமும் , ஆவணி மாதத்தில் வழிபட்டால் தீர்க்க செ□மாங்கல்யமும் கிடைக்கும் என்கின்றன தெய்வநூல்கள். சோழர்கள் காலத்தில் பல சிறப்புகளுடன் ஏற்றம் பெற்று விளங்கியிருந்த கோயில்.

பல சிறப்புகள் கொண்ட இக்கோயிலுக்குத் திருப்பணிகள் நடைபெற்று வந்த நிலையில், டிசம்பர் 1ஆம் தேதி (திங்கள்கிழமை) காலை 6 மணிக்கு மேல் 7 மணிக்குள் மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.





## வாழ்க்கையை உயர்த்தும் அய்யப்ப பக்தர்கள் விரதம்

மண்டல பூஜைக்காக சபரிமலை அய்யப்பன் கோவில் நடை திறக்கப்பட்டுள்ள நிலையில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி அய்யப்பனை வழிபடுகின்றனர். மாலை அணிந்து சபரிமலைக்கு செல்லும் பக்தர்கள் விரத முறைகளை தவறாமல் கடைபிடிக்க வேண்டியது அவசியம்.

மாலை அணிந்து விரதம் இருந்து சபரிமலை செல்பவர்கள் கருப்பு, நீலம், பச்சை, காவி போன்றவற்றில் ஏதாவது ஒரு நிற வேட்டி-சட்டையை அணிய வேண்டும். அதிகாலை எழுந்து குளிர்ந்த நீரில் நீராடி 108 சரணம் கூறி பூஜை செய்ய வேண்டும். இதேபோல சூரியன் மறைந்த பிறகு மாலையில் நீராடி 108 சரணம் கூறி ஐயப்பனுக்கு பூஜை செய்ய வேண்டும், குளிப்பதற்கு சோப்பு உபயோகிக்க கூடாது. இரவில் தூங்கும்போது தலையணை, மெத்தை உபயோகிக்க கூடாது. பகலில் தூங்குவதை தவிர்க்க வேண்டும். பிரம்மச்சரிய விரதத்தை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். இது மனோவலிமையை பெருக்கி மனித வாழ்க்கையை உயர்த்துவதற்கு உதவுகிறது. இதுதவிர பெண்கள் அனைவரையும் தாயாக பார்க்க வேண்டும்.

சைவ உணவு மட்டும் உண்ண வேண்டும். மது அருந்தக்கூடாது, பீடி, சிகரெட், பான்மசாலா போன்றவற்றை அறவே நீக்கி விட வேண்டும். திரிகரண சுத்தி (மனம், வாக்கு, செயல்) ஆகியவற்றில் கவனமாக இருக்க வேண்டும். ஐயப்பனை எண்ணத்தில் எப்போதும் மனதில் நினைத்திருக்கவேண்டும். ஐயப்ப சரணத்தை மனதில் கூறி க்கொண்டிருந்தால் எண்ணங்கள் தூய்மையாகும். செய்யும் செயல்களும், பேசும் பேச்சுக்களும் நல்லவிதமாக அமையும். சண்டை, சச்சரவுகளில் கலந்துகொள்ளக்கூடாது. எல்லோரிடமும் சாந்தமாக பழக வேண்டும்.

காமம், கோபம், கஞ்சத்தனம், மோகம், அகம்பாவம், துவேஷம் முதலிய குணங்களை குறைப்பதற்கு, எப்போதும் ஐயப்பன் திருநாமத்தை உறுதுணையாக கொள்ள வேண்டும்.

பக்தனின் நெஞ்சினில் எப்போதும் நிறைந்து நிற்பது ஐயப்பனின் பேரொளி திருவுருவமே ஆகும். உரையாடும்போது சுவாமி சரணம் என்று சொல்லி தொடங்குவதும், முடிக்கும்போதும் சுவாமி சரணம் என்று சொல்லி முடிப்பதும் கூடுதல் நன்மைகளை தரும். ஒரு ஐயப்ப பக்தரை வழியில் காண நேர்ந்தால் அவர் அறிமுகம் இல்லாதவராக இருந்தாலும் சுவாமி சரணம் என்று வணங்க வேண்டும்.

குடை பயன்படுத்தக் கூடாது. காலணிகள் அணியக் கூடாது. சூதாடுதல் கூடாது. சினிமாவுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும். மார்கழி மாதத்தில் 15 நாட்களாவது ஒருவேளை உணவை விடுத்து விரதம் இருக்க வேண்டும்.



## பார்வேட்டை உத்ஸவம்



மதுராந்தகம் ஸ்ரீஜனகவல்லி தாயார் ஸமேத ஸ்ரீகருணாகரப் பெருமாள் மலைப்பாளையம் பார்வேட்டை உத்ஸவம் நடந்தது.

## தேமுதிக அலுவலகத்தில் மாட்டுப் பொங்கல்



சென்னை கோயம்பேடு தேமுதிக அலுவலகத்தில் நேற்று மாட்டுப் பொங்கல் கொண்டாடி, அன்னதானம் வழங்கப்பட்டது.

## எம்ஜிஆர் சிலைக்கு அதிமுகவினர் மாலை



திருநெல்வேலி கொக்கிர குளத்திலுள்ள எம்ஜிஆர் சிலைக்கு மாவட்ட அதிமுக செயலர் தச்சை கணேசராஜா தலைமையில் அதிமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## பொது மக்களுக்கு பொங்கல் பரிசு



குன்றத்தூரில் 5,000க்கும் மேற்பட்ட திமுகழகத்தினர் மற்றும் பொதுமக்களுக்கு கருப்பு சிவப்பு வேட்டி, சேலை, நாள்காட்டி ஆகியவற்றை பொங்கல் பரிசாக அமைச்சர் அன்பரசன் வழங்கி வாழ்த்தினார்.


ரவுசு மணி

எதுவும்
சுலபமில்லை
என்று சோர்ந்து
விடாதே...
எல்லாமே
சாத்தியம்
தான் என்பதை
உணர்ந்து விட்டால்
அதுவே வெற்றி...



V. முத்து ராமகிருஷ்ணன்


## பொங்கல் விழா



தூத்துக்குடியில் திமுக சார்பில் நடைபெற்ற பொங்கல் விழா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் கீதாஜீவன் பரிசுகளை வழங்கினார்.

## பாரம்பரிய மாட்டுப் பொங்கல்



நாமக்கல்லில் விவசாயிகள் மகிழ்ச்சியோடு கொண்டாடிய பாரம்பரிய மாட்டுப் பொங்கல் விழாவில் நேற்று அமைச்சர் மனோ தங்கராஜ் பங்கேற்றார்.

## எம்ஜிஆர் சிலைக்கு அதிமுகவினர் மாலை



திருச்சி நீதிமன்றம் அருகேயுள்ள எம்ஜிஆர் சிலைக்கு நேற்று அதிமுக மாநகர் மாவட்டச் செயலாளர் ஜெ.சீனிவாசன் தலைமையில் அதிமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## 1,008 பால்குடம் ஏந்தி ஊர்வலம்



திருக்கழுக்குன்றம் அருகே ருத்திரான் கோயில் பகுதியில் உள்ள காளியம்மன் கோயிலில் நேற்று 1,008 பால்குடம் ஏந்தி ஊர்வலம் வந்தனர்.

## எம்ஜிஆர் சிலைக்கு பொதுச்செயலாளர் பழனிசாமி மாலை



அதிமுக நிறுவனத் தலைவர் எம்ஜிஆரின் 109-வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை ராயப்பேட்டை அதிமுக தலைமை அலுவலகத்தில் எம்ஜிஆர் சிலைக்கு பொதுச்செயலாளர் பழனிசாமி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

## எம்ஜிஆர் சிலைக்கு அதிமுகவினர் மரியாதை



நாகர்கோவில் வடசேரியில் எம்ஜிஆர் சிலைக்கு தளவாய் சுந்தரம் எம்எல்ஏ தலைமையில் நேற்று அதிமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## தியாகி இமானுவேல் சேகரன் மணிமண்டபம் திறப்பு



ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரன் திருவுருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

## காணும் பொங்கலையொட்டி மஞ்சள்நீரை ஊற்றி கொண்டாடினர்



திருப்புவனம் புதூர் பெரியார் நகரில் காணும் பொங்கலையொட்டி மஞ்சள்நீரை ஊற்றி கொண்டாடிய அப்பகுதி மக்கள்.

## காரைக்காலில் மினி மாரத்தான் போட்டி



காரைக்காலில் நேற்று மினி மாரத்தான் போட்டி நடந்தது.

## தியாகராஜர் ஆராதனை விழா



மன்னார்குடியில் நேற்று நடைபெற்ற தியாகராஜர் ஆராதனை விழாவில் பஞ்சரத்ன கீர்த்தனைகளை பாடி தியாகராஜருக்கு இசையஞ்சலி செலுத்தி இசை கலைஞர்கள்.

## அந்தமானில் பொங்கல் விழா



அந்தமானில் வசிக்கும் திமுகவினர் ஏற்பாடு செய்த பொங்கல் விழாவில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டார்.

## வே.இம்மானுவேல் சேகரனார் மணிமண்டபம்




ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் 3 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி வே.இம்மானுவேல் சேகரனார் மணிமண்டபம். இதை திறந்து வைத்து, இம்மானுவேல் சேகரனார் திருவுருவப் படத்திற்கு முதல்வர் ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

## 49 நூல்கள் வெளியீட்டு விழா



சென்னை புத்தகத் திருவிழாவில் மணிமேகலை பிரசுரம் நிறுவனத்தின் சார்பில் 49 நூல்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது. அதில் எழுத்தாளர்களையும், பதிப்பாளரையும் அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி வாழ்த்தினார்.

## மின்னொளியில் ஜொலிக்கும் விவேகானந்தர் மண்டபம்



பொங்கல் விடுமுறை கொண்டாட்டங்களில் திளைத்த சுற்றுலாப் பயணிகள் நேற்று கன்னியாகுமரியில் குவிந்தனர். மின்னொளியில் ஜொலிக்கும் விவேகானந்தர் மண்டபம், கண்ணாடி பாலம், திருவள்ளுவர் சிலை ஆகியவற்றை பார்வையிட்டு செல்பி எடுத்து மகிழ்ந்தனர்.

## எம்ஜிஆர் படத்துக்கு பிரேமலதா, மலர்தூவி மரியாதை



சென்னை கோயம்பேடு, தேமுதிக தலைமை அலுவலகத்தில் எம்ஜிஆர் படத்துக்கு பொதுச்செயலாளர் பிரேமலதா, விஜயபிரபாகரன் மற்றும் கட்சி நிர்வாகிகள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

## அரசு மருத்துவமனையில் கலெக்டர் அழகுமீனா ஆய்வு



கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை அரசு மருத்துவமனை, பத்மநாபபுரம் அரசு தலைமை மருத்துவமனையினை கலெக்டர் அழகுமீனா நேற்று ஆய்வு செய்தார்.

## திராவிடப் பொங்கல் விழா



திருப்போரூர் வடக்கு ஒன்றியம், தையூர் ஊராட்சியில் நடந்த திராவிடப் பொங்கல் விழாவில் 5000 பேருக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் பொங்கல் பரிசை வழங்கினார்.

## பொங்கல் திருவிழா கோலப்போட்டி



சென்னை திரு.வி.க நகர், ஏகாங்கிபுரம் பகுதியில் நடந்த திராவிட பொங்கல் திருவிழா கோலப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் சேகர்பாபு பரிசுகளை வழங்கினார்.

## வெற்றி பெற்ற பெண்களுக்கு பரிசு



ஈரோடு செங்குந்தர் பள்ளி மைதானத்தில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற பெண்களுக்கு அமைச்சர் முத்துசாமி பரிசுகளை வழங்கினார். உடன் சந்திரகுமார் எம்எல்ஏ உள்ளார்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### ராணுவத்தில் பொறியாளர் பணி



இந்திய ராணுவப் படையில் லெப்டினன்ட் பதவிக்கான (350) ஆட்சேர்ப்புஅறிவிப்புகள் 2026இன் பல்வேறு பிரிவுகளுக்கு (SSC Technical, TGC, TES) வெளியிடப்பட்டுள்ளன.

கல்வித்தகுதி: B.E / B.Tech பட்டம் பெற்றிருக்க வேண்டும். பாடவாரியான காலிப்பணியிடங்கள் பற்றிய முழு விபரம் அறிய இணையதளத்தை பார்வையிடலாம். வயது வரம்பு : அக்டோபர் 1, 2026 தேதியின் படி, குறைந்தபட்சம் 20 வயது மற்றும் அதிகபட்சமாக 27 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. தேர்வு முறை : லெப்டினன்ட் பணிக்கு தகுதியானவர்கள் மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

பின்னர் SSBஆல் நடத்தப்படும் நேர்முகத் தேர்வு, உடற்தகுதி தேர்வு மற்றும் மருத்துவத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவர். இந்தியன் மிலிட்டரி அகாடமி மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு 49 வாரங்கள் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சியானது அக்டோபர் மாதத்தில் (2026) வழங்கப்படும். நடைபெறும் இடம், தேர்வுத் தேதி ஆகியவை மின்னஞ்சல் மூலம் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

விண்ணப்பக் கட்டணம்: எஸ்.சி/எஸ்.டி/பெண்கள்/ முன்னாள் இராணுவத்தினருக்கு விண்ணப்பக் கட்டணம் கிடையாது. என்.சி.சி சிறப்பு நுழைவுத் திட்டத்திற்கும் விண்ணப்பக் கட்டணம் எதுவும் இல்லை. இதர பிரிவினர் ரூ.250 செலுத்தி ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

இந்தப் பணியிட நிரப்புதல் குறித்த காலியிடங்களின் எண்ணிக்கை, தேர்விற்கான விண்ணப்பம், விரிவான பாடத்திட்டம், மதிப்பெண் விபரம் உள்ளிட்ட கூடுதல் விபரங்கள் அறிவிக்கையில் முழுமையாகத் தரப்பட்டுள்ளன.

முழுமையான அறிவிக்கையைப் பெற www.joinindianrmy.nic.in என்ற இணையதளத்தைப் பார்வையிடலாம். விண்ணப்பங்களை நிரப்புவதற்கான கடைசித் தேதி : பிப்ரவரி 5, 2026

## சுற்றுலா: அஹமதாபாத்தில் சுற்றி பார்க்க அற்புதமான 8 இடங்கள்!



இந்தியாவின் குஜராத்தில் உள்ள சபர்மதி நதியின் கரையோரம் அமைந்திருக்கும்நகரமேஅஹமதாபாத் தாகும். அஹமதாபாத் மிகவும் அழகான மற்றும் வண்ணமயமான நகரமாகும். குஜராத்தில் உள்ள பெரும் நகரங்களில் ஒன்றாகும். அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த அஹமதாபாத்தில் சுற்றி பார்க்க வேண்டிய முக்கியமான இடங்களை பற்றி பார்ப்போம்.

1. சபர்மதி ஆறு (SABARMATHI RIVERFRONT)

சபர்மதி ஆறு அஹமதாபாத்தை இரண்டாக பிளந்து கொண்டு நடுவே ஓடிக்கொண்டிருக்கிறது. அஹமதாபாத்தில் பார்க்க வேண்டிய முக்கியமான இடங்களில் இதுவும் ஒன்றாகும். இதனுடைய முன்பகுதியை மக்கள் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு தயார் படுத்தியுள்ளார்கள். நடைபாதை 11.4 கிலோ மீட்டர் அமைத்துள்ளனர். மிதிவண்டி ஓட்டுவதற்கும், படகு சவாரி செய்வதற்கும் தனி வசதிகள் ஏற்படுத்தி தந்துள்ளனர். மாலை வேளையில் சபர்மதி ஆற்றின் அழகை ரசித்துக்கொண்டே ஒருநடைப்பயணம் சென்று வரலாம். இங்கு செல்வதற்கு எந்த கட்டணமும் வசூலிக்கப் படுவதில்லை.

2. தாதா ஹரிணி வாவ் (DADA HARI NI VAV)

இது அஹமதாபாத்தில் உள்ள மிகவும் பழமையான கிணறாகும். இதை கட்டியது சுல்தான் முகமது பேகடா ஆவார். இந்த கிணறு ஏழு அடுக்குகளை கொண்டது. இதில் செதுக்கப்பட்டுள்ள சிற்பம் மிகவும் அழகிய கலைநயம் கொண்டதாகும். இது இந்து முஸ்லிம் கட்டிடக்கலைக்கு சரியான சான்று என்று கூறுகிறார்கள். நவம்பர் முதல் பிப்ரவரி வரை இங்கே வர உகந்த மாதங்களாகும். இங்கே சுற்றி பார்க்க எந்த கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை.

3. ஸ்டேச்சு ஆப் யுனிட்டி

சர்தார் வல்லபாய்படேலுக்காக அஹமதாபாத்தில் கட்டப்பட்டது தான் ஸ்டேச்சு ஆப் யுனைட்டியாகும். இது உலகிலேயே மிக உயர்ந்த சிலையாகும். இது ஐந்து பாகங்களாக பிரிக்கபட்டுள்ளது. அதில் மூன்று மட்டுமே மக்களுக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதில் தோட்டம், மியூசியம், சர்தார் வல்லபாய் அணை ஆகியவை அடங்கும். இச்சிலை 182 மீட்டர் உயரம் கொண்டதாகும். அக்டோபர் முதல் பிப்ரவரி வரை இங்கே செல்வதற்கு உகந்த மாதங்களாகும். இங்கே செல்வதற்கான கட்டணம் பெரியவர்களுக்கு 120 ரூபாயும், குழந்தைகளுக்கு 60 ரூபாயும், 3 வயதுக்குகீழே உள்ள குழந்தைகளுக்கு இலவசமாகும்.

4. சுவாமி நாராயணன் கோவில் (SWAMI NARAYANAN TEMPLE)

அஹமதாபாத்தில் மிகவும் புகழ்பெற்ற இடமாக சுவாமி நாராயணன் கோவில் இருக்கிறது. இக்கோவிலை அக்ஷார்தாம் கோவில் என்றும் அழைப்பார்கள். இதனுடைய கட்டுமானம் அழகான வண்ணமயமான தோற்றம் சுற்றுலாப்பயணிகளை இங்கே அதிகம் ஈர்க்கிறது. இங்கு செல்வதற்கு கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. கோவிலிலே சென்று தரிசனம் செய்து விட்டு பின்பு சச்சிதாநந்தம் லைட் ஷோவைக் காணலாம்.

5. சபர்மதி ஆசிரமம் (SHABARMATHI ASHRAMAM)

அஹமதாபாத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற இடம்தான் சபர்மதி ஆசிரமமாகும். இங்கிருந்து தான் மஹாத்மா காந்தியால் வரலாற்று சிறப்புமிக்க தண்டி யாத்திரை தொடங்கப்பட்டது. சபர்மதி ஆற்றின் ஓரத்திலிருக்கும் இவ்விடத்தில் காந்தி எப்படி வாழ்ந்தார் என்பதை பார்த்து தெரிந்துக்கொள்ளலாம். இவ்விடத்தை சுற்றி பார்க்க கட்டணம் ஏதும் வசூலிக்கப்படவில்லை.

6. ராணி கே வாவ் (RANI KI VAV)

ராணி கே வாவ் சரஸ்வதி ஆற்றங்கரையில் உள்ள 900 வருட பழமையான படிக்கிணறாகும். இதன் அமைப்பு மற்ற பழமையான கிணறுகளை போலவே அமைந்துள்ளது. எனினும் இக்கிணறு அதன் அழகிய வேலைப்பாட்டிற்கும், கட்டுமானத்திற்கும் பெயர் போனதாகும். யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய களங்களின் பட்டியலில் ஒன்றாக இருக்கிறது.

அஹமதாபாத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற இடமாகவும், அதிக சுற்றுலாப்பயணிகளை கவர்ந்திழுக்கும் இடமாகவும் திகழ்கிறது. அக்டோபர் முதல் மார்ச் மாதம் இவ்விடத்திற்கு வர உகந்த மாதங்களாகும். இந்தியர்களுக்கு 15 ரூபாயும், வெளிநாட்டினருக்கு 200 ரூபாயும் வசூலிக்கப்படுகிறது. இதன் அருகிலிருக்கும் பஞ்சமுகி ஆஞ்சநேயர் கோவிலையும் பார்த்துவிட்டு செல்லலாம்.

7. ஜமாமசூதி (JAMA MASJID)

ஹம்மது ஷா உருவாக்கிய பல கட்டிடக்கலைகளில் ஜமாமசூதியும் ஒன்றாகும். இந்த மசூதி 1423 ஆம் ஆண்டு முஸ்லிம்கள் தங்கள் வெள்ளிக்கிழமை தொழுகையை செய்வதற்காக கட்டப்பட்டதாகும். இது பத்ரா கோட்டைக்கு அருகிலே உள்ளது. ஜமாமசூதியில் அழகிய வேலைப்பாடுகளை கொண்ட 260 தூண்கள் கவனிக்கபட வேண்டியவையாகும். இங்கே வருவதற்கு உகந்த மாதம் அக்டோபர் முதல் மார்ச் ஆகும். இங்கே எந்த கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை.

8. கன்காரியா ஏரி (KANKARIA LAKE)

கன்காரியாஏரியேஅஹமதாபாத்தில் உள்ள பெரிய ஏரியாகும். இந்த ஏரியை 15ஆம் நூற்றாண்டில் கட்டினார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த ஏரியில் தானாகவே சுத்திகரித்துக்கொள்ளும் வாட்டர் ப்யூரிபையர் உள்ளது. இப்போது இந்த இடம் சுற்றுலாப்பயணிகளுக்கு பொழுதுபோக்கும் இடமாக இருக்கிறது. குழந்தைகள் விளையாடும் இடம், பூங்கா, உணவு கடைகள் போன்றவை இருக்கிறது. இவ்விடத்தை சுற்றிபார்க்க உகந்த மாதம் அக்டோபர் முதல் மார்ச் ஆகும். பெரியவர்களுக்கு 25 ரூபாயும் குழந்தைகளுக்கு 10 ரூபாயும் ஜாகிங் செய்வோருக்கு இலவசமாகவும் இருக்கிறது. இங்கு சுற்றுலா பயணிகள் வருகை தரும் போது, இங்கேயிருக்கும் இசை நீரூற்றை ரசிக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஜனவரி (2026) வார ராசிபலன்

### 18.1.2026 முதல் 24.1.2026 வரை

### மேஷம்

இந்த வாரம் எதிலும் ஒரு வேகம் அதிகரிக்கும். அடுத்தவர் விஷயங்களில் தலையிடும் போது கவனம் தேவை. உல்லாச பயணங்கள் செல்ல நேரலாம் எதிலும் அளவுக்கு மீறாமல் இருப்பது நல்லது. ஆடம்பர பொருட்கள் சேரும். குடும்பத்தில் திருப்தியான நிலை காணப்படும். வீட்டிற்கு தேவையன பொருள் வாங்குவதால் செலவு ஏற்படலாம்.

கணவன், மனைவிக்கு இடையே இருந்த மன வருத்தம் நீங்கி நெருக்கம் ஏற்படும். பிள்ளைகளுடன் மனதுக்கு பிடித்த இடத்திற்கு சென்று பொழுதை கழிப்பீர்கள். வீடு மனை போன்ற முதலீடுகளில் ஆர்வம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மெத்தன போக்கு நீங்கி வேகம் பிடிக்கும். தொழில் விஷயமாக வெளியூர் செல்ல நேரலாம். எதிர்பார்த்த ஆர்டர் கிடைக்க இருந்து வந்த தாமதம் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புதிய பொறுப்புகள் கிடைக்க பெற்று அதனால் நன்மை அடைவார்கள். மேலிடத்தில் இருந்து பொறுப்புகள் அதிகமாக வழங்கப்படும். பெண்களுக்கு எதிர்பார்த்த செல்வ சேர்க்கை உண்டாகும்.

### ரிஷபம்

இந்த வாரம் மனதில் நிம்மதி ஏற்படும். மற்றவர்களுக்கு ஆலோசனை கூறும் நிலை உருவாகலாம். ஆடை, ஆபரணம் வாங்குவதால் செலவு உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்கள் யோசனையை கேட்டு நடந்து கொள்வது மனதிற்கு திருப்தியை தரும். கணவன், மனைவிக்கு இடையே இருக்கும் அன்பு நீடிக்கும். பிள்ளைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுத்து மகிழ்வீர்கள்.

விருந்தினர் வருகை இருக்கும். தந்தை வழியில் இருந்து வந்த கருத்து மோதல்கள் அகலும். பூர்வீக சொத்துக்கள் கைக்கு வந்து சேரும். தொழில் வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். எதிலும் ஒரு முறைக்கு மறுமுறை யோசித்து முடிவெடுப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிதானத்தை கடை பிடிப்பது நல்லது.

இல்லையெனில் பலரையும் விரோதித்துக் கொள்ள வேண்டி இருக்கும். பெண்களுக்கு உங்களது ஆலோசனையை கேட்டு அதன்படி சிலர் நடந்து காரிய வெற்றி அடைவார்கள்.

### மிதுனம்

இந்த வாரம் மனதில் இருந்த கவலை நீங்கும். தைரியம் உண்டாகும். எல்லா நன்மையும் உண்டாகி உடல் ஆரோக்கியம் பெறும். வாக்கு வன்மையால் எந்த காரியத்தையும் சுலபமாக செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கு இடையே நெருக்கம் அதிகரிக்கும். குழந்தைகள் எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

நண்பர்கள் உறவினர்கள் மூலம் தேவையான உதவி கிடைக்கும். வழக்குகளில் சாதகமான நிலை காணப்படும். எதிர்ப்புகள் விலகும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் லாபம் கிடைக்க பெறுவீர்கள். புதிய ஆர்டர்கள் கிடைக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலைப்பளு குறைந்து மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். பண வரத்தும் திருப்தியாக இருக்கும். பெண்களுக்கு சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி காண்பீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பார்க்கும் வெற்றி கிடைக்க பாடுபடுவீர்கள். எதிலும் முன்னேற்றம் உண்டாகும்..

### கடகம்

இந்த வாரம் எந்த ஒரு காரியத்தையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். பண வரத்து அதிகரிக்கும். அடுத்தவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைக்காமல் நேரடியாக செய்வது நன்மை தரும். குடும்பத்தில் திடீர் குழப்பங்கள் தலை தூக்கும். அமைதியாக இருக்க முயன்றாலும் கூட மற்றவர்கள் வலுக்கட்டாயமாக பேசுவார்கள். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது.

பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. அக்கம்பக்கத்தினரிடம் சில்லறை சண்டைகள் ஏற்படலாம். தொழில் வியாபாரம் தொடர்பாக அதிகம் உழைக்க வேண்டி இருக்கும். அதற்கேற்ற பலனும் கிடைக்க பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களின் நிர்வாக திறமை பளிச்சிடும்.

எதிர்ப்புகள் குறையும். காரிய தடை அகலும். பெண்களுக்கு எந்த ஒரு வேலையையும் அடுத்தவரை நம்பி ஒப்படைக்காமல் நேரடியாக கவனிப்பது நன்மை தரும். மாணவர்களுக்கு முயற்சிகள் சாதகமான பலன் தரும். கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும்.

### சிம்மம்

இந்த வாரம் உடல் ஆரோக்கியம் அடையும். மற்றவர்களுடன் இருந்த விரோதம் மறைந்து நட்பு ஏற்படும். வீண் செலவு குறையும். எதிலும் ஒரு வேகத்தை உண்டாக்கும். நல்லதா ? கெட்டதா ? என்று யோசிக்க தோன்றாத மனநிலை உண்டாகும். குடும்பத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். திருமண முயற்சிகள் கைகூடும். வாழ்க்கை துணையால் பண வரத்து இருக்கும்.

கணவன், மனைவிக்கு இடையே இருந்த மன வருத்தம் நீங்கும். பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக பொழுதை கழிப்பீர்கள். உறவினர்களுடன் இருந்த மன வருத்தம் நீங்கும். குடும்பத்தில் பொன்னான தருணங்கள் நிகழும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறி வேகம் பிடிக்கும். வியாபாரம் தொடர்பான முயற்சிகளில் சாதகமான பலன் உண்டாகும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புத்தி சாதுரியம் அதிகரிக்கும். பொருளாதார நிலை உயரும். பெண்களுக்கு மற்றவர்களுடன் இருந்த மன வருத்தம் நீங்கி நட்பு உண்டாகும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான பயணம் செல்ல நேரலாம். திறமை வெளிப் படும். சாமர்த்தியமான பேச்சு இருக்கும்.

### கன்னி

இந்த வாரம் பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும். எதிர்பார்த்த பண வரவு கிடைக்கும். மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் சமூகத்தில் அந்தஸ்தும், மரியாதையும் கிடைக்க பெறுவீர்கள். தூர தேச பிரயாணங்களுக்கான சூழ்நிலை ஏற்படும். சுப நிகழ்ச்சிகளுக்கள் தங்கு தடையின்றி நடைபெறும். வழக்குகள் உங்களுக்கு சாதகமான நிலையில் இருக்கும். ஆரோக்கியக் குறைபாடு நீங்கும். குடும்பத்தில் பிள்ளைகளால் நன்மை உண்டாகும்.

கணவன், மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு திறம்பட செயல்படுவீர்கள். உறவினர்கள் வருகை இருக்கும். வீடு, வாகனம் வாங்கும் முயற்சி சாதகமான பலன் தரும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். வாகனங்கள் சேர்க்கை இருக்கும். தொழில் விரிவுபடுத்துவது பற்றிய ஆலோசனை மேற்கொள்வீர்கள். அனுபவப் பூர்வமான அறிவு திறன் கைகொடுக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களின் செயல் திறமை அதிகரிக்கும். பதவி உயர்வு கிடைக்கலாம். தொழில் நிமித்தமாக வெளியூர் அடிக்கடி செல்ல வேண்டி வரலாம். பெண்கள் உங்களது செயல்களுக்கு மற்றவர்களது ஆதரவு கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடக்கும். எதிர்பாராத அனுபவங்களை பெறுவீர்கள்..

### துலாம்

இந்த வாரம் எதிலும் தன்னம்பிக்கை யுடன் ஈடுபட்டு காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். புதிய தொடர்புகள் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். முக்கிய நபர்களின் அறிமுகமும் நட்பும் கிடைக்க பெறுவீர்கள். எதிர்பார்த்தபடி எல்லாம் நடந்தாலும் மற்றவர்கள் தவறாக புரிந்து கொள்ள நேரலாம் கவனம் தேவை. குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுகொடுத்து செல்வது நன்மை தரும். பிள்ளைகளிடம் கவனமாக இருப்பதும் அன்பாக பேசுவதும் நல்லது. நண்பர்கள் மற்றும் உறவினர்கள் ஆதரவாக இருப்பார்கள். தொழில் வியாபாரத்தில் வேகம் அதிகரிக்கும். எதிர்பார்த்தபடி பொருட்களை அனுப்புவதில் இருந்த தாமதம் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திடீர் பயணத்தை சந்திக்க நேரலாம். மேல் அதிகாரிகளிடம் அனுசரித்து செல்வது நல்லது. புதிய வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு தக்க பலன் கிடைக்கும். பெண்களுக்கு மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விஷயங்களில் திடீர் தடை, தாமதம் ஏற்படலாம். மற்றவர்களை அனுசரித்து செல்வது நல்லது. பெரியோர், ஆசிரியர் அரவணைப்பு இருக்கும்..

### விருச்சிகம்

இந்த வாரம் மறைமுக எதிர்ப்புகள் குறையும். எடுத்த காரியத்தில் ஏற்பட்ட தடை, தாமதம் நீங்கும். உடல் ஆரோக்கியம் பெறும். வழக்குகள், தகராறுகளில் சாதகமான பலன் கிடைக்கும். எந்த ஒரு விஷயத்திலும் மிகவும் அக்கறை காட்டுவீர்கள். அதேவேளையில் கடுமையான முயற்சிகளும் தேவை. குடும்பத்தில் இருந்த சண்டை சச்சரவுகள் நீங்கும்.

கணவன், மனைவிக்கு இடையில் இருந்த மனக் கசப்பு மாறும். குழந்தைகளின் நலனில் அக்கறை காட்டுவதன் மூலம் அவர்களிடம் நன்மதிப்பை பெறுவீர்கள். மனநிம்மதி உண்டாகும். உறவினர்கள் வருகை இருக்கும். தாய்வழி உறவினர்களிடம் இருந்து வந்த மனக் கசப்புகள் நீங்கும். தொழில் வியாபாரம் தொடர்பான போட்டிகள் நீங்கும். மனதில் உற்சாகம் உண்டாகும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களும் உற்சாகமாக காணப்படுவார்கள். சக ஊழியர்களின் உதவியும் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். பெண்கள் எந்த ஒரு செயலையும் மிகவும் அக்கறையுடன் செய்து முடிப்பீர்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பதில் வேகம் காட்டுவீர்கள். எதிலும் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள்..

### தனுசு

இந்த வாரம் எல்லா முயற்சிகளிலும் வெற்றி உண்டாகும். புதிய நபர்களின் அறிமுகமும் அவர்களால் நன்மையும் ஏற்படும். சுபச் செலவுகள் இருக்கும். பண வரத்து திருப்தி தரும். உங்களது செயல்களுக்கு யாராவது ஒருவர் உறுதுணையாக இருப்பார்கள். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்களை ஏதாவது குறை கூறுவார்கள். அனுசரித்து செல்வது நன்மை தரும்.

கணவன் மனைவிக்கு இடையே தேவையில்லாத விஷயத்தால் மன வருத்தம் ஏற்படலாம் கவனம் தேவை. குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். தொழில் வியாபாரம் மிதமாக இருக்கும். எதிர்பார்த்த பண வரத்து தாமதப்பட்டாலும் கைக்கு வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடினமான பணிகளை செய்ய வேண்டி இருக்கும். உங்களது பேச்சு திறமையால் மேலிடத்தில் இருப்பவர்களிடம் நல்ல பெயர் பெறுவீர்கள். சக ஊழியர்களிடம் கவனமாக இருப்பது நல்லது. பெண்களது செயல்களுக்கு பக்கபலமாக யாராவது இருப்பார்கள். மாணவர்கள் கல்வியில் வெற்றிபெற கடினமாக உழைக்க வேண்டி இருக்கும். எல்லோரிடமும் அனுசரித்து செல்வது நல்லது.

### மகரம்

இந்த வாரம் பண வரவு எதிர்பார்த்தபடி இருக்கும். சுப காரியங்கள் திட்டமிட்டபடி நடக்கும். நெருக்கமானவர்களுடன் பேசி மகிழ்வீர்கள்.

வாகனங்களை பயன்படுத்தும்போது கவனம் தேவை. நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்க பெறுவீர்கள். மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் நிம்மதி காணப்படும். கணவன் மனைவிக்கு இடையே சகஜ நிலை நீடிக்கும். குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பிள்ளைகளின் செயல்திறன் அதிகரிக்கும். உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் ஆக்கபூர்வமான செயல்களை மேற்கொண்டு வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகள் கூறிய பணிகளை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள்.

வருமானம் திருப்திகரமாக இருக்கும். பெண்களுக்கு மனதில் திடீர் கவலை ஏற்பட்டு நீங்கும். செயல்களில் வேகம் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் முன்னேற திட்டமிட்டு செயல்படுவீர்கள். எதிலும் முன்னெச்சரிக்கையுடன் இருப்பது நன்மை தரும்..

### கும்பம்

இந்த வாரம் எல்லா காரியங்களும் சுமூகமாக நடந்து முடியும். மனத் துணிவு உண்டாகும். எதையும் வேகமாக செய்து முடிப்பீர்கள். செலவு அதிகரிக்கும். தடை தாமதம் விலகும். மற்றவர்கள் விஷயத்தில் கவனம் செலுத்துவதை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும். குடும்ப உறுப்பினர்கள் மூலம் கூடுதல் வருமானம் கிடைக்க பெறலாம்.

கணவன் மனைவிக்கு இடையே ஒற்றுமை காணப்படும். பிள்ளைகள் உங்கள் சொல்படி கேட்டு நடப்பது மன மகிழ்ச்சியை தரும். நினைத்ததை நடத்தி முடிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். சொத்துப் பிரச்சினை தீர்வு பெறும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு எதையும் சாதிக்கும் திறமை உண்டாகும். சரக்குகளை கையாளும் போது கவனம் தேவை.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். வேலைகளை செய்து முடிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். பெண்கள் எந்த காரியத்தை செய்து முடிப்பதிலும் வேகத்தை காண்பீர்கள். மாணவர்களுக்கு எதிர்கால கல்வி பற்றிய எண்ணம் மேலோங்கும். அது தொடர்பான பணிகளில் ஈடுபடுவீர்கள்..

### மீனம்

இந்த வாரம் அறிவுத்திறன் அதிகரிக்கும். சாதுரியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்க பெறுவீர்கள். பண வரத்து அதிகரிக்கும். அடுத்தவர் பிரச்சனைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. வீண் ஆசைகள் தோன்றலாம். மனதை கட்டுப்படுத்திக் கொள்வது நல்லது. சின்ன விஷயங்களில் மன நிறைவு உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களுக்காக உழைக்க வேண்டி இருக்கும்.

கணவன், மனைவிக்கு இடையே ஒற்றுமை ஏற்படும். குழந்தைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வீட்டில் உள்ளவர்களுடன் இருந்து வந்த மோதல்கள் குறையும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். வாக்கு வன்மையால் லாபம் கிடைக்க பெறுவீர்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. அலுவலகத்தில் உங்களுக்கான அங்கீகாரம் அதிகரிக்கும். பெண்களுக்கு கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். சாதுரியமான பேச்சால் நன்மை கிடைக்க பெறுவீர்கள்.

# தமிழகத்தில் வருகிற 23-ந்தேதி மிதமான மழைக்கு வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம் தகவல்

**சென்னை, ஜன.18:**

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வடகிழக்கு பருவமழை அடுத்த 48 மணி நேரத்தில் தமிழகம், புதுவை, காரைக்கால் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென்னிந்திய பகுதிகளிலிருந்து விலகுவதற்கான வாய்ப்புள்ளது. குமரிக்கடல் பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.



இதனிடையே இன்று முதல் 21-ந்தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

22-ந்தேதி தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

23-ந்தேதி கடலோர தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். உள் தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

இதற்கிடையே, இன்று முதல் 21-ந்தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பை ஒட்டி இருக்கக்கூடும்.

உறைபனி எச்சரிக்கை:

இன்று தமிழகத்தின் நீலகிரி மாவட்டம் மற்றும் கொடைக்கானல் மலைப்பகுதிகளில் (திண்டுக்கல் மாவட்டம்) ஓரிரு இடங்களில் இரவு / அதிகாலை வேளையில் உறைபனி ஏற்பட வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 30-31° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 21-22° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

மீனவர்களுக்கானஎச்சரிக்கை:

தென்தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் இன்று சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## விளையாட்டு செய்திகள்

### இந்திய ஜூனியர் ஹாக்கி அணி பயிற்சி முகாமிற்கு கோவில்பட்டியைச் சேர்ந்த 3 பேர் தேர்வு

**தூத்துக்குடி, ஜன.18:**

இந்திய ஜூனியர் ஹாக்கி அணி பயிற்சி முகாமுக்கு கோவில்பட்டியைச் சேர்ந்த ஒரு வீராங்கனை, 2 வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர். தமிழக ஜூனியர் ஹாக்கி அணி , தேசிய போட்டி யில் கடந்தாண்டு சிறப்பாக விளையாடியது. அந்தப் போட்டியில் சிறப்பாக விளையாடிய கோவில் பட்டியைச் சேர்ந்த சுபலட்சுமி, அருண், மணிமாறன் ஆகி யோர் இந்திய ஹாக்கி அணி பயிற்சி முகாமுக்குத் தேர்வு பெற்றனர். தேர்வு பெற்ற வீரர்கள் பெங்களூரில் நடைபெறும் பயிற்சி முகாமில் கலந்து கொள்வர். அங்கு சிறப்பாக விளையாடினால், 2027-ஆம் ஆண்டு நடைபெறும் உலக கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியில் இந்திய அணிக்காக விளையாட வாய்ப்பு பெறலாம் பயிற்சி முகாமுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள வீரர்களை ஹாக்கி யூனிட் ஆஃப் தூத்துக்குடி தலைவர் மோகன்ராஜ் அருமை நாயகம், செயலர் குரு சித்திர சண்முக பாரதி, பொருளாளர் காளிமுத்து பாண்டியராஜா, முன்னாள் இந்திய ஹாக்கி அணி வீரர் அஸ்வின், ஆல்ட்ரின் அதிசயராஜ், திருச்செல்வம் ஆகியோர் பாராட்டினர்.

### அமெரிக்க ஸ்குவாஷ் போட்டி: வேலவன் செந்தில் குமார் வெற்றி

**டெட்ராய்ட், ஜன.18:**

அமெரிக்காவின் மிச்சிகன் நகரில் உள்ள டெட்ராய்டில் டிஆர் 21 மோட்டார் சிட்டி ஓபன் ஸ்குவாஷ் போட்டி நடைபெற்று வருகிறது. இதன் முதல் சுற்றில் உலகத் தரவரிசையில் 46-வது இடத்தில் உள்ள இந்தியாவின் வேலவன் செந்தில் குமார், இங்கிலாந்தின் சாமுவேல் ஆஸ்போர்ன்-வைல்டுடன் மோதினார். இதில் வேலவன் செந்தில்குமார் 11-9, 11-5, 11-6 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். மற்றொரு இந்திய வீரரான ரமித் டாண்டன் 11-8, 11-4, 8-11, 11-4 என்ற செட் கணக்கில் இங்கிலாந்தின் டாம் வால்ஸை தோற்கடித்தார்.

### ரூ.13 ஆயிரம் கோடியை நிராகரித்த மெஸ்ஸி

**வாஷிங்டன், ஜன.18:**

கிளப் போட்டிகளில் அமெரிக்காவின் இன்டர் மியாமி அணிக்காக அர்ஜென்டினாவின் கால்பந்து ஜாம்பவான் மெஸ்ஸி விளையாடி வருகிறார். இவர் இன்டர் மியாமி அணிக்கு செல்லும் முன்பாக கடந்த 2023ஆம் ஆண்டில் சவுதியின் கிளப் அணிகள் அவரை வாங்க ஆர்வம் காட்டின. ஆனால் மெஸ்ஸி இன்டர் மியாமி அணியில் இணைவதையே விரும்பினார்.

இந்த நிலையில், 2023ஆம் ஆண்டில் 1.4 பில்லியன் யூரோக்கள் |(அன்றைய மதிப்பில் சுமார் ரூ.13,000 கோடி) தருகிறேன் எனக் கூறியும் அல் இத்திஹாத் அணியில் (சவுதி) இணைய மெஸ்ஸி மறுத்துவிட்டதாக அந்த அணியின் உரிமையாளர் அன்மர் அல் ஹைலி தெரிவித்துள்ளார்.

# மாடுபிடி வீரர்களுக்கு அரசு வேலை: ஏமாற்று அறிவிப்பை வெளியிடும் மு.க. ஸ்டாலின்... அண்ணாமலை குற்றச்சாட்டு

**சென்னை, ஜன.18:**

தமிழக முன்னாள் பாஜக தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,




கடந்த 2021 ஆம் ஆண்டு தேர்தலில், ஜல்லிக்கட்டு காளைகளை வளர்ப்போருக்கு ஊக்கத்தொகையாக, மாதம் 1000 ரூபாய் வழங்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்தார் முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின். ஆகா, தமிழ்ப் பண்பாட்டை ஊக்குவிக்கப் போகிறார் என்று அனைவரும் நினைத்தோம். ஆட்சிக்கு வந்து ஐந்து ஆண்டுகள் கடந்து விட்டன. இதுவரை, ஒரு ரூபாய் கூடக் கொடுக்கவில்லை. இந்த நிலையில் இன்று, மாடுபிடி வீரர்களுக்கு அரசு வேலையில் முன்னுரிமை கொடுக்கப் போகிறோம் என்று மற்றுமொரு ஏமாற்று அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார் மு.க. ஸ்டாலின்.

ஏற்கனவே, ஜல்லிக்கட்டு காளைகள் வளர்ப்பவர்கள் ஒவ்வொருவருக்கும், இந்த ஐந்து ஆண்டுகளில், கொடுக்கப்பட வேண்டிய சுமார் ரூ.60,000 ஊக்கத்தொகை எப்போது வருமென்று தெரியவில்லை. இப்படி தொடர்ந்து வெற்று வாக்குறுதிகள் கொடுத்து யாரை ஏமாற்றலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார் முதல்-அமைச்சர் என்பது தெரியவில்லை.

மு.க. ஸ்டாலின் அவர்களுக்குப் பிடித்த "பேரு பெத்த பேரு, தாக நீலு லேது" என்ற தெலுங்குப் பழமொழி, திமுகவின் தேர்தல் வாக்குறுதிகளுக்கு முழுமையாகப் பொருந்தும். என தெரிவித்துள்ளார்.

# காணும் பொங்கல்: களை கட்டிய கொண்டாட்டம்: சுற்றுலா தலங்களில் அலைமோதிய கூட்டம்



**சென்னை, ஜன.18:**

தமிழகம் முழுவதும் பொங்கல் பண்டிகை கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. நேற்று முன்தினம் பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்ட நிலையில், நேற்று மாட்டுப் பொங்கலும் கொண்டாடப்பட்டது. இன்று காணும் பொங்கல் தமிழகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மெரினா கடற்கரையில் இன்று காலை முதலே பொதுமக்கள் குடும்பத்துடன் திரண்டனர்.

இதேபோன்று தமிழகம் முழுவதும் அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் பொதுமக்கள் குவிந்தனர். இதன் காரணமாக மெரினா கடற்கரை உள்ளிட்ட அனைத்து சுற்றுலா பகுதிகளும் களைகட்டி காணப்பட்டன. பொழுதுபோக்கு மையங்களில் அதிக அளவில் மக்கள் கூட்டம் கூட்டமாக திரண்டதால், எந்தவித அசம்பாவிதமும் நிகழாத வண்ணம் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஊட்டி, கொடைக்கானல் போன்ற மலைவாசஸ்தலங்களிலும் சுற்றுலாப் பயணிகள் கூட்டம் அலைமோதியது.

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக முக்கிய வழித்தடங்களில் கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட்டன.

# 3 நாட்களில் 160.83 டன் திடக்கழிவுகள் அகற்றம்: சென்னை மாநகராட்சி

**சென்னை, ஜன.18:**

சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கடற்கரைப் பகுதிகளில் 14.01.2026 முதல் 16.01.2026 வரை 160.83 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள கடற்கரைப் பகுதிகளை பொதுமக்களின் பொழுதுபோக்கிற்கு உகந்த வகையில் மேம்படுத்திட மாநகராட்சி சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



மேலும், மெரினா கடற்கரை. பெசன்ட் நகர், திருவான்மியூர், பாலவாக்கம், நீலாங்கரை, அக்கரை, திருவொற்றியூர் கடற்கரை பகுதியில் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் இயந்திரங்கள் கொண்டு நாள்தோறும் சுழற்சி முறைகளில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, பொதுமக்கள் அதிகளவில் வந்து செல்லக்கூடிய கடற்கரைப் பகுதிகளில் கூடுதலாக தூய்மைப் பணியாளர்கள், இயந்திரங்களைக் கொண்டு 14.01.2026 முதல் தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது

கடற்கரைப் பகுதிகளை தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பராமரிப்பது அனைவரின் பொது பொறுப்பாகும். கடற்கரைகளில் குப்பைகள், பிளாஸ்டிக் கழிவுகள், உணவுப் பொருள், எச்சங்கள் உள்ளிட்ட எந்த விதமான கழிவுகளையும் கொட்டுவது சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது.

எனவே, கடற்கரைப் பகுதிகளுக்கு வருகைதரும் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அனைவரும் தங்களது குப்பைக் கழிவுகளை, அதற்காக வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளில் மட்டும் போட்டு, மாநகராட்சியின் தூய்மைப் பணிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## க்ரைம் கார்னர்

### நெய்வேலியில் போலீஸாரை வெட்டிய ரவுடி சுட்டுப்பிடிப்பு



**விருத்தாசலம், ஜன.18:**

அடிதடி வழக்கில் தலைமறைவாக இருந்த ரவுடியைப் பிடிக்க முயன்றபோது, அவர் போலீஸாரை அரிவாளால் வெட்டினார். இதையடுத்து, போலீஸார் அவரை துப்பாக்கியால் சுட்டுப் பிடித்தனர்.

கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடியைச் சேர்ந்த ரமேஷ் (50) என்பவர் காய்கறிக் கடை நடத்தி வருகிறார். அவருக்கும், நெய்வேலி மாற்றுக்குடியிருப்பைச் சேர்ந்த சுபாஷ்கர் என்பவருக்கும் முன்விரோதம் இருந்துள்ளது.

இந்நிலையில், ரமேஷ் கடைக்கு நேற்று முன்தினம் சென்ற சுபாஷ்கர், ரமேஷை அரிவாளால் வெட்டிவிட்டு அங்கிருந்து தப்பியோடினார். இதில் பலத்த காயமடைந்த ரமேஷ் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதையடுத்து, குறிஞ்சிப்பாடி காவல் ஆய்வாளர் விஜயகுமார் தலைமையிலான போலீஸார் சுபாஷ்கரை தேடி வந்தனர். அவர் நெய்வேலி அடுத்த இருப்பு கிராமத்தில் முந்திரித்தோப்பில் பதுங்கியிருப்பது தெரியவந்தது. போலீஸார் அங்கு சென்று, சுபாஷ்கரைப் பிடிக்க முயன்றனர். அப்போது சுபாஷ்கர் அரிவாளால் காவலர்கள் வெங்கடாசாலம், வைத்தியநாதன் ஆகியோரை வெட்டினார். மேலும், காவல் ஆய்வாளரையும் தாக்க முயன்றார். இதையடுத்து, காவல் ஆய்வாளர் விஜயகுமார் சுபாஷ்கரின் காலில் துப்பாக்கியால் சுட்டுப் பிடித்தார்.

பின்னர், சுபாஷ்கர் மற்றும் காயமடைந்த காவலர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சம்பவ இடத்தில் ஆய்வு மேற்கொண்ட எஸ்.பி. ஜெயக்குமார், என்எல்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் காவலர்கள் வெங்கடாசலம், வைத்தியநாதனை சந்தித்து நலம் விசாரித்தார். பின்னர் எஸ்.பி. செய்தியாளர்களிடம் கூறும் போது, "ரவுடி சுபாஷ்கர் மீது கொலை முயற்சி, கொள்ளை, ஆள்கடத்தல் என 9 வழக்குகள் நிலுவையில் உள்ளன" என்றார்.

### வீடு புகுந்து பெண் மீது தாக்குதல்: ஐபிஎஸ் அதிகாரி மீது குற்றச்சாட்டு

**கொளத்தூர், ஜன.18:**

துபாயில் வசிக்கும் தொழில் அதிபர் ஒருவருக்கு கொளத்தூர் மக்காரம் தோட்டம் பகுதியில் சொந்தமாக வீடு உள்ளது. இந்த வீட்டில் 40 வயது பெண் ஒருவர் குடும்பத்துடன் வாடகைக்கு வசித்து வருகிறார். கடந்த ஒரு வருடமாக இவர் வாடகையும் செலுத்தாமல், வீட்டையும் காலி செய்யாமல் இருந்துள்ளார். இதனால் வீட்டு உரிமையாளர் தரப்பினர் நேற்று முன்தினம் நள்ளிரவு வீட்டுக்குள் நுழைந்து வீட்டை காலி செய்யும்படி மிரட்டி தாக்கியுள்ளனர். இதில் காயமடைந்த பெண் பெரியார் நகர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இதுகுறித்து ராஜமங்கலம் போலீஸார் விசாரணை நடத்தினர். விசாரணையில் துபாயில் வசிக்கும் வீட்டு உரிமையாளரின் உறவினரான ஐஆர்எஸ் அதிகாரி மற்றும் ஐபிஎஸ் அதிகாரி உட்பட 6 பேர் பாதிக்கப்பட்ட பெண் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தியது தெரியவந்தது. இதுகுறித்து போலீஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

## வணிகச் செய்திகள்

### யுபிஐ மூலம் பி.எப். பணம் எடுக்கும் வசதி ஏப்ரல் மாதத்துக்குள் அறிமுகம்

**புதுடெல்லி, ஜன.18:**

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (இபிஎப்ஓ) சந்தாதாரர்கள், தங்கள் கணக்கில் உள்ள பணத்தை வரும் ஏப்ரல் மாதத்துக்குள் யுபிஐ மூலம் தங்களது வங்கி கணக்குக்கு மாற்றிக்கொள்ள முடியும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியில், ஒரு குறிப்பிட்ட தொகையை மட்டும் வைத்துக் கொண்டு மீதமுள்ள பணத்தை யுபிஐ மூலம் தொழிலாளர்கள் தங்கள் வங்கி கணக்குக்கு மாற்றிக் கொள்ளும் வசதியை தொழிலாளர் நலத்துறை அமைச்சகம் செய்து வருகிறது. சந்தாதாரர்கள் தங்களின் வங்கிக்கணக்குக்கு மாற்றிக் கொள்ளும் தகுதியான தொகையை அறிந்து யுபிஐ மூலம் மாற்றிக் கொள்ளலாம். 8 கோடி சந்தாதாரர் யுபிஐ பின் எண் மூலம் அந்தத் தொகை தொழிலாளர் இணைத்துள்ள வங்கி கணக்குக்கு சென்றுவிடும். இந்த வசதியில் உள்ள மென்பொருள் பிரச்சினைகளை சரி செய்யும் பணியில் இபிஎப்ஓ ஈடுபட்டுள்ளது. வரும் ஏப்ரல் மாதத்துக்குள் இந்த திட்டம் அமலாகும் எனவும், இதன் மூலம் சுமார் 8 கோடி சந்தாதாரர்கள் பயனடைவர் எனவும் கூறப்படுகிறது.

### கோயம்பேடு காய்கறி சந்தைக்கு விடுமுறை

**சென்னை, ஜன.18:**

காணும் பொங்கல் விழாவை முன்னிட்டு கோயம்பேடு காய்கறி சந்தைக்கு நேற்று (ஜன.17) விடுமுறை விடப்பட்டது.

இந்த கோயம்பேடு சந்தையில் 1200-க்கும் மேற்பட்ட காய்கறி கடைகள் இயங்கி வருகின்றன. இந்த கடைகளுக்கு தினமும் சுமார் 3 ஆயிரம் டன்னுக்கு மேற்பட்ட காய்கறிகள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகிறது. இங்கு 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு இ-பேப்பர்.காம்



# அடுத்து வரும் ஓரிரு மாதங்களில் ஸ்மார்ட்போன், டிவி, லேப்டாப் விலைகள் உயர வாய்ப்பு

**புதுடெல்லி, ஜன.18:**

அடுத்து வரும் ஒரு சில மாதங்களில், ஸ்மார்ட்ஃபோன், தொலைக்காட்சி, லேப்டாப் போன்றவற்றின் விலைகள் 4 - 8 சதவிகிதம் உயரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த நவம்பர் - டிசம்பர் மாதங்களில் இதன் விலைகள் ஏற்கனவே உயர்ந்தள்ளதாகவும், இது அடுத்து வரும் மாதங்களிலும் நீடிக்கும் என்றும், தொழிற்சாலை நிர்வாகிகள் மற்றும் சந்தை வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.




செயற்கை நுண்ணறிவு மற்றும் உயர் செயல்திறன் கொண்ட கணினி தொழில்நுட்பங்களை அப்டேட் செய்வது அதிகரித்து வருவதால் மெமரி சிப்களுக்கான தேவை அதிகரித்து அதன் எதிரொலியாக விலை உயர்வு என்றஅபாயத்தைஸ்மார்ட்போன் தயாரிப்பாளர்கள் ஏற்கனவே சந்தித்து வருகிறார்கள்.

இதன் காரணமாக, தொலைக்காட்சி, ஸ்மார்ட்போன்கள், லேப்டாப் போன்றவற்றின் விலைகளும் உயரும் என்றும், இந்த விலை உயர்வு என்பது, காலாண்டுக்கு ஒருமுறை அல்லது மாதந்தோறும் என்ற அடிப்படையில் இருக்கலாம் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

அதாவது, கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்துடன் ஒப்பிட்டால், வரும் மார்ச் மாதத்துக்குள் மெமரி சிப் விலைகள் 120 சதவிகிதம் உயரக் கூடும் என்று அஞ்சபப்படுகிறது. எனவே, தொலைக்காட்சி, லேப்டாப் போன்றவற்றை வாங்க திட்டமிட்டுள்ளவர்கள் உடனடியாக வாங்குவது நலம் என்கிறார்கள் சந்தை நிபுணர்கள்.

ஏற்கனவே, இந்த விலை உயர்வின் எதிரொலியாக பல முன்னணி நிறுவனங்கள் சலுகைகள் மற்றும் தள்ளுபடிகளைக் குறைத்து வருகிறது. ஒரு பக்கம் விலை உயர்வு, விற்பனையைக் குறைக்கும். மெமரி சிப்களின் விலை உயர்வு, உற்பத்திச் செலவை அதிகரிக்கும். இந்த சுமையை நிறுவனங்கள் நுகர்வோர் மீதுதான் சுமத்துக்கும் நிலை ஏற்படும். எனவே, எங்கோ ஓரிடத்தில் மெமரி சிப்களின் தேவை அதிகரிப்பு, நேரடியாக மக்களை பாதிக்கும் நிலை உருவாகியிருக்கிறது.

## மாஞ்சா நூல் கழுத்தை அறுத்து சைக்கிளில் சென்ற சிறுவன் பலி


**புதுடெல்லி, ஜன.18:**

குஜராத் மாநிலம் சூரத் மாவட்டம் ஜஹாங்கீராபாத் பகுதியை சேர்ந்தவர் அமோல் போர்சி. இவரது மகன் ரஹனேஷ் (வயது 8).

இந்நிலையில், சிறுவன் ரஹனேஷ் தனது நண்பர்களுடன் அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் சைக்கிளில் சென்றுள்ளான். அப்போது, அப்பகுதியில் பட்டத்தில் உள்ள மாஞ்சா நூல் சிறுவன் ரஹனேசின் கழுத்தை அறுத்துள்ளது. இந்த சம்பவத்தில் சிறுவனுக்கு படுகாயம் ஏற்பட்டது.

உடனடியாக, சிறுவனை மீட்ட அப்பகுதி மக்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். அங்கு சிறுவனை பரிசோதித்த டாக்டர்கள் ரஹனேஷ் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக அறிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். குஜராத்தில் நேற்று மகர சங்கராந்தி பண்டிகை கொண்டாடப்பட்டது. இந்த பண்டிகையின் போது பட்டம் விடுவது வழக்கமாகும். அவ்வாறு விடப்பட்ட பட்டத்தில் இருந்து மாஞ்சா நூல் கழுத்தை அறுத்து ரஹனேஷ் உயிரிழந்துள்ளான் என போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## டெல்லியில் குளிர் அலை பரவல்; விமான சேவை பாதிப்பு



**புதுடெல்லி, ஜன.18:**

டெல்லியின் பல்வேறு நகரங்களிலும் கடந்த டிசம்பர் மாதத்தில் இருந்தே கடுமையான குளிர்ச்சி நிலவுகிறது. நகரின் பல்வேறு பகுதிகளிலும் குறைந்தபட்ச வெப்பநிலை 3 டிகிரி என்ற அளவுக்கு குறைந்து காணப்படுகிறது. பாலம், சப்தர்ஜங், டெல்லி-என்.சி.ஆர்., இந்தியா கேட் உள்ளிட்ட பல்வேறு நகரங்களும் இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன. இது தவிரவும் முக்கிய நகரங்களில் காற்று மாசும் அதிகரித்து உள்ளது. தெளிவற்ற வானிலையும் காணப்படுகிறது. இதனால், டெல்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்திற்கு வரும் சில விமானங்களின் வருகையில் தாமதம் ஏற்படும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதன்படி, டொரண்டோ, துபாய், மான்செஸ்டர், லண்டன், பாங்காக், பிளிசி, பாகு, கெய்ரோ, மிலன், கோபன்ஹேகன் போன்ற முக்கிய வெளிநாட்டு நகரங்களில் இருந்து டெல்லிக்கு வர கூடிய விமானங்கள் தாமதமாகி உள்ளன. இதனால் இடையூறுகள் ஏற்படக்கூடும் என்றும் பயணிகளுக்கு அறிவுறுத்தல் வெளியிடப்பட்டு உள்ளது.

## அமெரிக்கா - பாக். கூட்டு ராணுவப் பயிற்சி மத்திய அரசுக்கு பின்னடைவு! - காங்கிரஸ் தாக்கு!

**புதுடெல்லி, ஜன.18:**

அமெரிக்கா மற்றும் பாகிஸ்தான் இணைந்து கூட்டு ராணுவப்பயிற்சி மேற்கொண்டது, மத்திய அரசுக்கு மற்றொரு பின்னடைவு என காங்கிரஸ் கட்சி விமர்சித்துள்ளது.

கைபர் பக்துன்குவா மாகாணத்தின் பப்பி நகரத்தில் உள்ள பயங்கரவாத எதிர்ப்பு மையத்தில் நடைபெற்ற "இன்ஸ்பயர்ட் கேம்பிட் 2026" எனும் பயிற்சியில் அமெரிக்கா மற்றும் பாகிஸ்தான் ராணுவங்கள் இணைந்து கூட்டுப் பயிற்சிகளை மேற்கொண்டன.

இதனைத் தொடர்ந்து, இது பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசுக்கு மற்றொரு பின்னடைவு என காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கூறியுள்ளார்.

இதுகுறித்து, அவரது எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில் கூறப்பட்டதாவது:



"தன்னைத்தானே விஸ்வகுருவாக அறிவித்துக்கொண்டவரின் (பிரதமர் மோடி) ராஜதந்திரங்களுக்கு ஏற்பட்ட மற்றொரு பின்னடைவு.

பாகிஸ்தான் மற்றும் அமெரிக்க ராணுவ வீரர்கள் இணைந்து பயிற்சிகளை மேற்கொண்டதாக அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் பாகிஸ்தான் அசாதாரணமான கூட்டாளி, என கடந்த 2025 ஜூன் மாதம் அமெரிக்காவின் அப்போதைய ராணுவ உயர் அதிகாரி ஜெனரல் மைக்கல் குனிலா கூறியிருந்தார். பஹல்காம் தாக்குதல்களுக்கு முக்கிய காரணமாக இருந்து, வன்முறைகளைத்தூண்டக்கூடிய கருத்துகளைத் தெரிவித்த பாகிஸ்தானின் ராணுவத் தலைமைத் தளபதி ஆசிம் முனீரை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பலமுறை பாராட்டியுள்ளார்." எனக் கூறியுள்ளார்.

இத்துடன், இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைகள் தனது தலையீட்டால் நிறுத்தப்பட்டன என அதிபர் டிரம்ப் மீண்டும் கூறியுள்ளதையும் ஜெய்ராம் ரமேஷ் அவரது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## இந்தூரில் மாசடைந்த குடிநீரால் பாதிக்கப்பட்டோரை சந்தித்த ராகுல்!

**இந்தூர், ஜன.18:**

மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில், மாசடைந்த குடிநீரைக் குடித்த பலர் பலியான நிலையில், மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவோரை, காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

இந்தூரின் பகீரதபுரத்தில் நர்மதா ஆற்றிலிருந்து குழாய்கள் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீரை குடித்த உள்ளூர்வாழ் மக்களுக்கு, கடந்த ஒரு சில வாரங்களுக்கு முன் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். இதில் சிலர் சிகிச்சை பலனின்றி பலியாகினர். பாம்பே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களை ராகுல் காந்தி நேரில் சந்தித்து அவர்களது உடல்நலம் குறித்து கேட்டறிந்தார். தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்க



ப்பட்டுள்ளவர்களையும் நேரில் பார்த்தார். அவர்களது குடும்பத்தினரிடம், உடல்நலம் தேறி வருவது குறித்து கேட்டறிந்தார். சில மணி நேரம் அவர்களது குடும்பத்தினரிடம் ராகுல் காந்தி உரையாடினார்.

மேலும், மாசடைந்த குடிநீர் விநியோகிக்கப்பட்ட பகுதிகளுக்கும் சென்று, அங்கு பாதிக்கப்பட்ட குடும்பங்களையும் நேரில் சந்தித்து பேசுகிறார். பிறகு, இந்தூர் விமான நிலையம் சென்று அங்கிருந்து அவர் இன்று தில்லி திரும்புகிறார்.

இந்தூரின் பகீரதபுரத்தில் நர்மதா ஆற்றிலிருந்து குழாய்கள் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீரை குடித்த உள்ளூர்வாழ் மக்களுக்கு, கடந்த ஒரு சில வாரங்களுக்கு முன் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். இதில் 20 பேர் சிகிச்சை பலனின்றி பலியாகினர். ஏராளமானோர் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். சிலரது நிலை கவலைக்கிடமாக உள்ளது குறிப்பிடத்தக்கது. நாட்டின் சுகாதாரமான நகரம் என அறியப்படும் இந்தூரில் நேரிட்ட இந்த விவகாரம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், பாதிக்கப்பட்ட பகுதி மக்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்துள்ளார் ராகுல் காந்தி.

## இந்தியா-ஐரோப்பிய ஒன்றியம் பிரம்மாண்டமான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்: அமைச்சர் பியூஷ் கோயல்

**புதுடெல்லி, ஜன.18:**

இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் இடையிலான தடையற்ற வாத்தக ஒப்பந்தம் இறுதி கட்டத்தில் இருப்பதாக வெள்ளிக்கிழமை தெரிவித்த இந்திய வாத்தக துறை அமைச்சா பியூஷ் கோயல், எப்போதும் கண்டிராத அளவுக்கு பிரம்மாண்டமானதாக இருக்கும் என்றும் வா்ணித்தாா்.

இது தொடா்பாக செய்தியாளா்களிடம் அவா் கூறியதாவது: 2014-ஆம் ஆண்டு முதல், பாஜக தலைமையிலான என்டிஏ அரசு, ஆஸ்திரேலியா, பிரிட்டன், ஓமன், நியூசிலாந்து, ஐக்கிய அரபு அமீரகம், ஐரோப்பிய தடையற்ற வாத்தக கூட்டமைப்பு மற்றும் மோரீஷஸ் ஆகியவற்றுடன் 7 வாத்தக ஒப்பந்தங்களை இறுதி செய்துள்ளது.

இந்நிலையில், பிரான்ஸ், ஜொமனி, ஸ்பெயின், இத்தாலி, ஆஸ்திரியா, பெல்ஜியம், பின்லாந்து, அயா்லாந்து, நெதா்லாந்து, போா்ச்சுகல், போலந்து, டென்மாா்க், ஸ்வீடன் உள்பட 27 வளா்ந்த நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றியம் - இந்தியா ஒப்பந்தம், இதுவரை இறுதி செய்யப்பட்டதிலேயே மிக பிரம்மாண்டமானதாக இருக்கும். இரு தரப்பினருக்கும் பரஸ்பர நன்மையை இது பயக்கும். மேலும், இந்திய ஏற்றுமதித் துறைகளுக்கு இது சிறந்ததாக அமையும் என்றாா்.

இந்தியாவின் 77-ஆவது குடியரசு தின கொண்டாட்டங்களில் தலைமை விருந்தினா்களாக ஐரோப்பிய கவுன்சில் தலைவா் அன்டோனியோ லூயிஸ் சாண்டோஸ் டகோஸ்டா மற்றும் ஐரோப்பிய ஆணையத் தலைவா உா்சுலா வான் டொ லேயன் ஆகியோா் பங்கேற்க உள்ளனா். அதன் தொடா்ச்சியாக ஜன.27-ஆம் தேதி இந்த ஒப்பந்தத்தின் பேச்சுவாா்த்தை முடிவு அறிவிக்கப்படும் என்று எதிா்பாா்க்கப்படுகிறது.

இதை உறுதி செய்த வாா்த்தகத் துறை செயலா ராஜேஷ் அகாவால் கூறுகையில், இந்த மாத இறுதியில் ஒப்பந்தத்திற்கான அறிவிப்பு வெளியாவதற்கு முன்பு, எஞ்சிய சிக்கல்களைத் தீா்ப்பதற்கான பேச்சுவாா்த்தைகள் தற்போது நடைபெற்று வருவகிறது என தெரிவித்தாா்.

அமெரிக்காவின் அதிகப்படியான வரிகள் காரணமாக ஏற்பட்ட உலகளாவிய வா்த்தக இடையூறுகளின் பின்னணியில் இந்த ஒப்பந்தம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இதில் ஜவுளி, தோல், கைத்தறி மற்றும் சில பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் போன்ற அதிக தொழிலாளா்களை ஈடுபடுத்தும் துறைகளுக்கு வரி இல்லாத சந்தை அணுகலை இந்தியா விரும்புகிறது. இதற்கிடையில், ஐரோப்பிய ஒன்றியம், காா்கள், ஒயின்கள் மற்றும் புதிய உயா் தொழில்நுட்பப் பொருள்களுக்கான இந்தியச் சந்தைகளில் அதிக அணுகலைக் கோருகிறது.

இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் சுமாா் 17 சதவீதத்தை ஐரோப்பிய ஒன்றியம் கொண்டுள்ளது. அதே நேரத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு 9 சதவீதமாக உள்ளது.

2024-25 நிதியாண்டில், இரு தரப்பு இடையிலான வாத்தகத்தின் மதிப்பு 136.53 பில்லியன் அமெரிக்க டாலராக (ரூ.12.38 லட்சம் கோடி) இருந்தது. இதில் இந்தியா 75.85 பில்லியன் அமெரிக்க டாலா் (ரூ.6.88 லட்சம் கோடி) மதிப்புள்ள பொருள்களை ஏற்றுமதி செய்தது. 60.68 பில்லியன் அமெரிக்க டாலா் (ரூ.5.5 லட்சம் கோடி) மதிப்புள்ள பொருள்களை இறக்குமதி செய்தது.

## கேரளாவில் லாட்டரியில் ரூ.1 கோடி பரிசு வென்றவர் கடத்தல்: போலீசார் வலைவீச்சு

**கண்ணூர், ஜன.18:**

கேரளாவின் கண்ணூர் மாவட்டம் பரவூரை சேர்ந்த சாதிக் (வயது46) என்பவருக்கு கடந்த மாதம் 30-ந்தேதி லாட்டரியில் ரூ.1 கோடி பரிசு விழுந்தது. அந்த பணம் கிடைப்பதற்கு தாமதம் ஆகும் என்பதாலும், கணிசமான தொகை வரியாக பிடிக்கப்படும் என்பதாலும் தனது டிக்கெட்டை அதிக தொகைக்கு விற்பனை செய்ய சாதிக் முயன்றார். இதையறிந்த கும்பல் ஒன்று அவரிடம் இருந்து அதிக தொகைக்கு லாட்டரி டிக்கெட்டை பெற்றுக்கொள்வதாக கூறி சாதிக்கை பரவூர் நகருக்கு வரவழைத்தனர். அதை நம்பி தனது நண்பருடன் சாதிக் அங்கு சென்றார். அப்போது ஒரு வாகனத்தில் வந்த அந்த கும்பல் இருவரையும் வாகனத்தில் வலுக்கட்டாயமாக ஏற்றிக்கொண்டு சென்றனர். சிறிது தூரம் சென்றபிறகு சாதிக்கின் நண்பரை இறக்கி விட்ட அவர்கள், சாதிக்கை கடத்திச்சென்றனர். பின்னர் அந்த லாட்டரி டிக்கெட்டை பறித்துக்கொண்டு இரவு 11.30 மணியளவில் சாதிக்கை இறக்கி விட்டனர். இதைத்தொடர்ந்து சாதிக் தனக்கு நேர்ந்த துயரம் குறித்து போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் வழக்குப்பதிவு செய்த போலீசார் அந்த கும்பலை சேர்ந்த ஒருவரை கைது செய்தனர். மற்றவர்களை வலைவீசி தேடி வருகின்றனர்.

## கோழிக்கோடு கடற்கரையில் கஞ்சா வைத்திருந்த நபர் கைது

**திருவனந்தபுரம், ஜன.18:**

கேரள மாநிலம் கோழிக்கோடு மாவட்டத்தில் உள்ள பிரபலமான கடற்கரைக்கு தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். இந்நிலையில், கோழிக்கோடு கடற்கரையில் உள்ள சாலையில் ஒரு நபர் கஞ்சாவுடன் உறங்கிக்கொண்டிருப்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், முகமது ரபிக் (வயது 39) என்ற நபரை கைது செ ய்தனர். அவரிடமிருந்து 300 கிராம் எடையுள்ள கஞ்சாவையும் பறிமுதல் செய்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சட்டவிரோத வாக்கி-டாக்கி விற்பனை; மெட்டா, அமேசான் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு மத்திய அரசு அபராதம்

**புதுடெல்லி, ஜன.18:**

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019 மற்றும் தொலைத்தொடர்பு சட்டங்களை மீறி, அங்கீகரிக்கப்படாத வாக்கி-டாக்கிகளை சட்டவிரோதமாக விற்பனை செய்ததற்காக, மத்திய அரசின் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் (CCPA), எட்டு நிறுவனங்களுக்கு எதிராக இறுதி உத்தரவுகளை பிறப்பித்து, மொத்தம் ரூ.44 லட்சம் அபராதம் விதித்துள்ளது. முன்னதாக இது குறித்து ஜியோமார்ட், சிமியா, டாக் ப்ரோ, மீஷோ, மாஸ்க்மேன் டாய்ஸ், டிரேட்இந்தியா, அன்ட்ரிக்ஷ் டெக்னாலஜிஸ், வர்தான்மார்ட், இந்தியாமார்ட், மெட்டா(பேஸ்புக்), பிளிப்கார்ட், கிருஷ்ணா மார்ட் மற்றும் அமேசான் ஆகிய 13 ஆன்லைன் வணிக நிறுவனங்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இந்த தளங்களில் 16,970-க்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்படாத பொருட்களின் பட்டியல்கள் அடையாளம் காணப்பட்டதை தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனை தொடர்ந்து, நுகர்வோர் உரிமைகளை மீறியதற்காக மீஷோ, மெட்டா, பிளிப்கார்ட் மற்றும் அமேசான் ஆகிய 4 நிறுவனங்களுக்கு தலா ரூ.10 லட்சமும், சிமியா, ஜியோமார்ட், டாக் ப்ரோ மற்றும் மாஸ்க்மேன் டாய்ஸ் ஆகிய 4 நிறுவனங்களுக்கு தலா ரூ.1 லட்சமும் அபராதம் விதிக்கப்பட்டதாக நுகர்வோர் விவகார செயலாளர் நிதி காரே தெரிவித்துள்ளார்.

## ஐதராபாத்தில் வெப்பக்காற்று பலூன் திருவிழா தொடக்கம்

**ஐதராபாத், ஜன.18:**

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க கோல்கொண்டா கோட்டை அருகே உள்ள கோல்ப் விளையாட்டு மைதானத்தில், வெப்பக்காற்று பலூன் திருவிழா இன்று தொடங்கியது. இந்த விழாவை மாநிலம் சுற்றுலா மற்றும் கலாசாரத் துறை மந்திரி ஜூபள்ளி கிருஷ்ண ராவ் தொடங்கி வைத்தார். தொடர்ந்து அவர் வெப்பக்காற்று பலூனில் ஏறி சுமார் 13 கி.மீ. தூரத்திற்கு ஒன்றரை மணி நேரம் பயணம் செய்தார். கோல்கோண்டா கோல்ப் மைதானத்தில் தொடங்கி, அப்பாஜிகுடா பகுதி வரை வெப்பக்காற்று பலூனில் பயணம் செய்த அவர், அங்குள்ள நிலப்பரப்பை வான்வழியாக பார்வையிட்டார். இந்த பயணத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஜூபள்ளி கிருஷ்ண ராவ், "இது ஒரு மறக்க முடியாத அனுபவம். இந்த வெப்பக்காற்று பலூன் திருவிழா மாநிலத்தின் சுற்றுலாத் துறையில் முக்கியமான அத்தியாயம்" என்று குறிப்பிட்டார். இந்த பலூன் திருவிழா, 18-ந்தேதி வரை நடைபெற உள்ளது. இதில் சர்வதேச தரத்திலான 15 வெப்பக்காற்று பலூன்கள் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கடந்த ஆண்டு சாலை விபத்துகளில் 649 பாதசாரிகள் உயிரிழப்பு; 1,738 பேர் காயம்!

**புதுடெல்லி,ஜன.18:**

2025-ஆம் ஆண்டில் 2,000- க்கும் மேற்பட்ட சாலை விபத்துகளில் 649 பாதசாரிகள் உயிரிழந்ததாகவும், 1,738 பேர் காயமடைந்ததாகவும் தில்லி போக்குவரத்துக் காவல்துறை வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளது.

இதுநகரத்தின்சாலைகளில்கால்நடையாகபயணிக்கும் பயணிகள் எவ்வளவு பாதிக்கப்படக்கூடியவர்கள் என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. போக்குவரத்துக் காவல்துறை புள்ளிவிவரங்களின்படி, இதுபோன்ற பாதசாரி இறப்புகளில் 771 விபத்துகளில் 330 இறப்புகள் கடந்த ஆண்டு அடையாளம் காணப்படவில்லை. தனியார் கார்கள் இரண்டாவது பெரிய பங்களிப்பை அளித்தன. 477 விபத்துகளில் 92 பாதசாரிகள் இறந்தனர். அதைத் தொடர்ந்து 472 விபத்துகளில் இரு சக்கர வாகனங்கள் ஈடுபட்டன. இதன் விளைவாக 75 பாதசாரிகள் இறந்தனர்.

## சீனா: பள்ளியில் நோரா வைரஸ் பரவல்; 100-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பாதிப்பு

**பெய்ஜிங், ஜன.18:**

சீனாவின் குவாங்டாங் மாகாணத்தின் போஷான் நகரில் உள்ள உயர்நிலை பள்ளி ஒன்றில் படித்து வரும் மாணவர்களில் 100-க்கும் மேற்பட்டோருக்கு நோரா வைரஸ் தொற்று ஏற்பட்டு உள்ளது. இதனை தொடர்ந்து அவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் அனைவரும் சீரான நிலையில் உள்ளனர். பெரிய அளவில் பாதிப்பு இல்லை என தகவல் தெரிவிக்கின்றது. இதனை தொடர்ந்து பள்ளி வளாகத்தில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு, சுகாதார கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சீனாவில் பொதுவாக அக்டோபர் முதல் மார்ச் வரையிலான காலகட்டத்தில் இந்த தொற்று பரவல் அதிகரித்து காணப்படும். இது அதிக தொற்றும் தன்மை கொண்டதுடன், உலகளவில் சுகாதார பாதிப்புகளை ஏற்படுத்த கூடியது. ஆண்டுதோறும் கோடிக்கணக்கானோர் இதனால் பாதிக்கப்படுகின்றனர்.

கடுமையான வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கை இது ஏற்படுத்தும். 5 வயதுக்குட்பட்ட 20 கோடி குழந்தைகள் உள்பட 68.5 கோடி பேருக்கு ஆண்டுதோறும் பாதிப்பு ஏற்படுகிறது என தகவல் தெரிவிக்கின்றது.

## பாகிஸ்தானில் கால்வாய்க்குள் லாரி கவிழ்ந்து 14 பேர் பலி

**லாகூர், ஜன.18:**

பாகிஸ்தான் நாட்டின் இஸ்லாமாபாத் நகரை சேர்ந்த குடும்பத்தினர், உறவினர்கள் 23 பேர் நேற்று மாலை பஞ்சாப் மாகாணம் பைசலாபாத்தில் உறவினரின் இறுதிச்சடங்கு நிகழ்ச்சியில் பங்கேற்க லாரியில் புறப்பட்டனர்.

இந்நிலையில், பஞ்சாப் மாகாணம் சர்கோதா மாவட்டம் கோட் மாமின் பகுதியில் உள்ள பாலத்தின் மேல் இன்று அதிகாலை சென்றபோது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த லாரி பாலத்தின் தடுப்புகளில் மோதி கால்வாய்க்குள் கவிழ்ந்தது. இந்த கோர விபத்தில் லாரியில் பயணித்த 6 குழந்தைகள் உள்பட 14 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். எஞ்சிய 9 பேர் படுகாயமடைந்தனர். இந்த விபத்து குறித்து தகவலறிந்த போலீசார், விரைந்து சென்று படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மேலும், உயிரிழந்த 14 பேரின் உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். கடும் பனிமூட்டம் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டதாக போலீசார் நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஈரான்: 800 பேரின் தூக்கு தண்டனை ரத்து; டிரம்ப் வரவேற்பு

**தெஹ்ரான், ஜன.18:**

வன்முறையில் ஈடுபட்டு பொதுசொத்துகளை சூறையாடுபவர்கள், கடவுளுக்கு எதிராக போர் செய்பவர்கள் என அரசு கூறியது. இதனால், அந்நாட்டு தண்டனை சட்டத்தின்படி, கைது செய்யப்பட்டவர்களுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்படலாம் என்ற அச்சம் எழுந்தது.

இந்த சூழலில், அந்நாட்டு வெளியுறவு துறை மந்திரி சையது அப்பாஸ் அராக்சி கூறும்போது, போராட்டக்காரர்களை தூக்கில் போடும் திட்டம் எதுவும் இல்லை என கூறினார். இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் செய்தியாளர்களிடம் கூறும்போது, ஈரானில் 800 பேரை நேற்று தூக்கில் போட திட்டமிடப்பட்டு இருந்தது. அதனை அவர்கள் ரத்து செய்துள்ளனர். இதனை நான் பெரிய அளவில் மதிக்கிறேன் என கூறினார். கடந்த 2 தினங்களுக்கு முன் டிரம்ப் கூறும்போது, போராட்டக்காரர்களை படுகொலை செய்வது நிறுத்தப்பட்டு விட்டது என தகவல் கிடைத்துள்ளது என்று கூறினார். பாதுகாப்பு சூழலை கவனத்தில் கொண்டு ஈரானை விட்டு வெளியேறுங்கள் என இந்தியர்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

## ஆப்பிரிக்காவில் கனமழை, வெள்ளம்; 100 பேர் பலி

**ஜோகன்ஸ்பெர்க், ஜன.18:**

ஆப்பிரிக்காவில் உள்ள ஜிம்பாப்வே, மொசாம்பிக்யூ, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் பருவமழை தீவிரமடைந்துவருகிறது. கனமழை காரணமாக இந்நாடுகளில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் லட்சக்கணக்கான பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், கனமழை, வெள்ளத்தில் சிக்கி ஆப்பிரிக்காவில் உள்ள இந்த 3 நாடுகளிலும் மொத்தம் 100 பேர் உயிரிழந்துள்ளனர். அதன்படி, தென் ஆப்பிரிக்காவில் 19 பேரும், ஜிம்பாப்வேயில் 70 பேரும், மொசாம்பிக்யூவில் 11 பேரும் உயிரிழந்துள்ளனர். இந்த கனமழை, வெள்ளத்தில் சிக்கி 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

# வெனிசுலாவிடம் இருந்து ரூ.47 ஆயிரம் கோடி மதிப்பிலான எண்ணெய் கிடைக்கும் - டிரம்ப்

**வாஷிங்டன், ஜன.18:**

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ கைது, நாடு கடத்தல் நடவடிக்கைக்கு பின்னர் அந்நாட்டுடன் எண்ணெய் வர்த்தகத்தில் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது. பிற வளங்கள் தொடர்பாக ஒப்பந்தம் ஏற்படுத்தி கொள்ளும் வேலைகளிலும் அமெரிக்கா ஈடுபட்டு உள்ளது.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் செய்தியாளர்களிடம் கூறும்போது, வெனிசுலாவிடம் இருந்து 5 கோடி எண்ணெய் பீப்பாய்கள் அமெரிக்காவுக்கு வந்து கொண்டிருக்கின்றன. அவற்றை நமக்கு வழங்க வெனிசுலா முன்வந்துள்ளது. அவற்றின் மதிப்பு ரூ.47,186 ஆகும் என்றார்.



தொடர்ந்து அவர், வெனிசுலாவின் இடைக்கால ஜனாதிபதியாக டெல்சி ரோட்ரிக்ஸ் பதவியேற்று கொண்ட பின்னர், அந்நாட்டுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே சிறந்த நட்புறவு ஏற்பட்டு உள்ளது. நிறைய அழுத்தத்தில் இருந்து அந்நாடு விடுவிக்கப்பட்டு உள்ளது என்று கூறியுள்ளார்.

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவை போதை பொருள் பயங்கரவாதி என்றும் அந்நாட்டில் இருந்து அமெரிக்காவுக்குள் அபாயகர போதை பொருட்கள் கடத்தப்படுகின்றன என்றும் டிரம்ப் கடுமையான குற்றச்சாட்டுகளை கூறினார்.

இந்த நிலையில், நிக்கோலஸ் மதுரோவும், அவருடைய மனைவி சிலியா புளோரசும் அமெரிக்க ராணுவ வீரர்களால் இந்த மாத தொடக்கத்தில், கைது செய்யப்பட்டு வெனிசுலாவில் இருந்து நாடு கடத்தப்பட்டனர்.

இதனை தொடர்ந்து, நிக்கோலஸ், அவருடைய மனைவி புளோரஸ் மீது நியூயார்க் நகரில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு உள்ளது. அவர்கள் விரைவில் அமெரிக்க கோர்ட்டுகளில், அமெரிக்க மண்ணில், அமெரிக்க நீதியை பெறுவார்கள் என அமெரிக்க அட்டர்னி ஜெனரல் பமீலா போண்டி கூறினார். இது உலக நாடுகளால் பரபரப்பாக பார்க்கப்படுகிறது.

எண்ணெய் வளத்திற்காக வெனிசுலா குறி வைக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டும் டிரம்புக்கு எதிராக எழுந்தது.

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ கைது செய்யப்பட்ட பின்னர், இந்த மாத தொடக்கத்தில், நாட்டின் இடைக்கால ஜனாதிபதியாக டெல்சி எலோய்னா ரோட்ரிக்ஸ் முறைப்படி பதவியேற்று கொண்டார்.

## ஈரான் அரசுக்கு நன்றி தெரிவித்த அதிபர் டிரம்ப்!

**வாஷிங்டன், ஜன.18:**

ஈரான் நாட்டில், திட்டமிடப்பட்டிருந்த 800 சிறைக் கைதிகளின் மரண தண்டனையை ரத்து செய்ததற்கு அந்நாட்டு அரசுக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நன்றி தெரிவித்துள்ளார்.



ஈரானின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் மற்றும் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வைக் கண்டித்து லட்சக்கணக்கான மக்கள் நாடு முழுவதும் மாபெரும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்தப் போராட்டத்தில், ஈரானின் அரசு அலுவலகங்கள், கட்டடங்கள், வழிபாட்டுத் தலங்கள் ஆகியவை தீ வைத்து கொளுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும், போராட்டக்காரர்களுக்கு எதிராக ஈரான் அரசு கடும் நடவடிக்கைகளைமேற்கொண்டு வருகின்றது.

இதில், அரசுப்படைகளுக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையிலான மோதல்களில் இதுவரை 2,000-க்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்துடன், வன்முறையில் ஈடுபட்டு கைதான போராட்டக்காரர்களுக்குத் தொடர்ந்து மரண தண்டனை விதிக்கப்படுவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இந்த நிலையில், கடந்த வியாழக்கிழமை (ஜன. 15) திட்டமிடப்பட்டிருந்த சுமார் 800 சிறைக் கைதிகளின் மரண தண்டனைகள் ரத்து செய்யப்பட்டதற்கு, அமெரிக்க அதிபர் டிரம்ப் ஈரான் அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அதிபர் டிரம்ப் அவரது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டதாவது:

“நேற்று திட்டமிடப்பட்ட தூக்குத் தண்டனைகள் (800 பேர்) அனைத்தையும் ஈரானின் தலைமை ரத்து செய்துள்ளதை நான் பெரிதும் மதிக்கிறேன். நன்றி!” எனக் கூறப்பட்டுள்ளது.

முன்னதாக, ஈரானில் போராட்டக்காரர்கள் மீதான வன்முறைகள் தொடர்ந்தால் அமெரிக்கா ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளும் என அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## வங்காளதேசம்: பெட்ரோலுக்கு காசு கேட்ட இந்து ஊழியர் கொடூர கொலை

**டாக்கா, ஜன.18:**

வங்காளதேசத்தில் மாணவர் போராட்டம் தொடர்ச்சியாக, முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா ராஜினாமா செய்து விட்டு நாட்டை விட்டு வெளியேறினார். இந்தியாவில் தஞ்சமடைந்து உள்ளார். இந்த நிலையில், பேராசிரியர் யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசில் இந்துக்களுக்கு எதிரான தாக்குதல் கடந்த டிசம்பர் மத்தியில் அதிகரிக்க தொடங்கியது.






இதற்கு இந்தியா தரப்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டு வருகிறது. எனினும், கும்பல் தாக்குதல் குறையாமல் தொடர்ந்து வருகிறது. இதில், மருந்து கடை உரிமையாளர், தொழிலதிபர்கள், ஆலை பணியாளர், வாலிபர்கள் என இந்துக்கள் இலக்காக கொள்ளப்பட்டனர். பலர் கொடூர கொலை செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், ராஜ்பாரி மாவட்டத்தில் கோவாலேண்டா மோர் பகுதியில் கரீம் என்ற பெயர் கொண்ட எரிபொருள் நிலையத்தில் கார் ஒன்று நேற்று அதிகாலை 4.30 மணியளவில் வந்துள்ளது. அதில் இருந்தவர்கள் பெட்ரோல் போட்டு விட்டு காசு தராமல் செல்ல முயன்றனர்.

ஏறக்குறைய ரூ.3 ஆயிரம் வரை பணம் கொடுக்காமல் தப்ப முயன்றனர். இதனால், ஊழியர் ரிபோன் சஹா (வயது 30) என்ற இந்து வாலிபர் காரை மறித்து, பணம் கொடுத்து விட்டு செல்லுங்கள் என கூறியுள்ளார்.

ஆனால், அவர்கள் காரை அவர் மீது ஏற்றி, கொலை செய்து விட்டு தப்பினர். இந்த சம்பவத்தில் அவர் படுகாயமடைந்து பலியானார்.

இதுதொடர்பாக விசாரணை நடத்திய போலீசார், சொகுசு கார் உரிமையாளர் அபுல் ஹாசிம் (வயது 55) மற்றும் ஓட்டுநர் கமல் உசைன் (வயது 43) ஆகியோரை கைது செய்து உள்ளனர். ஹாசிம், கான்டிராக்டராக தொழில் செய்து வருகிறார். வங்காளதேச தேசியவாத கட்சியின் முன்னாள் பொருளாளராகவும், ஜுபோ தல் மாவட்ட முன்னாள் தலைவராகவும் இருந்துள்ளார்.

## தமிழ் மக்களின் மிக முக்கியமான கலாசாரம் தைப் பொங்கல் விழா



**யாழ்ப்பாணம், ஜன.18:**

பொங்கல் பண்டிகையையொட்டி இலங்கை அதிபர் அனுர குமார திசநாயகே தமிழர்களின் கலாசார தலைநகராக விளங்கும் யாழ்ப்பாணத்துக்கு சென்றார். அங்கு தமிழர்கள் மத்தியில் அவர் பேசுகையில், தமிழ் மக்களின் மிக முக்கியமான கலாசார தினமான தைப் பொங்கல் விழாவில் பங்கேற்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. எந்த மொழியைப் பேசினாலும், எந்த மதத்தைப் பின்பற்றினாலும் அனைத்துப் பிரஜைகளும் கௌரவத்துடன் வாழக்கூடிய இனவாதமற்ற, தேசிய ஒருமைப்பாடு நிறைந்த வளமான நாட்டை கட்டியெழுப்புவதே அரசாங்கத்தின் நோக்கம்.

இங்கே இருக்கும் பலரும் கடந்த தேர்தலில் எங்கள் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்தது எனக்கு தெரியும். முதல் முறையாக நாங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் வெற்றி பெற்றோம். அதன் பொருள், நீங்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள் என்பதாகும். நீங்கள் வைத்திருக்கும் இந்த நம்பிக்கைக்கு சிறிதும் துரோகம் செய்ய நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என உங்களுக்கு உறுதியளிக்கிறேன். இனவெறி இல்லாத, தேசிய ஒற்றுமை வாய்ந்த ஒரு நாட்டை (இலங்கை) உருவாக்குவோம். அத்துடன் உங்கள் குழந்தைகளுக்கு சிறந்த ஒரு எதிர்காலத்தை ஏற்படுத்துவோம். ஒவ்வொருவரும் மகிழ்ச்சியாக வாழும் ஒரு நாட்டை உருவாக்குவோம். இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்ற அயராது உழைப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

## வங்கியில் கொள்ளை முயற்சி; பயங்கரவாதிகளை சுட்டு வீழ்த்திய பாதுகாப்பு படை

**கராச்சி, ஜன.18:**

பாகிஸ்தானின் தென்மேற்கே பலுசிஸ்தான் மாகாணத்தில் கரன் நகரில் 2 வங்கிகள் மற்றும் ஒரு காவல் நிலையத்தின் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அவர்கள் சில ஊழியர்களை பணய கைதிகளாக சிறை பிடித்தனர். இதனால், அந்த பகுதியில் பதற்றம் தொற்றி கொண்டது.

இதுபற்றி தகவல் அறிந்ததும் பாகிஸ்தான் பாதுகாப்பு படையினர் அதிரடியாக நடவடிக்கை எடுத்தனர். இதில், 3 தனித்தனி துப்பாக்கி சண்டைகளில் 12 பயங்கரவாதிகள் சுட்டு கொல்லப்பட்டனர்.

இதன்பின்னர் பயங்கரவாதிகளால் பணய கைதிகளாக சிறை பிடிக்கப்பட்ட ஊழியர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். இந்த தாக்குதல் பாகிஸ்தானில் நடப்பு ஆண்டின் மிகப்பெரிய பயங்கரவாத தாக்குதல் என படையினர் தெரிவித்தனர்.

## உகாண்டா தேர்தலில் வெற்றி: தொடர்ந்து 7வது முறையாக அதிபராகும் யோவரி முசவேனி...!

**கம்பாலா, ஜன.18:**

கிழக்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு உகாண்டா. இந்நாட்டின் அதிபராக செயல்பட்டு வருபவர் யோவரி முசவேனி (வயது 81).

இவர் தேசிய எதிர்ப்பு இயக்கம் என்ற கட்சியின் தலைவர் ஆவார். யோவரி முசவேனி கடந்த 1986ம் ஆண்டு முதல் 40 ஆண்டுகளாக உகாண்டாவின் அதிபராக செயல்பட்டு வருகிறார்.

இந்நிலையில், உகாண்டா அதிபர் தேர்தல் நேற்று முன் தினம் நடைபெற்றது. இதில், யோவரி முசவேனி மீண்டும் போட்டியிட்டார். அவரை எதிர்த்து எதிர்க்கட்சி தலைவரான பாபி ஒயின் போட்டியிட்டார். இந்த தேர்தலில் யோவரி முசவேனி வெற்றிபெற்றதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. யோவரி முசவேனி 71.65 சதவீத வாக்குகள் வெற்றிபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தொடர்ந்து 7வது முறையாக யோவரி முசவேனி உகாண்டா அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அதேவேளை தேர்தலில் முறைகேடு நடைபெற்றுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் பாபி ஒயின் குற்றஞ்சாட்டி வருகிறார்.

# ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தம்: குட்டெரெஸ் வலியுறுத்தல்

**வாஷிங்டன், ஜன.18:**

ஐ.நா.பாதுகாப்புகவுன்சிலில் சீர்திருத்தங்கள் தேவை என 2026-ஆம் ஆண்டுக்கான தனது முன்னுரிமைகள் குறித்த உரையியில் அமைப்பின் பொதுச்செயலர் அன்டோனியோ குட்டெரெஸ் வலியுறுத்தினார்.



மேலும், தெற்கில் உள்ள சக்திவாய்ந்த நாடுகள் ஐ.நா. அமைப்புகளுக்கு தலைமை தாங்க வேண்டும். இல்லையெனில், இன்று பதவிகளைப் பற்றிக்கொண்டிருப்பவர்கள் நாளை அதற்கான விலையைக் கொடுக்க நேரிடும் என அவர் எச்சரித்தார். 193 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா. பொதுச் சபையில் வியாழக்கிழமை உரையாற்றிய அதன் பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ் கூறியதாவது: 1945-ஆம் ஆண்டின் சிக்கல் தீர்க்கும் முறைகள் 2026-ஆம் ஆண்டின் சிக்கல்களைத் தீர்க்காது. வளர்ந்த பொருளாதாரங்களின் உலகலாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தி சுருங்கி வருகிறது. ஆனால், வளர்ந்து வரும் பொருளாதாரங்களின் உற்பத்தி அளவு அதிகரித்து வருகிறது.

ஒவ்வொருநாளும், தெற்கில் நடைபெறும் வர்த்தகம் உலகின் வடக்கில் நடைபெறும் வர்த்தகத்தின் அளவை விட முன்னேறிச் செல்கிறது. மாறிவரும் இந்த உலகை ஐ.நா. அமைப்பு பிரதிபலிக்க வேண்டும். சர்வதேச நிதி மற்றும் வர்த்தக நிறுவனங்களைச் சீர்திருத்துவது முக்கியமானது மட்டுமல்ல, அத்தியாவசியமானதும் ஆகும். இது பாதுகாப்பு கவுன்சிலுக்கும் பொருந்தும். எனவே, தெற்கில் உள்ள சக்திவாய்ந்த நாடுகள் ஐ.நா. அமைப்புகளுக்கு தலைமை தாங்க வேண்டும். இல்லையெனில், இன்று இந்த பதவிகளைப்பற்றிக்கொண்டிருப்பவர்கள் நாளை அதற்கான விலையைக் கொடுக்க நேரிடும் என தெரிவித்தார்.

இதுகுறித்து சபையின் முன்னேற்பாடு அமர்வில் ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதித்துவத்தின் ஆலோசகர் எல்டோஸ் மேத்யூ புன்னூஸ் கூறியதாவது: அமைதி மற்றும் பாதுகாப்புப் பிரச்னைகளில் ஐ.நா.வால் உறுதியான நடவடிக்கை எடுக்க முடியாதது, அதன் சட்டப்பூர்வத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை குறித்து கேள்விகளை எழுப்புகிறது. ஐ.நா.வின் வரவிருக்கும் 80-ஆவது ஆண்டு நிறைவு, பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர மற்றும் நிரந்தரமற்ற பிரிவுகளின் விரிவாக்கத்துடன், சீர்திருத்தப்பட்ட பலதரப்பு வாதத்திற்கான கூட்டு முயற்சியால் குறிக்கப்பட வேண்டும் என தெரிவித்தார்.

இந்தியா நீண்ட காலமாக ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தங்களை வலியுறுத்தி வருகிறது. 1945-இல் 5 நிரந்தர மற்றும் 10 நிரந்தரமற்ற உறுப்பினர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த அமைப்புஇன்றையஉலகிற்குப் பொருத்தமற்றதுஎன்றுஇந்தியா தொடர்ந்துவாதிடுகிறது. நிரந்தர மற்றும் நிரந்தரமற்ற இடங்கள் என இரண்டிலும் சபையை விரிவுபடுத்தவேண்டும்என்றும், அமைப்பில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் கிடைக்க முழு உரிமை உண்டு என்றும் வலியுறுத்துகிறது.